இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 234 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 02 செவ்வாய்க்கிழமை 18.07.2017

## ஆஸி. அயலுறவு அமைச்சர் ஜூலி இலங்கை வருகிறார்



கொழும்பு, ஜூலை18
ஆஸ்திரேலிய அயலுறவு அமைச்சர் ஜூலி பிசப் இந்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.
இலங்கை வரும் அவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. » 25

### வித்தியா படுகொலை:
## தீர்ப்பாயத்தின் அமர்வு இன்று மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கு 3 மேல் நீதி மன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயத் » 23

## மாகாண சபை சிறப்பு அமர்வின் முன்னர் விக்கி–சம்பந்தன் சந்திப்பு நடக்காது

யாழ்ப்பாணம், ஜூலை 18
வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வுக்கு முன்னதாக முதலமைச்சர் » 23

## உள்ளூராட்சி திருத்தச் சட்டம் அடுத்த வாரம் சபைக்கு வரும்

அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அரசின் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. குறித்த ஒழுங்கு விதிகளைநிறைவேற்றுவதற்காக அந்தச் சட்ட வரைவு அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அரசதலைவர் » 25

## டில்லி போன்று கொழும்பிலும் விவசாயிகள் கோவணப் போர்

26ஆம் திகதி நடத்தத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 18
தலைநகர் கொழும்பில் எதிர்வரும் 26ஆம் திகதி கோவணத்துடன் ஆர்ப்பாட்டமொன்றை » 25

## சுகாதாரத் தொண்டர் பிரச்சினை கொழும்பு மாநாட்டில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 18
நிரந்தர நியமனம் கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்களின் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் 23 ஆம் திகதி, கொழும்பில் நடைபெறும் மாகாணச் சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் » 25

### யார் அடுத்த அமைச்சர் ?
# ரெலோவுக்குள் குழப்ப நிலை

டெனீஸ்வரனுக்குப் பதிலாக அமைச்சராக விந்தனை நியமிப்பதற்கு கட்சிக்குள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்குப் பதிலாக ரெலோவின் சார்பில் அமைச்சரவைக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தை நியமிப்பதற்கு அந்தக் கட்சிக்குள் ளேயேஎதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதனால் அந்தக் கட்சியினுள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சரவையில் ரெலோவின் சார்பில், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பா.டெனீஸ்வரன் 2013ஆம் ஆண்டு போக்குவரத்து, மீன்பிடி, வர்த்தக வாணிப, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டார். வடக்கு மாகாண சபையில் அண்மையில் எழுந்த சர்ச்சையில், முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பா.டெனீஸ்வரன் கையெழுத்திட்டார். அதனால்அவரைத்தமது கட்சியிலிருந்து விலக்குவதாக ரெலோ » 25

## மைத்திரிக்கும் ரணிலுக்கும் மீண்டும் அழைப்பாணை

கொழும்பு, ஜூலை 18
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை நீதிமன்றத்தில் முன்னிலையாகு » 04

## 11 தமிழர்கள் கடத்தல் குறித்து பொய் உரைக்கிறார் வீரவன்ச

பெற்றோர்கள் விசனம்

“கடற்படையினரின் சாட்சியங்களின் அடிப்படையில் தான் கொமடோர் தசநாயக்க கைது செய்யப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறுவதைப் போன்று எங்கள் பிள்ளைகளுக்கு விடுதலைப் புலிகளுடன் எந்தத் தொடர்புமில்லை. அரசி » 25

### தொழிலாளி சுட்டுக்கொலை:
## பொலிஸார் மீது ஆணைக்குழு கடும் சாடல்

கொழும்பு, ஜூலை 18
கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது தொழிலாளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில்பொலிஸாரைக் கடுமையாக விமர்சித்துள்ள அரச தலைவர்ஆணைக் » 25

## சீமெந்து ஆலை இரும்புகளை விற்க அனுமதிக்கவேயில்லை

அரச தலைவர் ஆணைக்குழுவிடம் அடித்துக் கூறினார் கோத்தபாய



கொழும்பு, ஜூலை 18
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின், இயந்திரங்களை அகற்றுவதற்தோ அவற்றைப் பழைய இரும்புக்காக விற்பனை செய்வதற்கோ தான் அனுமதி வழங்கவில்லை என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.
“காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இயந்திரங் » 24

## பதவியைத் துறக்கும் எண்ணத்தில் தவராசா

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் அந்தளவுக்கு மோசம் என்று அவர் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூலை18
வடக்கு மாகாண சபையின் தற்போதைய செயற்பாடுகளைப் பார்க்கும்போது பேசாமல் பதவியைத் துறந்துவிட்டுச் செல்லலாமா என்று எண்ணத்தோன்றுகின்றது. இவ்வாறு » 25

## திண்மக் கழிவகற்றலுக்கு வடக்கில் 18 சபைகளில் உரிய இடவசதிகளில்லை

அரச தலைவரிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 18
வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சிச் சபைகளில் 18 சபைகளில் திண்மக் கழிவகற்றல் பொறிமுறை அமைப்பதற்கான இட வச » 25

## இனவாத நோக்கிலேயே ஐ.நா. அறிக்கையாளர் மீது நீதி அமைச்சர் பாய்ச்சல்

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு விசனம்

கொழும்பு, ஜூலை 18
இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை அம்பலப்படுத்திய ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் மீது இனவாத மற்றும் அடக்குமுறை சிந்தனை அடிப்படையிலேயே நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கோபத்தை வெளிக்காட்டினார் என்று தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற் » 23

### தேர்தலை இலக்காகக் கொண்டு
## திட்டமிட்ட திகதிக்கு முன்னரே வாக்காளர் பட்டியல் வெளிவரும்

யாழ்ப்பாணம், ஜூலை18
தேர்தலை இலக்காகக் கொண்டு, நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடும் நாளை முன்னோக்கி நகர்த்த தேர்தல்கள் » 23

## சம்பந்தனை இன்று சந்திப்பார் சிங்கப்பூர் அயலுறவு அமைச்சர்

மைத்திரி, ரணிலுடன் நாளை பேச்சு

கொழும்பு, ஜூலை 18
இலங்கைக்கு நேற்று வருகை தந்துள்ள சிங்கப்பூர் அயலுறவு அமைச்சர் பேராசிரியர் விவியன் பாலகிருஷ்ணன் கொழும்பில் முக்கிய » 25

## ஆயிரம் மில்லியன் இந்திய ரூபா மோசடி; யாழ். இளைஞர் கைது

கொழும்பு, ஜூலை 18
போலிக் கடனட்டைகளைப் பயன்படுத்தி, சுமார் ஆயிரம் மில்லியன் இந்தியரூபாவைமோசடிசெய்தனர் » 24

## யாழ்ப்பாணச் சமுர்த்திப் பயனாளிகளில் அரைவாசிப் பேர் அதை இழக்கும் நிலை

புதியவர்களை இணைத்துக் கொள்ளத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணத்தில் சமுர்த்தி முத்திரை தற்போது பெற்றுக் கொள்ளும் 53 ஆயிரம் குடும்பங்களில் ஆகக் குறைந்தது அரைவாசிப் பேராவது அதனை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நீக்கப்படும் » 24

### புதிய பயங்கரவாதச் சட்டம் குறித்து
## ஐ.நாவின் வழிகாட்டலை ஏற்காது இலங்கை அரசு

கொழும்பு, ஜூலை 18
புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எப்படி வரையவேண்டும் என்ற ஐ.நாவின் வழிகாட்டுமுறை » 25

newuthayan.com
ஒளி, ஒலி வடிவத் தகவல்களுடன்
உதயன் DIGITAL newuthayan.com
24 மணிநேரப் பதிவேற்றம்

## இந்திய மீனவர் நால்வர் கைது: 31ஆம் திகதிவரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூலை 18
நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகு ஒன்றும் கடற்படையால் கைப்பற்றப்பட்டது.

அதிகாலையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களைக் கைது செய்து யாழ்.மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றப் பதில் நீதிவான் இ. சபேசன் உத்தரவிட்டார்.

இவர்கள் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஜ-8)

## இணைந்து செயலாற்றும் தன்மை எவரிடமுமில்லை

### வடக்கு முதலமைச்சர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 18
ஒருவருடன் ஒருவர் இசைந்து போகின்ற தன்மை எம்மிடம் இல்லை. கூட்டாகச் சேர்ந்து செயற்படுகின்ற தன்மையும் இல்லை. குறை காண்பதிலேயே எல்லோரும் வல்லவர்கள். அதனால் பல அபிவிருத்திப் பணிகள், பல திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. இது எம்மிடையே மிகப் பெரிய ஒரு குறைபாடாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

"ஒப்பந்த முகாமைத்துவமும் தீர்வுகளுக்கான முரண்பாடுகளும்" என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கு யாழ்.நகரிலுள்ள விடுதியொன்றில் நேற்று நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
கடும் போருக்குப் பின்னர் மீண்டெழுந்து வரும் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளை வேகமாக முன்னெடுக்க வேண்டும். இந்தத் தருணத்தில் முனைப்புடனான ஈடுபாடுகளும் விரைவான செயற்பாடுகளும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன. எமது அபிவிருத்திக்கு வேண்டிய நிதி மூலங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு கிடைக்கும் நிதியை முறையாக செலவு செய்வதற்கான திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்க வேண்டும்.

வேலைகள் துரிதமாக நிறைவுறுத்தப்படாமைக்கான காரணங்களை ஆராய்வது அவசியம். அந்த வேலைகளை விரைந்து நிறைவு செய்வதற்கான வழிமுறைகளையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். தொழில்நுட்பவியலாளர்கள் பற்றாக்குறை அல்லது அவர்களின் அனுபவமின்மை போன்ற பல்வேறு காரணங்களைக் கூறக் கூடாது. தேவை ஏற்படின் மூத்த பொறியியலாளர்கள் கூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் கடமைகளை நிறைவு செய்ய முன்வரலாம். எந்தச் சட்டத்தின் கீழ் வேலைகளை இழுத்தடிக்கலாம் என்று சிலர் ஆராய்வதற்கு தயார்ப்படுத்தப்படுகின்றனர். ஒரு தொழில் முயற்சி ஆரம்பிக்கப்படும்போது அதற்கான ஆரம்ப செலவினம், நடைமுறை செலவினம், உற்பத்திக்கான மூலப்பொருள்கள், உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள், எதிர்பாராத செலவினங்கள், எதிர்பார்க்கப்படும் வருமான மட்ட ஊழியர் செலவினங்கள் என அனைத்துவிடயங்களையும் உள்ளடக்கியதான திட்ட வரைவுகள் தான் தயாரிக்கப்படுவது அவசியம். - என்றார்.

(ற-ஜ-10,8)



## அபிவிருத்திக்கு நாமே தடை

### யாழ். மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 18
எமது மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு நாமே தடையாக இருக்கிறோம். நல்லதைச் செய்தாலும் எதிர்க்கிறோம். அப்படியாயின் எவ்வாறு மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய முடியும்?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் யாழ்.மாவட்டச் செயலர் நா. வேதநாயகன்.

கடல் நீரை குடி தண்ணீராக்கும் திட்டம் தொடர்பான வேலைப்பட்டறை மற்றும் அனுபவப் பகிர்வுக் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
யாழ்.மாவட்டத்தில் தண்ணீர் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றன. இராணுவத்தினர் அதிகமாக தண்ணீரைப் பயன்படுத்துகின்றனர். குடிண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது. மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய முடியாத நிலமைகள் காணப்படுகின்றன. ஆஸ்திரேலியாவுக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்த போது, கடல் நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம் தொடர்பாக விளக்கமளிக் கப்பட்டது. அங்கு சுற்றாடல் அமைச்சு மிக கடுமையான சட்டத்தையும் நடைமுறைகளையும் கொண்டுள்ளது.

இவ்வாறான திட்டங்களை அங்கு நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். யார் எதைச் கூறினாலும், எமக்கு சுத்தமான தண்ணீர் தேவை. அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

(ற-ஜ-106)

## தரம் 5 மாணவருக்கு கல்விக் கருத்தரங்கு





யாழ்ப்பாணம்,ஜூலை 18
தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் செலான் வங்கி மற்றும் உதயன் பத்திரிகை அனுசரணையுடன் கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கில் வளவாளர்களாக ஆசிரியர்களான வே.அன்பழகன், ப. சுசீலா ஆகியோரும், அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை உப அதிபர் பி. பார்த்தீபன் மற்றும் புலமைச்சுடர் கையேட்டின் தலைமை ஆசிரியர் ரி. திலீப்குமாரும் கருத்துரைகளை வழங்கினர். வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச பாடசாலைகளிலிருந்து சுமார் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சரவணபவன் அறக்கட்டளை மற்றும் புலமைச்சுடர் கையேடு என்பன இணைந்து கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

(ஐ)

## கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தால் பாதிப்பில்லை

### செயற்றிட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 18
கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தால் குடாநாட்டுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அது தற்போதைய அவசரமான தேவை.

இவ்வாறு தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் செயற்றிட்டப் பணிப்பாளர் ரி.பாரதிதாசன் தெரிவித்தார்.

கடல் நீரை குடி தண்ணீராக்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
குடாநாட்டு நீர் நிலைகளில் நீர் பற்றாக்குறை காணப்படுகின்றது. 2002ஆம் ஆண்டு முதல் 45 நிறுவனங்கள் நன்னீர் இன்றி யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியேறியுள்ளன. கடல் நீரைக் குடி தண்ணீராக்கும் திட்டம் விரைவுபடுத்த வேண்டும். இந்த திட்டத்தின் ஊடாக குடிதண்ணீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இவ்வாறான திட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

யாழ்.நகரப்பகுதியாக இருந்தாலும், கிராமப் புறங்களாக இருந்தாலும், மிகவும் மாசு பட்ட தண்ணீரையே தற்பேது பருகிக் கொண்டிருக்கின்றனர். கடல் நீரை குடிதண்ணீராக்கும் திட்டம் பாதிப்பற்றது. அந்தத் திட்டத்தை மிக விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும். - என்றார்.

(ற-ஜ-106)

## நானுஓயா பொலிஸ் பிரிவின் அரையாண்டு அணிவகுப்பு

கொழும்பு, ஜூலை 18
நானுஓயா பொலிஸ் பிரிவின் அரையாண்டு பொலிஸ் அணிவகுப்பு நானுஓயா பொலிஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நுவரெலியா பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் மகிந்த திஸாநாயக்க கலந்து கொண்டார்.

நானுஓயா பொலிஸ் பொறுப்பதிகாரி அமரசேகர தலைமையில் இந்த அணிவகுப்பு இடம்பெற்றது.

"நுவரெலியா பிரதேசத்தில் 17 பொலிஸ் நிலையங்களிலும் முதலாவது சிறந்த பொலிஸ் நிலையமாக நானு ஓயா பொலிஸ் நிலையம் காணப்படுகின்றது. 17 பொலிஸ் பிரிவிலும் சிறந்த பொலிஸ் பொறுப்பதிகாரியாக பிரியந்த அமரசேகரதான் முதலாம் இடத்தை வகிக்கிறார். மத்திய மாகாண சிறந்த பொலிஸ் பட்டியலிலும் இவரின் பெயர் இருப்பது சுட்டிக்காட்டத்தக்கது" என்று மகிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (ஜ-10)

## மட்டுப்படுத்தப்பட்ட தலைமன்னார் ரயில் சேவை

கொழும்பு, ஜூலை 18
கொழும்பு கோட்டையில் இருந்து தலைமன்னார் வரையிலான தொடருந்துச் சேவைகள் நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்டன. மதவாச்சி வரை மட்டுமே இந்தச் சேவை இடம்பெறும் என்று தொடருந்து கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது.

தொடருந்து பாதையில் மதவாச்சி மற்றும் செட்டிகுளத்துக்கு இடையில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனாலேயே தொடருந்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ஜ-10)

## இலங்கையின் செயற்பாட்டை கண்காணிக்கின்றது ஐ.நா.

### ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை சுட்டிக்காட்டு

மன்னார், ஜூலை 18
காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்களை இலங்கை அரசு மறந்தாலும் ஐ.நா. அதிகாரிகள் மறக்கவில்லை. அனைத்தையும் அவர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.

'மறைக்கப்பட்ட மனிதர்களின் பதிவுகள்' எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது;
சந்தர்ப்பம் ஏற்படும் போது அவர்களே நேரடியாக இறங்கும் கட்டம் ஏற்படலாம். அரசு அக்கறை இன்றி செயற்பட்டால் ஐ.நா. தூதுவர் வந்து போர்க குற்றச் சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். அதற்கான உரிமையும் அவர்களுக்கு உண்டு.

இப்போது தீர்வு கிடைக்காது விட்டாலும் என்றோ ஒரு நாள் தீர்வு கிடைக்கும்.

அரசு இதற்குத் தகுந்த பதிலை வழங்க வேண்டும். நீதியை வழங்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்கள் குறித்து இலங்கை அரசுக்கு அக்கறை இல்லை என்று கூறவில்லை. அக்கறை இருக்கின்றது. ஆனால் அவர்கள் அச்சமடைகின்றனர். தங்களுடைய இராணுவத்தினரை குற்றம் சாட்டி அவர்களை காட்டிக்கொடுக்க முடியாத நிலையில் உள்ளனர் - என்றார்.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும், மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தினரும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

(ற-56)

# நெவில் பெர்னான்டோ மருத்துவமனையை பொறுப்பேற்றது அரசு

கொழும்பு, ஜூலை 18
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியுடன் தொடர்புடைய நெவில் பெர்னான்டோ தனியார் மருத்துவமனையை அரசு நேற்று பொறுப்பேற்றது.
மருத்துவமனையைக் கையளிக்கும் ஒப்பந்தம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது. மருத்துவர் நெவில் பெர்னான்டோ மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
"மருத்துவமனையில், பொதுமக்களுக்குச் சிறப்பான சிகிச்சை பெற்றுக் கொடுக்கப்படும். சுதந்திரமான மருத்துவமனையாகச் செயற்படும். நிர்வாகக் குழுவின் ஊடாக அவை நடைமுறைப்படுத்தப்படும்" என்று சுகாதார அமைச்சர ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை சகல வசதிகளுடனும் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு நவீன மருத்துவ உபகரணங்களும் உள்ளன. மருத்துவமனையின் பெறுமதி சுமார் 3 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.
"மருத்துவமனையுடன், பணியாளர்களும் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
அதற்காக அரசிடமிருந்து எந்தவித கட்டணங்களும் பெற்றுக் கொள்ளப்படவில்லை" என்று மருத்துமனையின் தலைவர் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார்.
இந்த மருத்துவமனை போதனா மருத்துவமனையாக மாற்றப்பட்டு, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி மக்கள் பாவனைக்கு விடப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
(ற-ஐ-10)

# பிரச்சினைகளைத் தீர்க்கவே இணைந்து செயற்படுகிறோம்

## தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18
இரண்டு கட்சிகள் இணைந்து பணியாற்றுவது மிகவும் சிரமமான காரியம். நாட்டில்காணப்படும்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே இணைந்து பணியாற்றுகின்றோம்.
இவ்வாறு தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.
பன்னிப்பிட்டிய, வீரமாவத்த வியத்புர தொடர் வீட்டுத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
நாட்டில் வர்த்தக பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய இரண்டும் அவசியம். முதலாவதாக கல்வி வாய்ப்பை வழங்க வேண்டும். மாணவரொருவருக்கு 13 ஆண்டுகளுக்கு கல்வியைக் கட்டாயமாக்கும் கல்வி நடைமுறையை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். சில மாணவர்கள் உயர்தர வகுப்பில் கற்பதற்கான திறமை இல்லாததால் பாடசாலைக் கல்வியைக் கைவிடுகின்றனர். அவர்களின் கல்வியைத் தொடர வைத்து அவர்களுக்கு தொழிற் கல்வியை வழங்கத் திட்டமிட்டு வருகிறோம்.



சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக அரசு மொறட்டுவ, சப்ரகமுவ, மற்றும் வடமேல் மாகாண பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களை நிறுவவுள்ளது. எமக்குத் தேவையான மருத்துவர்களை நாம் உருவாக்கிக்கொள்ள முடியும். இவற்றுக்கு மேலதிகமாக கிராமப்புற மத்திய தரமக்களுக்கும், வடக்கில் தமது வீடுகளை இழந்த மக்களுக்கும், தோட்டப்புற தொழிலாளர்களுக்கும், கொழும்பின் கீழ் மட்ட மற்றும் மத்தியதர மக்களுக்கும் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.
2015 ஆம் ஆண்டில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாம் கூட்டரசை நிறுவியது மேற்குறிப்பிட்ட பெரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ள தேசிய நிர்வாகமொன்று தேவை என்பதாலாகும். தற்போது எமக்கு பன்னாட்டு உதவிகளும், ஆதரவும் கிட்டியுள்ளன. செலுத்தி முடிக்க முடியாதிருந்த கடன்களைச் செலுத்தி முடிக்கும் திறன் எமக்குக் கிட்டியுள்ளது. ஐ.தே.கட்சி, சுதந்திரக்கட்சி ஆகிய இரு தரப்புக்களும் ஒன்றிணைந்து இந்தத் தேசிய அரசின் ஊடாக நாட்டின் முக்கிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம். என்றார்.
(ற-ஐ-10)

ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம்

# தட்டுவன்கொட்டிக் கிராமத்துக்கு உடன் குடிதண்ணீர் விநியோகம்

கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி, தட்டுவன்கொட்டிக் கிராமத்துக்கு குடி தண்ணீர் வழங்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்டாவளைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.
தட்டுவன்கொட்டிக் கிராமத்துக்கு பிரதேச சபை குடி தண்ணீர் விநியோகம் மேற்கொண்டிருந்த நிலையில் கடந்த 12 நாள்களாக குடி தண்ணீர் வழங்கப்படவில்லை. வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை இந்த விடயத்தை இணைத் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.
பிரதேச செயலர் ரி. முகுந்தனிடம் இது தொடர்பான இணைத் தலைவர்கள் வினவினர். இது தொடர்பாகத் தனக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. பிரதேச செயலகத்தால் உடனடியாக குடி தண்ணீர் வழங்கப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.
வீதித் திருத்த வேலைகள் நடைபெறுதாலேயே குடி தண்ணீர் விநியோகம் தடைப்பட்டது என்று பிரதேச செயலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.
மாற்றுப் பாதை ஊடாக குடி தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இணைத்தலைவர்கள் பணித்தனர்.
நேற்று மதியம் 12 மணியளவில் குடி தண்ணீர் வழங்கப்பட்டது என்று இணைத் தலைவரும், நாடாளமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.
(ற-6)

## காலாவதியான உப்புப் பொதிகள் நேற்று மீட்பு

திருகோணமலை, ஜூலை 18
திருகோணமலை நகர்ப் பகுதி வர்த்தக நிலையம் ஒன்றில் காலாவதியான உப்புப் பொதிகள் நேற்று மீட்கப்பட்டன.
காலாவதித் திகதி மாற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலை அடுத்து பாவனையாளர் அதிகார சபையினர் திடீர் சோதனை மேற்கொண்டனர். அதில் 900க்கும் மேற்பட்ட உப்புப் பொதிகள் வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டன.
வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் மொத்த வியாபாரம் செய்பவர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த வர்த்தக நிலையம் மூலம் ஏனைய முகவர் நிலையங்களுக்கும் உப்புப் பொதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.
அந்த வர்த்தகருக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ற-ஐ-10,45)

# சமுர்த்தியை மீள வழங்குமாறு கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்





கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் 800 பேரின் சமுர்த்திக் கொடுப்பனவுகள் ஒரே தடவையில் நிறுத்தப்பட் டுள்ளன என்று தெரிவித்து நேற்று பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
பிரதேசசெயலகத்துக்கு முன்பாகக் கூடிய சுமார் 300 பேர் தமக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகளை மீள வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.
"போரின்பின்னர் 2010ஆம் ஆண்டு மீள்குடியமர்ந்த பின்னர் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் 2012ஆம் ஆண்டின் பின்னர் எமக்கு சமுர்த்தி உதவி வழங்கப்பட்டது. ஆண்டு தோறும் விவரங்கள் பெறப்பட்டு சமுர்த்தி உதவி வழங்கப்பட்டது. கடந்த வாரம் எமக்கான சமுர்த்தி உதவிகள் நிறுத்தப்பட்டன. போரால் பாதிக்கப்பட்ட எமக்கு சமுர்த்தி உதவி சிறு ஆறுதலாக் இருந்தது அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது." என்று ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் தெரிவித்தனர்.
"கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது 6 ஆயிரம் பேருக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. சமுர்த்திக் கொடுப்பனவு பெறுபவர்களுக்கான மீளாய்வு இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற்றது. பயனாளிகள் வழங்கிய தகவல்கள் அடிப்படையில் தலைமை அலுவலகத்தால் இவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்பட் டுள்ளன. கரைச்சிப் பிரதேச செயலகத்தில் மட்டும் 800 குடும்மங்களின் உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
இது எமது பிரதேச செயலகத்தின் பயனாளிகளில் 15 வீதமானோர் ஆகும். பாதிக்கப்பட்ட பயனாளிகளின் கோரிக்கை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் மீளாய்வு செய்யப்படும் என்று வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது." என்று கரைச்சிப் பிரதே செயலர் தெரிவித்தார்.
நேற்று நடைபெற்ற கண்டாவளை அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி இது தொடர்பில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று இணைத் தலைவர்கள் தெரிவித்தனர்.
(ற-ஐ-10,101,35-6)

# அதிகாரங்கள் வழங்கினாலே அபிவிருத்தி அடைய முடியும்

## கிழக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 18
புதிய அரசமைப்பில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் செயற்படுத்தப்படுமாக இருந்தால், சுகாதாரத்துறையை மேம்படுத்த முடியும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முகமட் நஸீர் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது;
கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தின் கீழ் 13 ஆதார மருத்துவமனைகளும், கொழும்பு அரசின் நிர்வாகத்தின் கீழ் 4 மருத்துவமனைகளும் உள்ளன. மருத்துவர், தாதியர், ஊழியர்கள் பற்றாக்குறைகள் உள்ளன. அரசமைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு கிழக்கு மாகாணத்துக்கான முழுமையான அதிகாரங்களும் வழங்கப்படுமாக இருந்தால், இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப வளப் பங்கீடுகள் வழங்கப்பட வேண்டும். என்றார்.
(ற-ஐ)

# 27 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாணத்தில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான பட்டதாரிகள் 27 பேருக்கு நேற்று ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

நியமனக் கடிதங்களை வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் அமைச்சின் அலுவலகத்தில் வைத்து வழங்கினர்.



பட்டதாரி நியமனத்துக்காக இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் போது சான்றிதழ் சமர்ப்பிக்கத் தவறிய நிலையில், காலம் தாழ்த்தி சான்றிதழை வழங்கிய 27 பட்டதாரிகளுக்கே நேற்று நியமனம் வழங்கப்பட்டது. இன்று அவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்பர்.

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான வெற்றிடத்துக்கு கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி 219 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. அவர்களில் 181 பேர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 418 கணிதம் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்பட்டது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காகக் கடந்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி விண்ணப்பம் கோரப்பட்டது. விண்ணப்பித்த 353 பட்டதாரிகளில் நேர்முகத் தேர்வில் 219 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். சில பட்டதாரிகள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய போதும் சான்றிதழ் கைவசம் இல்லாததால் கால அவகாசம் கோரியிருந்தனர். அவர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. (ஐ-10,8)

# ஆடிப் பிறப்பு நிகழ்வுகள்



வவுனியா, ஜூலை 18

ஆடிப் பிறப்பைக் கொண்டாடும் சிறப்பு நிகழ்வுகள் வடக்கில் நேற்று பரவலாக நடைபெற்றன.

வீடுகள், ஆலயங்கள் உட்பட அரசதிணைக்களங்களிலும் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆடிக்கூழ், கொழுக்கட்டை என்பவற்றைப் பகிர்ந்து ஆடிப் பிறப்பை மக்கள் கொண்டாடினர்.

வவுனியா தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச் சிலை முன்பாக ஆடிப்பிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சோமசுந்தரப் புலவரின் நினைவுரையை தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தினார். வவுனியா விபுலானந்தக் கல்லூரி மாணவர்கள் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடலை பாடினர். நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் சோமசுந்தரப்புலவரின் திருவுரு வச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையுடன் நிகழ்வு இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம், கைதடி அரச முதியோர் இல்லத்தில் அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இல்ல ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. ஆடிக் கூழ் முதியவர்களுக்கு வழங்கப்பட்டது. நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொண்டனர். (ற-ஜ-9,17)

## மைத்திரிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கொழும்பு மேல் நீதிமன்றம் மீண்டும் அழைப்பாணை விடுத்துள்ளது.

கடந்த அரச தலைவர் தேர்தலில் போலி உடன்படிக்கையொன்றைத் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அரசபணிகள் காரணமாக அவர்களால் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியவில்லையென அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் சார்பில் முன்னிலை யான சட்டத்தரணி நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார். அத்துடன், இதற்காக வேறு ஒரு திகதியை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய இந்த வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அந்த வழக்கில் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் முன்னிலையாக வேண்டுமென நீதிமன்றம் மீண்டும் அழைப்பாணை விடுத்துள்ளது. (த)



# பொய் வாக்குறுதியளித்து ஏமாற்றுகின்றது கூட்டரசு

## இரணைதீவு மக்கள் ஆதங்கம்

கிளிநொச்சி, ஜூலை 18

"அரசு எம்மை ஏமாற்றுவதற்காகத் தொடர்ச்சியாகக் கூறும் பொய் வாக்குறுதிகளை இனியும் நம்பப்போவதில்லை. இரு வாரங்களுக்குள் காணிகள் விடுவிக்கப்படும் எனக் கூறி அரசு எம்மை ஏமாற்றி விட்டது.

இவ்வாறு கிளிநொச்சி இரணைதீவு மக்கள் தெரிவித்தனர்.

தமக்குச் சொந்தமான பூர்வீகமான காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரி இரணைதீவு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டம் ஆரம்பித்து 3 மாதங்களைக் கடந்துள்ளது. அவர்களின் கோரிக்கை இன்னமும் நிறைவேற்றப் படவில்லை.

"கடந்த மாதம் கிளிநொச்சிக்கு வந்த பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன எம்மைச் சந்தித்தார். எமது நிலைப்பாடு தொடர்பில் எம்மிடம் கேட்டறிந்தார். இரண்டு வாரங்களில் காணி விடுப்புத் தொடர்பாக தீர்க்கமான பதிலைப் பெற்றுத் தருவேன் உறுதியளித்தார். நேற்றுடன் 19 நாள்கள் கடந்து விட்டன. அரசிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்க வில்லை. அரச தரப்பினர் பொய்யான வாக்குறுதிளை வழங்குகின்றனர்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் விரக்தியுடன் தெரிவித்தனர்.

1992 ஆம் ஆண்டு இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் முழங்காவில் இரணைமாதா நகரில் குடியமர்த்தப்பட்டனர். 2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் மக்கள் பலர் சொந்த நிலங்களில் மீள்குடிய மர்ந்தனர். இரணைதீவு மக்களின் காணிகள் இன்று வரை விடுவிக்கப்படவில்லை. கடற்படையினரின் கட்டுப்பாட்டில் அவை உள்ளன. தம்மை தமது பூர்வீக நிலங்களில் குடியமர்த்த வேண்டும் என்று அந்த மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

கிராம மட்டத்திலும் பூநகரிப் பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டச் செயலக கூட்டங்களில் அவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். அதன்பின்னர் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இரணைதீவுக்குச் சென்று நேரில் ஆராய்வது என்று இணைத் தலைவர்களால் முடிவுகள் எடுக்கப்பட்டன. இருப்பினும் இதற்குக் கடற்படை அனுமதிக்கவில்லை எனக் காரணம் கூறப்பட்டது. சில அரசியல்வாதிகள் இரணைதீவுக்குச் சென்றனர். இரணைதீவுக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தரப்படும் என்று மக்களுக்கு உறுதியளித்தனர். இதுவரை அனுமதி வழங்கப் படவில்லை. (ற-ஜ-10)

## கர்ப்பிணி கொலை: சந்தேகநபர்களின் உடைமைகளை உறவினர்களிடம் வழங்க உத்தரவு

ஊர்காவற்றுறை கர்ப்பிணி படுகொலை வழக்கின் சந்தேகநபர்களிடமிருந்து மீட்கப்பட்ட அவர்களின் பணம் உள்ளிட்ட உடைமைகளை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

இந்தவழக்குஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

மேலும் சந்தேகநபர்களான சகோதரர்கள் இருவரின் விளக் கமறியல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீதிவான் மன்று நீடித்தது.

**பின்னணி**

ஊர்காவற்றுறையில் ஜனவரி 24ஆம் திகதி 8 மாதக் கர்ப்பிணியான ஞானசேகரன் மேரி ஹம்சிகா (வயது -27) கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.

கொலைக் குற்றச்சாட்டில் சுழிபுரத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவரின் உடையில் குருதிக் கறை காணப்பட்டது. அத்துடன் கண்கண்ட சாட்சியான சிறுவன் அவர்கள் இருவரையும் காட்டியிருந்தான். (வ-37)





## விபுலானந்தர் புகழ்கூறும் எழுச்சி ஊர்வலம் நேற்று

திருகோணமலை, ஜூலை 18

சுவாமி விபுலானந்தர் ஆற்றிய கல்விப் பணிகள், சமூகப்பணிகள் என்பவற்றை வெளிப்படுத்தும் எழுச்சி ஊர்வலம் திருகோணமலையில் நேற்று நடத்தப்பட்டது.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இருந்து உவர்மலை விவேகானந்தா கல்லூரி வரை ஊர்வலம் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக இந்துக் கல்லூரியின் வளாகத்தில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. திருகோணமலை சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் விழாச் சபையின் தலைவரும், கோட்டக்கல்விப் பணிப்பாளருமான கோ.செல்வநாயகம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ற-ஜ-10,40)

## கஞ்சா கடத்தியதாக இளைஞர் கைது

*வவுனியாவில் பேருந்து நிலையத்தில் சம்பவம்*

வவுனியா, ஜூலை 18

"வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் 1கிலோ 790 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். கடந்த ஒரு மாதத்தில் 7 பேர் வவுனியா பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பரந்தனிலிருந்து அனுராதபுரத்துக்குக் கடத்தப்படவிருந்த 1கிலோ 790 கிராம் கேரளக் கஞ்சாப்பொதி நேற்று மாலை 6 மணிக்கு வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டது. கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர்விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் மன்றத்தில் முற்படுத்தப்படு வார்.

இந்தச்சம்பவத்துடன் கடந்த ஒரு மாதத்தில் 7 பேர் வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் வைத்து கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21)

# மாணவர் போதையில் மூழ்காதவாறு பெற்றோர் கண்காணிக்கவேண்டும்

## சேனாதிராசா எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜூலை 18
"பாடசாலை மாணவர்கள் இன்றைய சூழ்நிலையில் கல்வியில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். போதைப்பொருள் பாவனை தொடர்பாகவும் விழிப்புணர்வு தேவையாகவுள்ளது. ஆகவே பெற்றோர்கள் இதில் கவனம் எடுத்து மாணவர்களின் கல்வியை உயர்த்தஅவர்களுடன்துணைநிற்கவேண்டும்" இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியின்நிதியொதுக்கீட்டில்பாடசாலைமாணவர்கள் 36 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கும் நிகழ்வு உரும்பிராயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
எங்கள் பிரதேசங்களில் பியர் போன்ற மதுபானங்கள் பாவிப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இலங்கையில் அதிகூடிய மதுபான வியாபாரம் கொண்ட மாகாணமாக வடக்கு மாகாணமே காணப்படுவதாக நிதியமைச்சின் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் தமிழ் மாணவர்களின் வீதம் சடுதியாகக் குறைவடைந்து வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்பொழுது மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் பின்னடைவு காணப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம், பொறியியல்பீடம் போன்றவற்றுக்குத் தெரிவாகும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்த இரண்டு பீடங்களுக்கும் வெளிமாவட்ட மாணவர்களே வந்து கல்வியை தொடர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தமிழ் மாணவர்கள் ஒரு குறிப்பிட்டசில துறைகளுக்குள் மட்டும் ஆர்வம் காட்டுவதால் அந்தத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளில் நெருக்கடி நிலமை காணப்படுகின்றது. இங்குள்ளவர்கள் எதிர்காலத்திலாவது தொழில்நுட்ப துறையில் ஆர்வம் காட்ட முன்வரவேண்டும் - என்றார்.
(4-8)

## இணக்க சபை அமர்வு இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 18
சங்கானை இணக்க சபை அமர்வு வட்டு திருஞான சம்பந்த ஆரம்ப பாடசாலையில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெற மாட்டாது என்று அதன் தவிசாளர் அறிவித்தார்.
அன்றையதினம் ஆடி அமாவாசை தின மாகையால் அன்று இணக்க சபை அமர்வு நடைபெறாது என்று அவர் மேலும் தெரிவிக்கப் பட்டது. (4)

## இணக்க சபை அமர்வு நாள் மாற்றம்

சாவகச்சேரி, ஜூலை 18
சாவகச்சேரி இணக்க சபை அமர்வு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது என்று சபையின் தவிசாளர் வை.இராசரத்தினம் அறிவித்தார்.
எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினம் என்பதால் அன்றைய தினம் நடைபெறவுள்ள அமர்வு இடம்பெறாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-9)

## நன்றி செலுத்தும் வழிபாடு

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தின் 198ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு நன்றி செலுத்தும் வழிபாடும், முன்பள்ளி கட்டடத் திறப்புவிழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பரந்தன் சேகரத்தைச் சேர்ந்த முகாமைக் குரு அருட்பணி எஸ்.சசிகுமார் சிறப்புச் செய்தியை வழங்குவார். (173)

## ஈழத்து தேவியின் திருவிழா ஆரம்பம்

காரைநகர், ஜூலை 18
காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய தேவியின் வருடாந்தத் திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 10.35 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8.30 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
(4-250)

## சிறுமி உட்பட இருவர் விபத்தில் படுகாயம்

சாவகச்சேரி, ஜூலை 18
சாலை விபத்தில் சிக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த 11 வயதுச் சிறுமி உட்பட இருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 7மணிக்கு சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் இடம்பெற்றது. இதில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த ராஜ்குமார் வேலழகன் (வயது - 28) அவரது சகோதரியின் மகளான செல்வக்குமார் சுலக்சனா (வயது- 11) ஆகியோர் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.
ஒழுங்கையிலிருந்து முதன்மைச்சாலையை நோக்கி மோட்டார் சைக்கிள்வந்த வேளையில் சாலையின் இருபக்கங்களிலும் வந்த வாகனங்களில் அகப்பட்டு விபத்து இடம்பெற்றது என விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். புலம்பெயர் நாடொன்றிலிருந்து வந்த வரணி இயற்றாலையைச் சேர்ந்த வேலழகன் தனது சகோதரியின் மகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றி உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டுத் திரும்புகையில் விபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்துக்குளான வாகனங்கள் இரண்டும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர் (21,9)

## பாதசாரிகள் கடவையில் வாகனத்தை நிறுத்தாதவர் செலுத்தினார் ரூ. 5 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
பாதசாரிக் கடவையில் வாகனத்தை நிறுத்தாமல் சென்றவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
யாழ்ப்பாண நகரை அண்மித்து பாதசாரிகள் கடவையில் வாகனத்தை நிறுத்தாமல் பயணித்தவருக்கு எதிராகப் பொலிஸார் மன்றில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாரதி தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதால் 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4,12)

## முதியோர் இல்லத்தில் ஆடிக்கூழ் நேற்று


கைதடி அரச முதியோர் இல்லத்தில் ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு இல்லத்தின் வைரவர் ஆலய முன்றிலில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்புப் பூசைவழிபாடுகள் இடம்பெற்று ஆடிக் கூழ் காய்ச்சி முதியவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொண்டனர். (4,17)

## பேருந்து மோதி இளைஞன் படுகாயம்

தென்மராட்சி, ஜூலை 18
சாலையோரத்தில் பேருந்தின் வருகைக்காகக் காத்திருந்த இளைஞனை திடீரெனப் பாய்ந்த பேருந்து ஒன்று மோதியதால் அவர் படுகாயமடைந்தார்.
இந்தச் சம்பவம் மீசாலை புத்தூர் சந்தியில் நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.
சேவைக்குச் சென்றுவிட்டு வந்த பேருந்தை அதன் சாரதி சாலையோரத்தில் நிறுத்திவிட்டு அருகிலுள்ள சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றிருந்தார். அந்தவேளையில் வேறொருவர் அதனை இயக்கியபோது அது கட்டுப்பாட்டையிழந்து சாலையோரத்தில் நின்ற இளைஞனை மோதிவிட்டு அருகில் காணப்பட்ட மின்கம்பத்துடன் விபுத்துக்குள்ளாகியது எனத் தெரிவிக்கப்பட்டது.
வாகனம் மோதியதால் காயமடைந்த சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த 24வயது இளைஞன்சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-9)

## காணிப் பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18
காணி சம்பந்தமான பிணக்குகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் தீர்த்துவைப்பது, நடைமுறைப்படுத்துவது தொடர்பான சிறப்புக்கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
"யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி சம்பந்தமான சிறப்பு இணக்க சபைக்கு தெரிவு செய்யப்பட்ட காணி சம்பந்தமான சிறப்பு நடுவர்கள் 35 பேர் இந்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அடுத்த மாதமளவில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான காணி சம்பந்தமான சிறப்பு இணக்க சபை ஆரம்பமாகவுள்ளது இதன் முதற்கட்டமாகவே இன்றைய கலந்துரையாடல் அமையும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(21,50)



யாழ்ப்பாணம் காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் பொசன் தின நிகழ்வுகள் அண்மையில் ,காரைநகர் இந்துக் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நடைபெற்றன.
இதில் அனைத்து மதத் தலைவர்கள்,அயல் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (21-ரி)

## ரூ. 2.11 மில்லியன் செலவில் மாப்பாணவூரி வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட மாப்பாணவூரி வீதி சீரமைப்புச் செய்யப்படவுள்ளது. 2.11 மில்லியன் ரூபா செலவில் மாப்பாணவூரி வீதி தார்இடப்பட்டு சீரமைப்பு செய்யப்படவுள்ளது. 2 மாதங்களில் வேலைமுடிக்கப்படவேண்டும். வேலைத்திட்டத்துக்கான கேள்வி அறிவித்தல் காரைநகர் பிரதேச சபையால் கோரப்பட்டுள்ளது. (21-50)



பருத்தித்துறை முனை வைரவர் ஆலயத்தின் வேள்வித் திருவிழாவின் போது நேற்று முன்தினம் தீ மிதிப்பு வைபவம் இடம்பெற்றது. (26)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2017 உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல் கருத்தரங்கு எதிர்பார்க்கை வினாத்தாள்களின் விளக்கமும் இறுதிப் பரீட்சைக் கான தயார்ப்படுத்தலும் நாளை புதன்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டது. குமாரசுவாமி மண்டபத் தில் அனுமதி அட்டை வழங்கலின் பின் மு.ப 11.30 மணிக்கு இந்தக் கருத்தரங்கு நடைபெற வுள்ளது.
யாழ்ப்பாணம் இந்துக்கல் லூரியின் பழைய மாணவனும் மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவ னுமான, ஆ.யேனுகானந் கருத்துரைகளை வழங்கவுள் ளார் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார். (4)

# நெடுந்தீவு மாணவர்களுக்கு நாளை சீருடை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 18
நெடுந்தீவில் வறிய மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடை வழங்கலும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நெடுந்தீவுப் பிரதேச செயலகமும் பிரதேச சமூக அபிவிருத் திப் பிரிவும் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வுகள் பிரதேச செயலர்சி.ஜெயகாந்தலைமையில்இடம்பெறும். முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் க.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தி னர்களாக நெடுந்தீவுப் பங்குத் தந்தை வணபிதா அ.ஜெய ரஞ்சன், நெடுந்தீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.திருஸ்ணதாஸ், நெடுந்தீவுப் பிரதேச சபைச் செயலாளர் கு.இரத்தினராசா ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரி விக்கப்பட்டது. (4)

# தரிப்பிடம் இல்லாத இடத்தில் நின்ற பேருந்து சாரதிக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
பேருந்து தரிப்பிடம் இல்லாத இடத்தில் பய ணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன் றில் நேற்று விசாரணைக்கு வந்தது. சாரதி குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து 5ஆயிரம் ரூபா தண்டம் அறிவிடப்பட்டது. (4,12)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 40 | 80 | 60 |
| கத்தரி | 100 | 120 | 120 | 120 | 140 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 100 | 120 | 120 | 140 |
| பாகல் | 140 | 140 | 160 | 160 | 180 |
| க.கிழங்கு | 140 | 130 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 200 | 200 | 240 | 260 |
| பூசணி | 90 | 120 | 120 | 130 | 80 |
| தக்காளி | 150 | 150 | 140 | 150 | 140 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 60 |
| கீரை | 30 | 40 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 250 | 250 | 160 | 250 | 200 |
| புடோல் | 80 | 100 | 60 | 80 | 80 |
| கோவா | 120 | 150 | 130 | 120 | 120 |
| வெண்டி | 100 | 100 | 60 | 80 | 100 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 70 | 50 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 90 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 150 | 240 | 200 | 180 | 240 |
| இராசவள்ளி | | 350 | 300 | 200 | 260 |
| முருங்கைக்காய் | 240 | 240 | 200 | 150 | 200 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 300 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 700 | 800 | 1000 |
| பாரை | 500 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 200 | 600 |
| முரல் | 400 | 500 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 |
| கிளாக்கன் | 500 | – | 500 | – |
| ஓரா | 400 | 400 | 500 | – |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | 200 |
| சூடை | 200 | 100 | 200 | 100 |
| ஒட்டி | 150 | 300 | 300 | – |
| திருக்கை | 350 | 250 | 400 | – |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 200 | 60 | 80 | 100 |
| பாலை | 300 | 250 | 500 | – |
| வாழை | 200 | 200 | 400 | – |

# ஓலை வெட்டியவரை குளவிகள் கொட்டின

கூடலாகக் காணப்பட்ட பனையோலைகளை வெட்டிவீழ்த்தியஇளைஞனைஓலைக்குள்மறைந் திருந்த குளவிகள் மொய்த்துக் கொட்டியுள்ளன. இந்தச் சம்பவம் தனங்களப்பு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான ராஜா சர்மிலன் (வயது-19) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (4,9)

# போதையில் வாகனம் ஓடிய சாரதிக்கு ரூ.7,500 தண்டம்


யாழ்ப்பாணம், ஜூலை 18
மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்ட துடன் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்கு இடை நிறுத்தி வைக்கவும் யாழ்ப் பாண நீதிமன்று உத்தரவிட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட் டப்பட்டவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட தையடுத்து 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருட காலத்துக்கு நிறுத்தி வைக்கவும், 250 மணித்தி யாலயங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (4-12)

# தண்ணீரென நஞ்சு குடித்த சிப்பாய் வைத்தியசாலையில்

தண்ணீர் போத்தலுக்குள் காணப் பட்ட நச்சுத் திராவகத்தை அருந்தி யதாகக்கூறி படைச் சிப்பாய் ஒரு வர் சாவகச்சேரி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் மிருசுவில் முகா மில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. முகாமைச் சேர்ந்த உதார மதுரங்க (வயது-26) என்பவரே வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார் என்று தெரி விக்கப்பட்டது. (4,9)

# பேருந்து சாரதிக்கு ரூ. 10,000 தண்டம்

ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தியமை, அதிக ஆள்களை வாகனத்தில் ஏற்றிச் சென்றமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றிச் சென்றமை போன்ற குற்றங்களுக் காக பேருந்து சாரதிக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப் பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதி வான் மன்றில் நேற்று விசார ணைக்கு வந்தது. சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவ ருக்கு 10ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4,12)



வடக்கு மாகாண சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்கான இந்தவருட மீளாய்வுக் கூட்டம் கிளிநொச்சியில் கடந்தவாரம் இடம் பெற்றது. வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து நீதிமன்ற எல்லைகளுக்குள்ளும் உட்பட்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் கள் இதன்போது தம்மால் மேற்கொள்ளப்பட்ட சமுதாய சீர்திருத்த பணிகள் தொடர்பிலான அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர். (6)

# ஏ ஏல் பரீட்சை அனுமதி அட்டைகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி ஜி.சீ.ஈ. பரீட் சைக்குத்தோற்றும்மாணவர்களுக்கான அனுமதிஅட்டைகள்நாளைபுதன்கிழமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கல்லூரியின்சிவஞானவைரவர்ஆலயத் தில் காலை 9 மணிக்கு மாதா,பிதா, குரு,தெய்வ வழிபாட்டுடன் வழங்கப்பட வுள்ளன. அனைத்து மாணவர்களும் தங்களின் பெற்றோருடன் வருகை தந்து அனுமதிஅட்டைகளைப்பெற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
இன்றுமுதல் மாணவர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டையுடன் கல்லூ ரிக்கு வருகை தந்து தங்களின் அனுமதி அட்டையில் உள்ள பெயர், அடையாள அட்டை இலக்கம், பாட இலக்கம் என்பன சரியாக உள்ளதா? எனச் சரிபார்த்து கையொப்பம் இடவேண்டும்" என்று பாட சாலை அதிபர் கேட்டுள்ளார். (4)




ஆண்களுக்கான சேட் வகைகள் சில தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. பருத்தித் துணி யில் செய்யப் பட்டுள்ள இவை ஆயிரத்து 900 ரூபாவில் இருந்து விற் பனை செய்யப்படு கின்றன.
இது புதுசு

# அரசியல் தீர்வை எட்டும் வரையாவது தமிழ்க் கூட்டமைப்பு உடையக்கூடாது

## வடக்கு அமைச்சர் சத்தியலிங்கம் வலியுறுத்து

வவுனியா, ஜூலை 18

"தமிழ் மக்களுக்கான நீடித்து நிலைத்து நிற்கக்கூடியதொரு அரசியல் தீர்வு எட்டப்படும் வரையிலாவது பொதுச் சிந்தனையுடன் மக்களுக்காகஒற்றுமையுடன்செயற்படுவோம். நம்மிடையே உள்ள கட்சி பேதங்களை மறந்து நிரந்தரமான அரசியல்தீர்வுகிடைக்கும்வரையாவது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எனும் அரசியல் இயக்கம் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். அதுவரை கூட்டமைப்பு உடைந்து போவதை அனுமதிக்கமுடியாது".



இவ்வாறு வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சர்மருத்துவர்ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா கோவில்குளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வீரமக்கள் தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

என்ன நோக்கத்துக்காக நாங்கள் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்தோமோஅந்தநோக்கத்தைஅடையாது திசைமாறிய போராட்டங்களாகமாறியுள்ளமைவேதனைக்குரியது. இன்று முகவரியற்ற சில இணையத்தளங்களிலும்,முகநூல்களிலும் சிலர் எழுதும் அரசியல் கருத்துக்களைப் பார்த்தால் இந்த நாட்டில்இருப்பவர்கள்யாருக்குமே அரசியல்,ஆயுதப்போராட்டம்பற்றிய அறிவில்லாத முட்டாள்கள் போல தங்கள் கருத்துக்களை எழுதுகின்றார்கள்.

எமதுஇளையசந்ததிக்குஎமதுவிடுதலைப்போராட்டத்தின்வரலாற்றை எடுத்துசொல்லவேண்டியகடப்பாடு எங்களுக்கு உள்ளது.

முதற்றடவையாக இன்று வீரமக்கள்தினத்தில்பங்கெடுத்துள்ளேன். அதற்கு காரணம் உள்ளது. அண்மையில்வடக்குமாகாணசபையில் ஏற்பட்டகுழப்பங்களில்விரும்பியோ விரும்பாமலோ நானும் சம்பந்தப்பட்டிருக்கின்றேன். அந்தக்குழப்பத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனுடன் நான் பல தடவை பேசியிருக்கின்றேன்.

எனது அமைச்சுப்பதவி தொடர்பில் நான்எதுவும்பேசவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்ஒற்றுமை பற்றிப் பேசினேன். ஏதோ ஒரு காரணத்துக்காக நாங்கள் தற்போது பிரிந்து செயற்படுகின்றோம். இது பிரிந்து செயற்படுவதற்கான காலமல்ல. போர் முடிந்து 8 வருடங்கள் கடந்து விட்டன. இப்போதும் நாங்கள் ஒருவரையொருவர் குற்றம் சொல்லுபவர்களாகவே இருக்கின்றோம். அவ்வாறு நாங்கள் செய்வதால் மல்லாக்காப் படுத்து துப்புபவர்களாகவேசெயற்படுகின்றோம். தற்போதைய சூழ்நிலையில் நாங்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய காலம். இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் ஏனைய இனங்களைப்போன்று சமதகுதியுடன் வாழ்வதற்கான அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டிய காலம். இந்தச் சந்தர்ப்பத்தைநாங்கள்தவறவிடுவோமாக இருந்தால்எமது இனத்துக்குநாங்கள் செய்யும் மிகப்பெரிய துரோகமாகவே அமையும்.

### தீர்வு சுலபமல்ல

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சொன்னார், 2016 ல் தீர்வு வருமென்று. தற்போது2017ல்தீர்வுவருமென்கிறார்கள். இப்படி முகப்புத்தகங்களில் பலர் பதிவிடுகிறார்கள். தங்களின் ஆதங்கங்களை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள். நிரந்தரமான அரசியல் தீர்வு என்பது அவ்வளவு சுலபமானதல்ல. வடக்கு மாகாண சபையில் ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தோன்றிய பிரச்சினை இதுவரை தீர்க்கப்படாது தொடர்ந்தவண்ணமே உள்ளது. அப்படியிருக்கையில் இரண்டு தேசிய இனங்களுக்கிடையே 60 வருடங்களாகநிலவியபிரச்சினை, இருபகுதியிலும் பலர் உயிர்களை மாய்த்திருக்கின்றார்கள். மனரீதியாக வடுக்களை சுமந்துகொண்டிருக்கின்றார்கள். இரண்டுபகுதியினரும் பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவேண்டும். அண்மையில் இந்தநாட்டின்அரசமைப்பில்முதன்மையான தகுதி வழங்கப்பட்டுள்ள பௌத்த மதத்தின் உயர்பீடங்களைச் சேர்ந்தவர்கள் வெளியிட்ட கருத்து நாங்கள் அனைவரும் அறிந்ததே. ஆகதமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வென்பது சாதாரண விடயமல்ல. தமிழ்மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்குச் சாவால்கள் நிறைந்த காலமிது. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்பேசும் மக்களின் சக்தியாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகநாங்கள்ஒற்றுமையுடன் செயற்படாதுவிட்டால் எமக்கான அரசியல் தீர்வு எம்மைவிட்டு விலகிச்சென்றுவிடும். தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை நமக்கிடையே உள்ள கருத்துவேறுபாடுகளைப் புறந்தள்ளி மக்களின் நலனில் அக்கறைகொண்டவர்களாகஒற்றுமையுடன்செயற்படுவோம்என்றுஉறுதியெடுத்துக்கொள்வோம்-என்றார். (4-402)

---

## மதவாச்சி - தலைமன்னார் இடையே ரயில்சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

மதவாச்சியில் இருந்து தலைமன்னார் செல்லும் தொடருந்துப் போக்குவரத்து இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று மதவாச்சி தொடருந்து கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

வடக்கு தொடருந்துப் பாதையின் சீரமைப்புக்காகவே நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை வரை போக்குவரத்து இடைநிறுத்தப்படும்.

செட்டிகுளம் - மடு சாலையில் உள்ள பாலத்தைச் சீரமைக்கும் வேலைகள் நடைபெறுகின்றன. அதனால் குறித்த பாதையில் செல்லும் தொடருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

தொடருந்து சேவைகள் நடைபெறாத ஒரு வார காலப்பகுதியில் மக்கள் பேருந்தை பயன்படுத்த முடியும்' - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

---

## முகநூலில் சிறு வண்டுகள் வரலாற்றை அறியவேண்டும்

வவுனியா, ஜூலை 18

"விடுதலைப் போராட்டத்தை இயக்கங்கள் ஏன் உருவாக்கியிருந்தன என்பதை அறிந்திராத சிறுவண்டுகள், துப்பாக்கி தூக்கிப் போராடியவர்களைத் துரோகிகளாகவும் இன்னும் பலவாறாகவும் இன்று இணையத்தளங்களிலும் முகநூல்களிலும் தங்களது கருத்துக்களைப்பதிவு செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் போராட்ட வரலாற்றைப் படித்துக்கொள்ள வேண்டும், அறிந்து கொள்ள வேண்டும்".

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனா தெரிவித்தார்.

வவுனியா கோவில்குளம் பகுதியில் அமைந்துள்ள தோழர் க. உமாமகேஸ்வரனின் நினைவுத்தூபியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 28 ஆவது வீர மக்கள்தினநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"1980களிலே போராட்டத்துக்குச் சென்றவர்களில் தற்போது விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில நூறுபேரே சகல இயக்கங்களிலும் இன்று இருக்கின்றார்கள். அவர்களிடம் நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

போராட்டம் என்றால் என்ன, போராட்ட வரலாறு என்றால் என்ன? தமிழீழப் போராட்டம் எப்படி உருவாகியது? அதன் காரணம் என்ன? என்பதை நாங்கள் அறிந்து கொள்ளவேண்டும். சகல கசப்பான சம்பவங்களையும் மறந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக ஒரு குடையின் கீழ் ஓரணியாக நாங்கள் நின்று போராடவேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

---

# ஒற்றுமையாகச் செயற்படுவது தமிழர்களுக்கு அத்தியாவசியம்

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 18

"போராட்ட காலத்தில் இலட்சியத்துடன் உயிர்நீர்த்தவர்களின் ஆத்மா சாந்தியடைய நாம் ஒற்றுமையாக செயற்படவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதனை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும்".

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவித்தார். வவுனியாவில் புளொட் அமைப்பால் வீரமக்கள்தினம்நேற்றுமுன்தினம்கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வில்கலந்துகொண்டுநினைவுரையாற்றும்போது அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமைச்சர் சத்தியலிங்கம் அண்மையில் வடக்கு மாகாண சபையில்ஏற்பட்ட குழப்பகரமானசூழ்நிலையின் போது பதவியைத் துறக்கத் தயாராக இருந்தார். இரண்டு தடவை அவ்வாறு முயற்சித்திருந்தார் . பதவி துறப்புக் கடிதத்தை என் மூலமாகவே கொடுப்பதற்கு முயற்சிசெய்திருந்தார். அப்போது பதவி துறக்கவேண்டாம்என்று அவருக்கு நான் ஆறுதல் கூறியிருந்தேன். அவர் பதவி துறக்கப் போகிறேன் எனக்கூறியது சிறுவிடயம் அல்ல. அவர் வடக்கு மாகாண சபையில் இருக்கின்றபிரச்சினையைத்தீர்ப்பதற்காகவே இவ்வாறான முயற்சியை மேற்கொண்டிருந்தார். அன்றைய நாள்களைப்போல் இன்றும் நாம் ஈழம் என்று கூறிக்கொண்டிருக்கும் நிலைக்குச் சாத்தியமில்லை.

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் அமிர்தலிங்கம் தனிநாடு என்று கூறியிருந்தாலும்கூட 1981 ஆம் ஆண்டு மாவட்டச் சபைகளை ஏற்றுக்கொண்டு ஒருமுயற்சியைஎடுத்துப்பார்த்தார். அது ஒரு மிகப்பெரிய துரிதமான முயற்சி. தமிழ் ஈழத்தைக்கேட்டுத் தமிழ் ஈழ மேடையிலே வென்றவர்கள் ஒரு மாவட்ட சபையை ஏற்கிறார்கள் என்றால் அது ஒரு மிகப்பெரிய துரோகமாகவே அப்போது பார்க்கப்பட்டிருக்கும். இருந்தாலும் பெருந்தொகையான மக்கள் அதற்கு வாக்களித்துவடக்கு-கிழக்கில்தமிழர் விடுதலைக்கூட்டணியை வெல்ல வைத்தார்கள்.

அமைதியான நியாயமான உரிமைகளைப்பெற்றுவாழத்தான் அப்போது மக்கள் விரும்பினார்கள். அன்றைய சூழ்நிலையில் தொடர்ந்தும் ஆயுதபோராட்டங்கள் நடைபெற்றிருந்தாலும், பிரபாகரனுடைய விடுதலைப்புலிகள் இயக்கம் மிகப்பெரும் பலம்பொருந்திய இயக்கமாக உலகத்திலே யாருமே பார்த்து வியக்கக் கூடியளவுபயப்படக்கூடியஇயக்கமாகவளர்ந்திருந்தது. அந்த இயக்கத்தால் அடையமுடியாத ஒரு விடயத்தை இனி ஒருஆயுதப்போராட்டத்தால்நிச்சயமாக முடியாது. ஆயுதப்போராட்டம் ஒன்றைச் சிலவேளை களில் தெற்கிலே இருக்கக்கூடிய பேரினவாதச் சக்திகள் விரும்பலாம். எஞ்சி இருப்பதையும் அழித்து முடித்துவிட அவர்கள்விரும்பலாம். ஆனால்இன்றுநியாமானதீர்வு ஒன்றைப் பேச்சு மூலமாகவோ அல்லது சாத்வீகப் போராட்டங்கள்மூலமாகவோதான் அடையவேண்டும் - அடைய முடியும். பல அழிவுகளைச் சந்தித்திருக்கின்றோம்.

30வருடகாலமாகமிகப்பெரியஅழிவுகளைச் சந்தித்து வந்த நாங்கள் மீண்டும் ஒரு ஆயுதப்போராட்டத்தைச் சிந்திப்போமாக இருந்தால்எம்முடைய இனம்அழிந்துவிடும் - என்றார். (4-402)

---

## பின்தங்கிய பிரதேசங்களில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு நாவலர் விருது

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்குமாகாணத்தில்பின்தங்கிய பிரதேசத்தில் ஆசிரியப் பணி மேற்கொண்டுஇளைப்பாறியவர்களுக்குஆசிரியருக்கான ஆறுமுகநாவலர்விருதுவழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்குமாகாணத்தில்15 வருடங்களுக்கு மேல் பின்தங்கிய பிரதேசங்களில் ஆசிரியப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் எதிர்வரும் 20ஆம்திகதிவியாழக்கிழமைக்கு முன்பாகவிண்ணப்பிக்கவேண்டும்.

விண்ணப்பதாரிகள் சகல ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு யாழ்பாண வை.எம்.சீ.ஏ. கோரியுள்ளது.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஆசிரியருக்கான ஆறுமுகநாவலர்விருதும் பொற்கிளியும்வழங்கப்படும். விண்ணப்பங்களை வை.எம்.சீ.ஏ , 109 , கண்டி வீதி ,யாழ்ப்பாணம் எ னும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் jaffnaymca@gmail.com எனும் முகவரிக்கோ அனுப்பிவைக்கலாம் என சங்கத்தின் பொதுசெயலாளர் கேட்டுள்ளார். (21-50)

யாழ்ப்பாணம், மன்னாரிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது

# அம்மாச்சி உணவகம்

## மாகாண விவசாயப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம் ஜூலை 17

“வடக்கு மாகாண விவசாய அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட அம்மாச்சி உணவகம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்த உணவகம் யாழ்பாணம், மன்னார் மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்;

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட அம்மாச்சி உணவகம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அம்மாச்சி உணவகத்தில் பாரம்பரியமான உணவு வகைகள் தயாரிக்கப்படுவதால் ஏராளமான மக்கள் மிகுந்த ஆர் வத்துடன் தமக்கான உணவுகளை வாங்கிச் செல்கின்றனர்.

மனிதர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை வழங்கிவரும் வகையிலான பாரம்பரிய உணவு முறைகளைப் பின்பற்றி உணவுகள் தயாரிப்பதால் நாளாந்தம் நுகர்வோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகின்றது.

அம்மாச்சி உணவகம் வரையில் வடக்கு மாகாணத்தில் வவுனியா.முல்லைத்தீவு.கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் வவுனியாவில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்தில் நுகர்வோ ரின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றது.

இதற்கு அடுத்த படியாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அம்மாச்சி உணவகமும். அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற அம்மாச்சி உணவகமும் காணப்படுகின்றது.

வடக்கு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி வரும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அம்மாச்சி உணவகம் மிக விரைவில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அம்மாச்சி உணவகத்தில் விற்பனை செய்யப்படுகின்ற உணவுப் பண்டங்களுக்கு பொதுவான விலைப்பட்டியல் தெரிவு செய்யப்பட வேண்டும் என விவசாய அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய ஒரு சில உணவுப் பண்டங்களுக்கு பொதுவான விலைப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது-என்றார்.

(21-8)

# வடக்கில் இம்முறை விதை நெல்லுக்கு பற்றாக்குறை ஏற்படும்

## வடக்கு பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

‘கடந்த காலபோக நெற்செய்கையில் ஏற்பட்ட அழிவால் இம்முறை விதை நெல்லுக்குப் பற்றாக்குறை ஏற்படலாம். எனவே விவசாயிகள் பெரும்போக நெற்செய்கைக்குத் தற்போதே முன்மாதிரியான தயார்ப்படுத்தலில் ஈடுபட வேண்டும்’.

இவ்வாறு வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் போக நெற்செய்கைக்கு விவசாயிகள் தற்போதே தயாராக வேண்டும். செய்கையாளர்கள்தமதுவயல்நிலங்களைச் சீர்செய்தும் அதற்கான விதை நெல்லைத் தற்போதே கொள்வனவு செய்து தயாராக இருக்க வேண்டும்.

சுமார் 12 ஆயிரம் வரையிலான ஹெட்ரேயர் நிலப்பரப்பில் இந்த முறையும் விவசாயிகள் பெரும் போக நெற்செய்கையில் ஈடுபடவுள்ளனர். செப்ரெம்பர் மாத கடைசியில் நெற்செய்கையை அநேகமான விவசாயிகள் மேற்கொள்வார்கள். செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்மாதிரியாக விவசாயிகள் தற்போதே செய்கைக்கான தயார்ப்படுத்தல்களை ஆரம்பிக்க வேண்டும். முக்கியமாக விதை நெல்களை விவசாயிகள் தற்போதே கொள்வனவு செய்து வைத்திருக்க வேண்டும். செய்கை ஆரம்பிக்கும் காலப்பகுதியில் விதை நெல்லுக்கு விவசாயிகள் அலைந்து திரிவதை தவிர்க்க வேண்டும்.

குறிப்பாக பரந்தன் விவசாய திணைக்களம் மற்றும் குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் விதை நெல் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அவை நெற் செய்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

2016 ஆம் ஆண்டு பெரும்போகத்தின் போது போதிய மழை வீழ்ச்சி இல்லாமையால் நெற்செய்கை பாதிக்கப்பட்டது. இதனால் இந்த முறை விதை நெல்லுக்கும் பற்றாக்குறை ஏற்படலாம்-என்றார்.

(21-17)

## இருதய நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவுகள்



* கொழுப்புக் கூடிய உணவுகளான மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, தோலுடனான கோழி இறைச்சி பொரித்த உணவுகள், பட்டர், மாஜரின், முட்டை மஞ்சள் கரு, இறால், நண்டு கணவாய்.
* அதிக உப்பு சேர்க்கப்பட்ட உணவுகளான, கருவாடு, ஊறுகாய், மோர் மிளகாய், பொரித்த உணவுகள், ரின்மீன் போன்றவை.
* சமைக்கும்போது அதிக உப்பு சேர்ப்பதைத் தவிர்த்தல்.
* தேங்காய், தேங்காய்எண்ணெய், மரக்கறி எண்ணெய்பாவனையை முடிந்தவரை குறைத்தல்
* தேங்காய்ப் பாலில், முதல்பாலை தவிர்த்து மற்றைய பாலை பயன்படுத்தல்
* அதிக இனிப்பு, மாப்பொருள் உணவுகளை உள்ளெடுப்பதைத் தவிர்த்தல்
* சொக்லட் மிக்சர் போன்றவற்றை அடிக்கடி உண்பதைத் தவிர்த்தல்.

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*

## வருமான வரிப் பரிசோதகர்களாக சிற்றூழியர்கள் 6 பேருக்கு பதவியுயர்வு

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றிய 6 பேர் வருமான வரிப் பரிசோதகர்களாகப் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாகக் காணப்பட்ட வருமான வரிப் பரிசோதகர் பதவிகளுக்கு மாகாண சபையால் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்குக் கடந்த மாதம் மாகாணபொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் நியமனம் வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் சிற்றூழியர்களிடையே நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற ஆறு பேருக்கு கடந்த வாரம் பதவியுயர்வுக்கான நியமனம் வழங்கப்பட்டு உள்ளூராட்சி சபைகளில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(4-9)

# வடக்கு மாணவர் நாடாளுமன்றம் விரைவில் உருவாக்கப்படவேண்டும்

## *மாகாணக் கல்விச் செயலாளர் வலியுறுத்து*

தென்மராட்சி, ஜூலை 17

“தேசிய நிலை மாணவர் நாடாளுமன்றம் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் கூடவுள்ளதால் அதற்கு முன்னர் வடக்கு மாகாண மாணவர் நாடாளுமன்றம் உருவாக்கப்படல் வேண்டும்” என்று வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தென்மராட்சி கல்வி வலயத்தின் மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வுக்கு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்களின் கல்வி நிலையில் காணப்படும் அடைவுகளுக்குக் காரணங்களைக் கண்டறியும் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்ட கொழும்பு கல்வி அமைச்சு, மாணவர் நாடாளுமன்றங்களை உருவாக்கி அதன் மூலம் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், சமூகம் போன்றவற்றை உள்ளடக்கும் விதத்திலான செயற்பாடுகளை மேற்கொள்வதே நோக்கமாகக் கொண்டுள்ளது. வகை 1 ஏபி 1 சீ, வகை 11 பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு செயற்படல் வேண்டுமென எமக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த 3 வருடங்களில் உருவாக்கப்பட்டுள்ள 23 மாணவர் நாடாளுமன்றம் ஒவ்வொன்றும் சிறப்பாக இயங்குகின்றன.

நிகழ்வில் மாணவர்கள் முன்மொழிந்த கருத்துக்கள் எல்லாம் பாடசாலைகளின் தேவைகளைச் சுட்டிக் காட்டுவனவாகக் காணப்பட்டன.

கல்வி அமைச்சின் 21ஆம் நூற்றாண்டு கல்விக் கொள்கையின் பிரகாரம் மாணவர்கள் ஆழமாகக் கற்றல் மற்றும் கற்றலுக்கூடாக தலைமைத்துவத்தை வளர்த்தல் போன்றவையை மேம்படுத்த மாணவர் நாடாளுமன்றங்கள் பெரிதும் உதவுமென வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களில். யாழ்ப்பாணம் மற்றும் தென்மராட்சி கல்வி வலயங்களில் வலய நாடாளுமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய கல்வி வலயங்களில் விரைவில் வலய நிலை நாடாளுமன்றங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு வலய மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தலா 2 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு 24 பேர் வடக்கு மாகாணத்திலிருந்து தேசிய மாணவர் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் -என்றார்.

(21-9)

# வீடமைப்புக் கடன் திட்டம் இனி நிபந்தனைகளுடன்

## அதிகார சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

“வீடுகளைத் திருத்தியமைப்பதற்கும் புதிதாகக் கட்டுவதற்கும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் எதுவித நிபந்தனையுமின்றிக் குறைந்த வட்டியுடன் கடனைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் அதனைத் திரும்பச் செலுத்த முன்வரவில்லை. இதனால் புதிதாகக் கடனுக்கு விண்ணப்பிப்ப வர்களுக்கு கடன் வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது”.

இவ்வாறு அதிகாரசபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடன் மீளச் செலுத்தப்படாததால், எதிர்காலங்களில் அரச உத்தியோகத்தர்களின் பிணையுடன் பயனாளிகளுக்குக் கடன் வழங்குவது குறித்துச் சம்பந்தப்பட்டவர்கள் ஆலோசித்து வருகிறார்கள். தேசிய ரீதியாக மக்களின் நலன்கருதி வீடுகளைத் திருத்துவதற்கும் புதிதாகக் கட்டுவதற்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் எந்தவித நிபந்தனையு மின்றிக் குறைந்த வட்டியுடன் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 2015, 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வீடுகளைத் திருத்துவதற்கும் கட்டுவதற்கும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான பயனாளிகளுக்கு 3.67 வீத வட்டியுடன் எதுவித நிபந்தனையு மின்றி யாழ்ப்பாண மாவட்ட தே.வீ.அ.சபையி னால் ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து 5 இலட்சம் ரூபா வரை கடன் வழங்கப்பட்டுவந்தது. பெரும்பாலான பயனாளிகள் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த முன்வராமையால் 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடனுக்கு விண்ணப்பித்த பயனாளிகளுக்குக் கடனை வழங்கமுடியாத நிலை அதிகார சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு வசதியாக எதிர் காலங்களில் கடனுக்கு விண்ணப்பிப்ப வர்களுக்கு அரச உத்தியோகத்தர்களின் பிணையுடன் கடன் வழங்குவது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆலோசித்து வரு கிறார்கள்என தெரியவருகின்றது.

(21-115)

# 20 மில்லியன் ரூபா செலவில் திருமலையில் 38 திட்டங்கள்

திருமலை, ஜூலை 18
திருகோணமலை மாவட்டத்தில் 38 அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டுக்கான சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சினால் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அவர் விளக்கமளித்தார்.

திருகோணமலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் செய்யப்படாமலும் இருக்கின்ற பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்காக மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, மூதூர், தம்பலகாமம், கந்தளாய், வெருகல், குச்சவெளி, கிண்ணியா மற்றும் தோப்பூர் உள்ளிட்ட பல பகுதிகளில் பாடசாலை அபிவிருத்தி, குழாய் நீர் கிணறுகள், வீதி அபிவிருத்தி என பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மக்கள் பிரநிதிகளின் திட்ட மும்மொழிவுகளுக்கு அமைய 38 வேலைத்திட்டங்கள் இதன்மூலம் நடைமுறைப்படுத்தவுள்ளன என அவர் மேலும் கூறினார். (த-ய-46)

# பொறுமைக்கும் எல்லை உண்டு


## அரசை எச்சரிக்கிறார் வாசுதேவ

கொழும்பு, ஜூலை 18
பல்வேறு காரணங்களைக் கூறி அரசு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திவைத்து வருகிறது எனவும் இதனைப் பொறுத்து கொள்வதற்கும் ஒரு எல்லை இருக்கின்றது எனவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணி கொழும்பில் நேற்றுக் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் அலரி மாளிகையில் தலைமை அமைச்சருடனான சந்திப்பு நடந்த காரணத்தால், கூட்டு எதிர்க்கட்சி அந்தப் பேச்சில் கலந்து கொள்ளவில்லை.



நீண்டகாலம் செல்லும் முன்னர் தேர்தல் செயலகம் அருங்காட்சியகமான மாறிவிடும்.

தேர்தல் நடத்தப்படாமல் உள்ளூராட்சிச் சபைகள் செயலிழந்துள்ளன. இதனால், இனிவரும் காலங்களில் அரசு உணரும் வகையில் அழுத்தம் கொடுக்க எண்ணியுள்ளேன்.

தனியார் ஊடகங்கள் அரசின் நிலைப்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்றன.

எதிர்க்கட்சிகளின் செய்திகளை வெளியிடும்போது தொடர்ந்தும் அரசை விமர்சிப்பதால், ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது-என்றார். (த)

# தாய்லாந்தில் இருந்து 2லட்சம் தொன் அரிசி

கொழும்பு, ஜூலை18
இலங்கையில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வுகாண தாய்லாந்திடமிருந்து 200,000 தொன் அரிசியை அரசு இறக்குமதி செய்யவுள்ளது.

இதற்கான பேச்சுக்கள் இடம் பெற்று வருவதாக தாய்லாந்து வர்த்தக அமைச்சின் வெளிநாட்டு வர்த்தக திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கீரடி ருச்சானோ தெரிவித்துள்ளார் என அந் நாட்டு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை வறட்சி மற்றும் வெள்ளம் முதலான இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டுள்ளதால் அரிசியைக் கொள்வனவு செய்யவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடந்த 2016 ஆம் ஆண்டிலும் தாய்லாந்திடமிருந்து அரிசியை இறக்குமதி செய்துள்ளது. (த-ய)

# சுவாமி விபுலானந்தரின் ஆவணப்படம் வெளியீடு

மட்டக்களப்பு, ஜூலை 18
முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படும் சுவாமி விபுலாநந்தரின் 125ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு டிஜிற்றல் முறையில் தயாரிக்கப்பட்ட ஆவணப் படத்தின் வெளியீடு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆவணப் படத்தைச் சிவானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவரான பாபு வசந்தகுமார் என்பவர் தயாரித்துள்ளார். (த-ய-46)

## போலி லொத்தர் சீட்டுகள்:

# முறைப்பாட்டை ஏற்பதற்கு பொலிஸ்மா அதிபர் மறுப்பு

கொழும்பு, ஜூலை 18
போலி லொத்தர் சீட்டுகள் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருவது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைத்த முறைப்பாட்டை அவர் விசாரணைக்கு உட்படுத்தாமல், அதை தேசிய லொத்தர் சபைக்கு அனுப்பியுள்ளார் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ள்து.

போலியாக லொத்தர் சீட்டுகளை அச்சிட்டு விநியோகித்தல் சட்டப்படி குற்றமாகும். இந்தக் குற்றத்தைப் புரிந்தவர்களைக் கண்டுபிடித்து நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் அதிகாரம் பொலிஸ்மா அதிபருக்கு உள்ளது.

எனினும், அவர் இந்த முறைப்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்காமல் அதை தேசிய லொத்தர் சபைக்கு அனுப்பி வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என அந்த அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொவி செத' லொத்தர் சீட்டுக்கள் போலியாக அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்திருந்தார். எனினும் அவர் இது பற்றிய முறைப்பாடொன்றைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கவில்லை என அயலுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், பொதுமக்களின் நலன்கருதி நாங்கள் பொலிஸ்மா அதிபருக்குச் செய்த எழுத்துமூல முறைப்பாடும் அவரால் உதாசீனம் செய்யப்பட்டிருப்பது வருத்தத்துக்குரியது. இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு மீண்டும் கடிதமொன்றை அனுப்பவுள்ளோம் -என்றார். (த-ய)

வேலையாள்கள் தேவை
கட்டட நிர்மாணமொன்றுக்கு
மேசன், கூலியாள்கள் தேவை.
076 883 7021



அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம்
பண்டித் துளசிராம் சுவாமி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள் வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த தேதி நட்சத்திரம் ஜாதகம் ஆகியவற்றைக்கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை. நடக்கப்போகின்றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை. லட்சுமிகடாச்சப் பூஜைகள் எல்லா தோசங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும் படிப்பு தொழில். திருமணயோகம். குழந்தைப்பாக்கியம். வெளிநாட்டுப்பயணம். வீடு கட்டுதல் கணவன் மனைவி ஒற்றுமை. காதல் பிரச்சனை. பாலியல் பிரச்சனை. கல்யாணயோகம். வாஸ்திரம் மற்றும் பிரச்சனைகள் எதிரிகள் கண்திருஸ்டி கோட் வழக்குகள். வாகனப்பொருத்தம். பணப்பிரச்சினை. பிள்ளைகள் குடும்பத்துடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல் லொற்றரி பாக்கியம் மற்றும் வசிகரம் செய்யப்படும் ராசிக்கற்கள் பார்த்துச் சொல்லப்படும். எண்கணிதப்படி மணமக்கள் பொருத்தம் பார்க்கப்படும் நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள். **காலை 9.00 - மாலை 7.00**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (முல்லை சந்தி)
077 218 6324

# சாவகச்சேரி பிரதேச சபை
# சபை நிதி வேலைத்திட்டத்திற்கான கேள்வி கோரல்

01. தலைவர். பெறுகைக்குழு. சாவகச்சேரி பிரதேச் சபை. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமாண வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD)பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் (தொலைபேசி:021-3734825, 021-2050356, தொலைநகல்: 021-2050356, மின்னஞ்சல்** - chavakachcherips1@yahoo.com ) இல் இருந்து 09.08.2017 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம்** எனும் இடத்திலிருந்து 18.07.2017 ஆம் திகதியிலிருந்து 09.08.2017 வரை காலை 09.00 மணிக்கும் பிற்பகல்14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர்/செயலாளர். சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு 09.08.2017 திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது நாள்கள் . 27.09.2017 ) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/ 2/C.F/2017/1 | இலுவன் மிருசுவில் இணைப்பு வீதி | 1.302 | 2 மாதம் | C9 | 13100.00 | 25.10.2017 |
| NP/14/41(6)/ 2/C.F/2017/2 | அண்ணமார் வீதி கைதடி | 1.300 | 2 மாதம் | C9 | 13000.00 | 25.10.2017 |
| NP/14/41(6)/ 2/C.F/2017/3 | கரம்பகம் கொற்பிட்டி வீதி | 1.299 | 2 மாதம் | C9 | 13000.00 | 25.10.2017 |
| NP/14/41(6)/ 2/C.F/2017/4 | முனியப்பர் வீதி நாவற்குழி | 1.296 | 2 மாதம் | C9 | 13000.00 | 25.10.2017 |
| NP/14/41(6)/ 2/C.F/2017/5 | அப்பக்கொட்டில் வீதி - மீசாலை | 1.283 | 2 மாதம் | C9 | 13000.00 | 25.10.2017 |
| NP/14/41(6)/ 2/C.F/2017/6 | வினோபா சங்கத்துறை முக வீதி –கச்சாய் | 1.301 | 2 மாதம் | C9 | 13100.00 | 25.10.2017 |

10. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 31.07.2017 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,சாவகச்சேரி பிரதேச சபை,கொடிகாமம்.** 17.07.2017

கொட்டகலைப் பாலத் திருத்தப்பணியால்

# கொழும்பு-மலையக ரயில் சேவையில் தடங்கல் நிலை

பொகவந்தலாவை, ஜூலை 18
ரயில் தடம்புரண்டதால் சேதமடைந்த கொட்டகலை 60 அடிப் பாலம் புனரமைக்கப்பட உள்ளது. இதனால் கொழும்பு மற்றம் மலையத்துக்கான ரயில் சேவை மூன்று வாரங்களுக்குத் தடைப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.
பாலத்தின் பழைய இரும்புகள் அகற்றப்பட்டு புதிய இரும்புகளைக் கொண்டு பாலம் புனரமைக்கப்படவுள்ளது.
கடந்த 12ஆம் திகதி கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த இரவு நேர தபால் ரயில் 60 அடி பாலத்தில் தடம்புரண்டதால் பாலத்துக்குப் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.
இதனால் 6ஆவது நாளாகவும் கொழும்புக்கும் மலையகத்துக்குமான ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (த-ய)

# தனியார்துறை நிபுணர்களுக்கு 4 ஆயிரம் வீடுகள் நிர்மாணம்

கொழும்பு, ஜூலை 18
தனியார்துறையிலுள்ள தொழில்சார் நிபுணர்களுக்காக நான்காயிரம் வீடுகளை அமைப்பதற்கு பெருநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தீர்மானித்துள்ளார்.
பொரளை, ஊறுகொடவத்தை, மஹரகம, தலவத்துகொட, கம்பஹா, கண்டி மற்றும் அநுராதபுரம் பகுதிகளில் இந்த வீட்டுத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன. அவற்றில் நவீன சந்தைகள், நீச்சல் குளங்கள், கிரிக்கெட் மைதானங்கள், பிள்ளைகளுக்கான ஓய்வு விடுதிகள் போன்றவை உள்ளடக்கப்படும்.
அரச தொழில்சார் நிபுணர்களைப் போலவே தனியார் நிபுணர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது அவசியம் என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (த-ய)

# பலத்த காற்றுடனான காலநிலை தொடரும்

கொழும்பு, ஜூலை 18
அடுத்துவரும் சில தினங்களுக்கு நாட்டின் ஒரு சில பகுதிகளில் மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை செய்துள்ளது.
வடமத்திய, ஊவா மாகாணங்களிலும், மாத்தளை, அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகம் அதிகமாக இருக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.
ம்ன்னாரிலிருந்து புத்தளம் வழியாக கொழும்பு வரையிலும், மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலுமான கடற்பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும். அங்கு காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசலாம். கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-ய)

# ஒழுக்க விதிகளை மீறும் எம்.பிக்களைத் தண்டிக்க சட்டம் விரைவில் வரும்

கொழும்பு, ஜூலை 18
நாடாளுமன்றத்தில் ஒழுக்கத்தை மீறிச் செயற்படும் உறுப்பினர்களுக்கு கடும் தண்டனையளிப்பதற்குரிய சட்டத்தைத் தயாரிக்கவுள்ளதாக, நாடாளுமன்றப் பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார்.
களுத்துறையில் இடம்பெற்ற நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்கான இரு நாள் செயலமர்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளைத் திருத்துவதன் மூலம் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.



இதன்படி, நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் உறுப்பினர்களுக்கு எட்டு வாரங்களுக்கு நாடாளுமன்றத்திற்குள்பிரவேசிப்பதற்குத் தடைவிதிக்கக் கூடிய வகையில் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவிருக்கின்றதுஎன்றார். (த)

# காட்டுத் தீயால் 50 ஏக்கர் நாசம்

மொனராகலை, பொல்கல்வ காட்டுப் பகுதியில் நேற்று பிற்பகல் (16) ஏற்பட்ட தீயினால் 50 ஏக்கர் எரிந்து நாசமாகியுள்ளதாக, மெதகம பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், தீ ஏற்பட்டதற்கான காரணம் இன்னும் அறியப்படவில்லை எனவும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை மெதகம பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும்
நாகப்பர் குகதாசன் அவர்களின் அன்புத் தாயார்
**மகேஸ்வரி நாகப்பர்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகம்.**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ஞானசோதி (செகசோதி)

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஞானசோதி 16.07.2017 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு வேலுப்பிள்ளை – அன்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – சுந்தரம் தம்பதிகளின் மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, இரத்தினசோதி மற்றும் சிவசோதி, அருட்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தினி (கனடா), ஞானகுமார் (கொழும்பு), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகராசா, கவிதா, சுகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், தாசனா, அரவிந் சகானா, ஹரிஸ், தணிஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No: 355, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்
**வே.அருட்சோதி**

**076 686 7691, 00141 632 10866**

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி பொன்னாபரணம் [சின்னக்கிளி] இராசநாயகம்

*தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னாபரணம் (சின்னக்கிளி) - இராசநாயகம் அவர்களின் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.*



**தோற்றம்**
**12.07.1942**

**மறைவு**
**26.06.2017**

**“அம்மா உங்கள் சிரித்த முகம் எங்கள் மனதில்**
**என்றும் மறைந்ததில்லை**
**நின்றாடும் நினைவில் நிழலாக**
**தொடர்கிறதே அம்மா ”**
**ஆத்மா அழியாது என்று அறிந்திருந்தும் ஆறமுடியவில்லை**
**அம்மா உங்கள் பிரிவுதனை ஆழமாக பார்த்தால்**
**அம்மாவின் ஆத்மா என்றென்றும் நிலைத்திருக்கும்**
**நின்றெம்மைக் காத்திடுமே**

எம்மை வாழவைத்த எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
அன்னாரின் இழப்புச் செய்தியைக் கேட்டு எம்முடன் சேர்ந்து துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 16.07.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிரியை இன்று (18.07.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்விலும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

*“ இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.“*

**நெல்லொருபதி பிள்ளையார் கோயில் வீதி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**
**021 205 2648**

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## ஒன்பதரை லட்சம் பேர் வறட்சியினால் பாதிப்பு

கொழும்பு, ஜுலை17

நாட்டில் நிலவிவரும் கடும் வறட்சியால் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 9 இலட்சத்து 60ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். கடந்த மூன்று மாத காலமாக நிலவும் இந்த வறட்சியான காலநிலையால் மன்னார், புத்தளம், குருநாகல், பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு 150 பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் அந்த மக்களுக்கு ஆறாயிரம் நீர்த் தாங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவிகளுக்காக அரசு 38 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருக்கின்றது என்றும் அவர் மேலும் கூறினார். (த-ய)

# அரசுடன் இணைய பொது எதிரணியில் 40 பேர் காத்திருப்பு

### 15 பேர் விலகிச் சென்றாலும் பரவாயில்லை என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜுலை 18

அரசில் இருந்து 15பேர் விலகிச் சென்றாலும் அரசுடன் இணைவதற்கு 40பேர் அளவில் காத்துக்கொண்டு இருக்கின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசை எப்படியாவது வீழ்த்திவிடவேண்டும் என்று சிலர் கனவு காண்கின்றனர். அது ஒருபோதும் நடக்காது. இந்த அரசில் இருந்து எத்தனை பேர் விலகிச் சென்றாலும் அரசை எதுவித சிக்கலும் இன்றி நடத்திச் செல்லும் பலம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் உண்டு. நாடாளுமன்றில் எமக்குப் பெரும்பான்மைப் பலம் உண்டு.

15பேர் விலகினால் 40பேர் அரசுடன் இணைவதற்கு

> “பாம்புகள் ஆடுகின்ற போது அவற்றின் பற்களை மைத்திரி பிடுங்கி இருக்கவேண்டும். அந்தப் பாம்புகள் அவரையே தீண்ட வருகின்றன. இவர்கள் மைத்திரியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு வரவில்லை. அவரைக் கவிழ்க்கவே வந்துள்ளனர்.”

எப்போதும் தயார் நிலையில் இருக்கின்றனர். மைத்திரியை அரசதலைவராக்கியது ஐக்கிய தேசிய கட்சி. அந்தக் கட்சிதான் அவரைத் தொடர்ந்தும் பாதுகாக்கப் போகின்றது. இந்தக் கட்சியின் முக்கியத்துவத்தை மைத்திரி இனியாவது புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கட்சியை எவ்வாறு கவனிக்கவேண்டும் என்று விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாம்புகள் ஆடுகின்றபோது அவற்றின் பற்களை மைத்திரி பிடுங்கி இருக்கவேண்டும். அந்தப் பாம்புகள் அவரையே தீண்ட வருகின்றன. இவர்கள் மைத்திரியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு வரவில்லை. அவரைக் கவிழ்க்கவே வந்துள்ளனர்.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியே மைத்திரியின் பாதுகாவலனாக இருந்தது. நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் நாமேதான் அவரைப் பாதுகாப்போம். இந்த நல்லாட்சி அரசு 2020வரை எதுவித சிரமமுமின்றிப் பயணிக்கும். அதை யாரும் தடுக்க முடியாது. இந்த அரசைக் கவிழ்ப்பதற்குத் திட்டமிடும் மகிந்த அணியால் ஒரு போதும் ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சி அமைக்க முடியாது - என்றார். (த)

## இந்திய வீட்டுத்திட்டத்துக்கு பதுளையில் அடிக்கல் நடுகை

இந்திய அரசின் உதவியுடன் பதுளைப் பகுதியின் லெஜர் வத்தை பெருந்தோட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 125 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.அரவிந்தகுமார், வடிவேல் சுரேஸ், எம். திலகராஜா, இந்தியத் தூதரகம் சார்பில் மஸ்ஜித் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மலைநாட்டுப் புதிய கிராமங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ், புதிய வீடமைப்புக்கான பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டதுடன் லெஜர்வத்தைக்கான புதிய பாதையும் திறந்து வைக்கப்பட்டது. (த)

## மகிந்த இல்லையேல் எமக்கும் வேட்பாளர் நியமனம் வேண்டாம்

### கூறுகின்றார் ரஞ்சித் சொய்சா எம்.பி.



கொழும்பு, ஜுலை 18

எதிர்வரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி மகிந்த ராஜபக்சவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்குவதற்கு மறுத்தால் மகிந்த அணியில் உள்ள எவருக்கும் வேட்பாளர் நியமனம் வேண்டாம். அன்றுதான் நாம் சுதந்திரக் கட்சியில் இருந்து விலகுவோம் என்று அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசின் ஆயுள் குறுகியது. மிக விரைவில் நாம் இந்த அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றுவோம். நாட்டு மக்களுக்கு இந்த அரசு மீது வெறுப்பு வந்துவிட்டது. அரசின் செயற்பாடுகள் அனைத்தும் மக்கள் விரோதச் செயற்பாடுகளாகவே உள்ளன.

புதிய ஆட்சி மலர்ந்தது முதல் நாட்டைப் பிரித்து தமிழீழத்தை உருவாக்கும் செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. அதற்காகவே புதிய அரசமைப்பும் கொண்டுவரப்படவுள்ளது. பௌத்த மதத்துக்குக்கூட ஆபத்து ஏற்பட்டுள்ளது. மகிந்தவின் முக்கியத்துவத்தை மக்கள் இப்போது உணரத் தொடங்கியுள்ளனர்.

மக்களின் செல்வாக்கு மகிந்தவுக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்வதால் அவரை அரசியலில் இருந்து முற்றாகத் துடைத்தெறிவதற்கு முயற்சி செய்கின்றனர். மகிந்த குடும்பத்தைக் கூண்டோடு சிறையில் தள்ளுவதற்குச் சதிகள் இடம்பெறுகின்றன. கோத்தபாயவைக் கைது செய்வதற்கு இந்த அரசு வகுத்துள்ள திட்டம் கசிந்துள்ளது.

இனிவரும் தேர்தல்களில் மகிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படமாட்டாது என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்சவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்குவதற்கு மறுத்தால் மகிந்த அணியில் உள்ள எவருக்கும் வேட்பாளர் நியமனம் வேண்டாம். அன்றுதான் நாம் சுதந்திரக் கட்சியில் இருந்து விலகுவோம் - என்றார். (த-3)

## கம்பகா மாவட்டத்தில் 12,000 டெங்கு நோயாளர்

கொழும்பு, ஜுலை 18

கம்பகா மாவட்ட சுகாதார அதிகாரப் பிரிவில், இதுவரை 12 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், நீர்கொழும்புப் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் உள்ளமை பதிவாகியுள்ளதாக கம்பகா மாவட்டச் சுகாதார சேவைகள் பணியகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் இடையிடையே மழை விட்டு விட்டுப் பெய்வதால் இந்த நிலை தொடர்ந்தாலும், பொது மக்களின் போதிய ஒத்துழைப்பு இன்னும் சரியான முறையில் கிடைக்காததும், டெங்கு நோய்த் தொற்று இவ்வாறு பெருகக் காரணமாக அமைந்துள்ளதாக கம்பகா சுகாதார சேவைகள் பணியகத்தின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ரொஹான் ரணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நீர்கொழும்புப் பிரதேசத்தில் டெங்கு நோய் தொற்று மிகவும் உக்கிரம் அடைந்துள்ள நிலையில், கடந்த ஆறு மாத காலப் பகுதிக்குள், நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் மாத்திரம், டெங்குக்குச் சிகிச்சை பெற்று வந்த எட்டு பேர் இது வரை உயிரிழந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

### ஊழல் ஒழிப்பு அலுவலகம் மூடல்;

## நாடாளுமன்றில் ஒரு நாள் விவாதம் கோரும் ஜே.வி.பி.

கொழும்பு, ஜுலை 18

மூடப்பட்ட ஊழல் ஒழிப்புக் குழு அலுவலகம் தொடர்பாக ஒருநாள் நாடாளுமன்ற விவாதத்தை ஒழுங்குசெய்யுமாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தச் செயலகம் உட்பட அரசின் ஊழலுக்கு எதிரான போராட்டத்தை செயலிழக்கச் செய்யும் செயற்பாடுகள் குறித்து பேச உள்ளதாகவும், விவாதத்தை அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் ஏற்பாடு செய்யுமாறும் அவர் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். சட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனங்களைச் செயலிழக்கச்செய்து விசாரணைகளைச் சீர்குலைக்க அரசு நடவடிக்கை எடுக்குமாயின் கட்சி என்ற வகையில் மக்கள் விடுதலை முன்னணி கடும் நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அனுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டார். (த-ய)

# பொலித்தீன் தடை வரவேற்கத்தக்கது அதில் அவசரத் தன்மை தேவையற்றது

### பிவித்துரு ஹெல உறுமய கட்சி கருத்து



கொழும்பு, ஜுலை17

பொலித்தீனுக்கு அரசு விதித்திருக்கும் தடை வரவேற்கத்தக்கது. எனினும், அதை அவசர அவசரமாக செயற்படுத்த முனைந்திருப்பது தவறாகும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கட்சியின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்தாவது:

நான் மாகாண சபையின் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது எனது அமைச்சில் பொலித்தீன் பொருள்களைப் பாவிப்பதற்குத் தடை விதித்திருந்தேன். இறப்பு வீடுகளில் செய்யும் அலங்காரங்களுக்குப் பொலித்தீனுக்குப் பதிலாகத் துணிகளைப் பாவிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அந்த அடிப்படையில் அரசு இந்தப் பொருள்களுக்கு விதித்துள்ள தடையை வரவேற்கிறேன்.

அதேவேளை, ஆறு வாரங்களுக்கும் குறைந்த காலப் பகுதியில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இதற்கான மாற்று வழியொன்றை அறிமுகம் செய்யாமல் அதிரடியாகத் தடையை விதித்ததால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகும். குறைந்தபட்சம் மூன்று மாதகால அவகாசமாவது கொடுக்கப்படவேண்டும்.

நல்ல திட்டங்களைக்கூட அவசர அவசரமாகச் செய்வதன் மூலம் அரசு மக்களின் அன்றாட நடவடிக்கைகளைச் சீர்குலைத்து வருகிறது. பின்விளைவுகளை யோசிக்காமல் அதிரடியாகச் செய்யப்பட்ட இந்த முடிவின் பலாபலன்கள் விரைவில் தெரியவரும் - என்றார். (த-ய)

# தசநாயக்க கைதுக்கு வீரவன்ச கண்டனம்

கொழும்பு, ஜூலை 18
முன்னாள் கடற்படைப் பேச்சாளரான கொமடோர் டீ.கே.பி.தசநாயக்கவைக் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்தமைக்குத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கண்டனம் வெளியிட்டுள்ளார்.
கொமடோர் திசாநாயக்க மிகத் திறமைவாய்ந்த ஓர் அதிகாரி எனவும், அவர் நாட்டுக்காகப் பெரிதும் பாடுபட்டவர் எனவும், அவரைக் கைதுசெய்தது பெரும் அநீதி எனவும் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கைக் கடற்படை வரலாற்றில் தனது சாதனைகளுக்காக இருமுறை பதவியுயர்வு பெற்ற அவரைச் சில பயங்கரவாதிகள் காணாமல்போனதற்காகக் கைதுசெய்து சிறையிலடைத்திருப்பது நியாயமற்றது எனவும், எனவே, அவரை உடனடியாக விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (த)

# நுரைச்சோலை ஜெனரேட்டரை பழுதுபார்க்க 10 நாள் செல்லும்

கொழும்பு, ஜூலை 18
நுரைச்சோலை அனல் மின்நிலையத்திலுள்ள இரண்டாவது மின்பிறப்பாக்கியில் (ஜெனரேட்டர்) ஏற்பட்டிருக்கும் பழுதைத் திருத்துவதற்குக் குறைந்தது பத்து நாள்கள் செல்லுமென மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுலக்சன ஜயவர்தன தெரிவித்தார்.
இந்த மின்பிறப்பாக்கி பழுதடைந்திருப்பதால் தேசிய மின்கட்டமைப்புக்கு 300 மெகாவோற் மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது. தற்போது நிலவும் வறட்சியான கால நிலையால் மின்பாவனை கிட்டத்தட்ட 42 மெகாவோற் மணிகளாக அதிகரித்துள்ள நிலையில், இந்தக் குறைபாடு கணிசமான எதிர்த் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
எனினும், நுகர்வோருக்குச் சிரமம் ஏற்படாதவகையில் ஏனைய மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (த)

# கோத்தா கைதுக்குச் சதி 2 மாதங்களுள் அம்பலம்

## கூறுகின்றது மகிந்த தரப்பு

கொழும்பு, ஜூலை 18
கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்வதற்கு அரசு மேற்கொண்டு வரும் சதியை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அம்பலமாக்குவோம் என்று மகிந்த அணி தெரிவித்துள்ளது.
இது அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்ததாவது:



கோத்தபாய ராஜபக்ச ஒரு சாதாரண முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் அல்ல. இந்த நாட்டின் வரலாற்றையே புரட்டிப் போட்ட ஒரு பாதுகாப்புச் செயலாளர். இந்த நாட்டை அழித்துக் கொண்டிருந்தவராலும் ஒழித்துக்கட்ட முடியாத 30 வருடப் போரை ஒழித்துக்கட்டியவர்.
அவரைப் பழிவாங்க வேண்டிய தேவை புலிகளுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் உண்டு. அந்தத் தேவையை நிறைவேற்றும் வகையில் இந்த அரசு செயற்படுவதுதான் கவலைக்குரிய விடயம். ஏதாவது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி அவரைச் சிறையில் அடைப்பதற்கு அரசு திட்டமிடுகின்றது.
இது தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர கூறிய வார்த்தை கோத்தபாயவிடம் சென்றுவிட்டது. அவர் அதை ஊடகங்களுக்கு தெரிவித்து விட்டார். இப்போது அமைச்சர் அதை மறுக்கின்றார். அதுமாத்திரமன்றி, கோத்தபாய ஏதும் குற்றங்கள் செய்திருந்தால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். அப்படியான ஒரு மன்னிப்பை கோத்தபாய எதிர்பாக்கவில்லை. அவர் நியாயத்தை மாத்திரமே எதிர்பார்க்கின்றார்.
இந்த அரசு அவரைக் கைதுசெய்வதற்கு எவ்வாறான சதிகளை செய்து வருகின்றது என்பதை நாம் அறிவோம். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அதை வெளியிடுவோம் என்பதை மிகவும் பொறுப்புடன் கூறிக்கொள்கிறேன். இந்த நாட்டுக்கு சேவை செய்த ஒருவரைப் பழிவாங்குவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம். - என்றார். (த-3)

# தம்புள்ளை விகாரை பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு

கொழும்பு, ஜூலை 18
ரங்கிரி தம்புள்ளை விகாரை தொடர்பில் எழுந்திருந்த பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரின் தலைமையிலும், புராதன சொத்துகளுக்கான பணிப்பாளர் நாயகத்தின் பிரதிநிதிகளுடனும் நடந்த அஸ்கிரியபீடத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ரங்கிரி தம்புள்ள விகாரையின் எதிர்கால நடவடிக்கைகளும் புனர்நிர்மாணங்களும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர், ரங்கிரி விகாரையின் முதன்மைத் தேரர் மற்றும் தம்புள்ள ரஜமகா விகாரையின் முதன்மைத் தேரர் ஆகியோரின் கூட்டுத் தீர்மானத்திலேயே முன்னெடுக்கப்படுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் இழுபறியில் இருந்துவந்த இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. (த)

# அரசை ஆட்டம் காணவைக்க ஒருபோதுமே இடமளியோம்

## அடித்துச் சொல்கிறார் ஐ.தே.க. எம்.பி

கொழும்பு, ஜூலை 18
அரசை ஆட்டம் காண வைக்கும் நிலைமைக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசைக் கவிழ்க்கப்போவதாக எண்ணிக்கொண்டு அரசிலிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம் பக்கம் இழுத்துக் கொள்ளும் மகிந்த ராஜபக்சவுக்கு ஆப்பிழுத்த குரங்குக்கு நேர்ந்த கதியே நேரும்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசிலிருந்து விலகிச் சுயாதீனமாக இயங்கத் தயாராகி வருவதாகப் பல பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.
கடந்த தேர்தலில் தோல்வியடைந்தவர்களே சுயாதீனமாக இயங்கப்போவதாகக் கூறியுள்ளனர்.
நாடு உறுதியற்ற நிலையில் இருக்கின்றது என்று காட்டி நாட்டுக்கு வரவிருக்கும் முதலீட்டாளர்களைத் தடுக்க முயற்சிக்கின்றார்களா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு செய்து எங்களது திட்டங்களைச் சீர்குலைத்து அரசு முன்னோக்கிச் செல்லமுடியாத நிலைமையை ஏற்படுத்த இவர்கள் எண்ணியுள்ளதாக நாங்கள் நினைக்கின்றோம்.
எனினும், தோல்வியடைந்தவர்களின் தேவை நிறைவேற நாங்கள் இடமளிக்கமாட்டோம் - என்றார். (த)

# தேர்தல் அறிவித்த கையோடு கட்சித் தாவல்களும் தாராளம்

கொழும்பு, ஜூலை 18
உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னரே அரசியல் களத்தில் கட்சித் தாவல்கள் ஆரம்பமாகும் என்று நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.
தேசிய அரசுமீது அதிருப்தியிலிருக்கும் சு.க. உறுப்பினர்களை எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிவரை பொறுமைகாக்குமாறு கட்சித் தலைவர் என்ற வகையில் அரச தலைவர் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் சில அதிருப்தியாளர்கள் அதை ஏற்கும் நிலையில் இல்லை.
எனவே, குட்டித் தேர்தலுக்கான அறிவிப்பு வந்ததும் அதிருப்திக் குழு உறுப்பினர்கள் சிலர் பொது எதிரணியின் பக்கம் இணையவுள்ளனர் என்றும், பிரசாரம் நடைபெறும் காலப்பகுதியில் மேலும் சிலர் கட்டம், கட்டமாக இணைவதற்கும் திட்டம் தீட்டியுள்ளனர் எனவும் தெரியவருகிறது.
இதை மையப்படுத்தியும், புதிய அரசமைப்பை இலக்குவைத்துமே பொது எதிரணியின் தேர்தல் பரப்புரை அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
இதற்கிடையில் அதிருப்தி நிலையில் இருப்பவர்களைச் சமரசப்படுத்தும் முயற்சியும் இடம்பெற்றுவருகின்றது.
அதேவேளை, எதிரணி பக்கமுள்ள சிலர் அரசுக்கு ஆதரவளிக்கக்கூடிய சூழ்நிலையும் இல்லாமல் இல்லை.
குட்டித் தேர்தலை எதிர்கொள்வதற்காக முதன்மை அரசியல் கட்சிகள் தற்போதிலிருந்தே தயார்படுத்தல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.
தொகுதிகளைப் பலப்படுத்தல், பிரசார யுக்திகள் உட்பட மேலும் பல விடயங்கள் குறித்து கட்சிகள் கழுகுப் பார்வையைச் செலுத்தியுள்ளன. (த)

# டெங்குநோயின் தாக்கம் எட்டு மடங்காக அதிகரிப்பு

## ஒழித்துக்கட்ட அனைவரையும் அணிதிரளுமாறு ராஜித அழைப்பு



கொழும்பு, ஜூலை 18
டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பு எட்டு மடங்காக அதிகரித்துள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
களுத்துறை மாவட்டத்தை மையப்படுத்தி இடம்பெற்ற சிறப்பு டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
நாட்டில் சடுதியாக அதிகரித்துவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.
இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 90,865 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 269 பேர்வரை இறந்துள்ளனர்.
மேல் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரிக்கிறது. நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. என்றாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பால் மாத்திரமே நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும். இந்த மாதம் ஆரம்பம் முதல் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை எட்டு மடங்காக அதிகரித்துள்ளது - என்றார். (த)

# தனியார் வைத்தியசாலைகளின் கட்டணங்களுக்குக் கட்டுப்பாடு

## சுகாதார அமைச்சர் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 18
தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பதற்கான நடவடிக்கைகளைச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கொள்ளவுள்ளார் எனச் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.
பன்னாட்டுச் சுகாதார நிறுவனமொன்றின் உதவியுடன் இந்தக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்ட பின் அவை செயற்பாட்டுக்கு வரவுள்ளதாகவும் முற்றிலும் இலவசமாக அரசு சுகாதார சேவைகளை வழங்கிவரும் போது தனியார் மருத்துவமனைகள் அதை ஒரு வியாபாரமாக மட்டும் கருதாது நாட்டுக்குச் செய்யும் ஒரு சேவையாக எடுத்துக் கொள்ளவேண்டுமெனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார் எனவும் கூறப்பட்டது. (த)

# 22ஆம் திகதி இலங்கையிடம் கப்பல் கையளிக்கும் இந்தியா

கொழும்பு, ஜூலை 18
இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பல் வரும் 22ஆம் திகதி இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இலங்கைக் கடற்படைக்கு மிகப் பெரிய இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை 1000 கோடி ரூபா செலவில் கட்டுவதற்கான உடன்பாடு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கையெழுத்திடப் பட்டது.

இதற்கமைய கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட முதலாவது கப்பல் ஜூலை 22ஆம் திகதி இலங்கைக் கடற்படையிடம் அதிகாரபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.



105 மீற்றர் நீளமான 2400 எடை கொண்ட இந்தப் போர்க்கப்பல், இலங்கைக் கடற்படையினால் எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'இலங்கைக் கடற்படையினால் பயன்படுத்தப்படும் மிகப் பெரிய போர்க்கப்பலாக இது இருக்கும். இந்தியக் கப்பல் கட்டும் தளத்தினால் ஏற்றுமதி செய்யப்படும் மிகப் பெரிய போர்க்கப்பலாகவும் இது இருக்கும். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை உறவுகளை இது மேலும் ஆழமாக்கும்' என்று றியர் அட்மிரல் சேகர் மிட்டல் தெரிவித்தார்.

திட்டமிடப்பட்டதை விட மூன்று மாதங்கள் முன்னதாகவே, இந்தக் கப்பல் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இரண்டாவது கப்பல் 2018 பெப்ரவரியில் திட்டமிடப்பட்டதற்கு 3 மாதங்கள் முன்கூட்டியே ஒப்படைக்கப்படும்.

இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள், கப்பல்களுக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள், கடல்சார் கண்காணிப்பு, ஆழ்கடல் நிலைகளின் பாதுகாப்பு, மற்றும் அதிக பெறுமானம் கொண்ட கப்பல்களின் பாதுகாப்பு எனப் பல்வேறு பங்குகளை ஆற்றக் கூடியவை.

25 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடிய இந்தக் கப்பல்களில், ஒரு உலங்குவானூர்தி தரித்திருப்பதற்கான வசதிகளும் உள்ளன. (த)



## இந்த ஆண்டின் சிறந்த பெண்ணாக அமைச்சர் தலதா

கொழும்பு, ஜூலை 18
இலங்கையின் இந்த வருடத்துக்கான சிறந்த பெண்மணியாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் திருமதி தலதா அத்துக்கோரள தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடந்த நிகழ்வில் இதற்கான விருது அவருக்கு வழங்கப்பட்டது.

சிறப்பாக வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான அவரது சிறந்த சேவையையும், அரசியல் சேவையையும் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (த)



## வறட்சியால் மூடப்படும் வில்பத்துச் சரணாலயம்

கொழும்பு, ஜூலை 18
தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் வில்பத்து தேசிய சரணாலயத்தைத் தற்காலிகமாக மூட வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தச் சரணாலயம் தற்காலிகமாக மூடப்படுவதாகத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாகச் சரணாலயத்துக்குள் வாழும் வனவிலங்குகளுக்குத் தேவையான நீர் கிடைக்காமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தச் சரணாலயத்துக்குள் அமைந்துள்ள உல்லாச விடுதிகளில் தங்கியுள்ளோரை உடனடியாக வெளியேறுமாறு அறிவித்துள்ள திணைக்களம், சரணாலயம் மீண்டும் திறக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படு மென்று கூறியுள்ளது. (த)

# மகிந்த - மைத்திரி இணையாவிடின் அழிவடையும் சு.க.

## கூறுகிறார் அமைச்சர் ஜோன் செனவிரத்ன

கொழும்பு, ஜூலை 18
மகிந்தவும் மைத்திரியும் ஒன்றிணையாவிட்டால் சுதந்திரக் கட்சி அழிவதைத் தடுக்க முடியாது. அந்தக் கட்சியால் இனி ஆட்சியைப் பிடிக்கவும் முடியாது என்று அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சி இனி ஒரு முடிவை எடுத்தாக வேண்டும். அடுத்த தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்றால் மைத்திரியும் மகிந்தவும் ஒன்றிணைந்தே ஆக வேண்டும்.

இருவரும் மனம் விட்டுப் பேசவேண்டும். கருத்து வேறுபாடுகளை மறந்து இருவரும் ஒன்றிணைய வேண்டும். அரசில் இருந்து 18பேர் வெளியேறுவதற்கு முடிவெடுத்துள்ளதால் சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் இன்னும் சிக்கலையே சந்திக்கும். இருவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே இவ்வாறான பிளவுகளைத் தடுத்து கட்சியைப் பலப்படுத்த முடியும்.

மகிந்த போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முன் இந்த நாடு எப்படி இருந்தது என்று நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வடக்கு கிழக்கில் தமிழர்கள்கூட உரிமைகளை இழந்து காணப்பட்டனர். யாழ்ப்பாணச் சிறுவர்களின் கைகளில் பேனை இருக்கவில்லை. துப்பாக்கிதான் இருந்தது. அவர்களின் கைகளில் பந்து இருக்கவில்லை. வெடிகுண்டுதான் இருந்தது. புத்தகங்கள் இருக்கவேண்டிய அவர்களின் கைகளில் துப்பாக்கியும் சயனைட் குப்பிகளும்தான் இருந்தன. இவை அனைத்தையும் மகிந்த மாற்றி அமைத்தார். அவர்களுக்குக் கல்வியைக் கொடுத்தார். பாடசாலைகளை அபிவிருத்தி செய்தார். வீதிகளைச் செப்பனிட்டுக் கொடுத்தார்.

முழு நாட்டுக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தார். இதனால் இன்று அவர் பின்னால் ஒரு கூட்டம் திரண்டுள்ளது. அவரைத் தவிர்த்து சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்ப முடியாது. ஆகவே, முடிந்தளவு வேகமாகக் கட்சியை ஒன்றுபடுத்துவதற்கு இருவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (த- 3)

தீவிரவாத அச்சுறுத்தல்:

## சுற்றுலாப் பயணிகள் மீது இலங்கை கழுகுப்பார்வை



கொழும்பு, ஜூலை 18
பாகிஸ்தான், சிரியா உட்பட ஏழு நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகளை உன்னிப்பாகக் கண்காணிக்க அரசு முடிவு செய்துள்ளது என்று உள்நாட்டு விவகார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்புக் கரிசனைகளைக் கருத்திற்கொண்டே இந்தக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

சிரியா, பாகிஸ்தான், எகிப்து, ஐவரி கோஸ்ட், கானா, நைஜீரியா, கமரூன் ஆகிய ஏழு நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு நுழைவு விசா வழங்கப்படுவதற்கு முன்னர் முழுமையான ஆய்வுக்குட்படுத்தப்படும்.

ஐ.எஸ். தீவிரவாத அச்சுறுத்தல் தொடர்பாக சிரியா மற்றும் எகிப்திலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் ஆய்வுக்குட்படுத்தப்படுவர். இந்த நாடுகளிலிருந்து இலங்கைக்குள் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஊடுருவலாம் என்ற அச்சம் காணப்படுகிறது.

கானா, நைஜீரியாவிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் சட்டவிரோதக் குடியேற்றம் குறித்தும், பாகிஸ்தானிலிருந்து வருவோர் அடைக்கலம் கோருவது குறித்தும் கண்காணிக்கப்படுவர்.

அதேவேளை, ஆப்கானிஸ்தானிலிருந்து வருவோரைக் கண்காணிக்கும் நகர்வுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன், உகண்டாவிலிருந்து வருவோரும் கூடிய விரைவில் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவர் - என்றார். (த)

# மகிந்த தலைமையில் புதிய ஆட்சி டிசெம்பருக்குள்

## குமார வெல்கமவின் ஆருடம் இது

கொழும்பு, ஜூலை 18
இந்த அரசு ஆட்டம்காணத் தொடங்கியுள்ளதால் இந்த வருட இறுதிக்குள் மகிந்த தலைமையில் புதிய ஆட்சி உருவாகும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

அதற்கான வேலைத் திட்டங்கள் வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுப்பதில்லை. மகிந்த ஆரம்பித்து வைத்த வேலைத் திட்டங்களை மீள ஆரம்பித்து புதிய வேலைத் திட்டங்கள்போல் காட்டிக்கொள்கிறது.


கண்டி அதிவேகப் பாதை நிர்மாணம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். மகிந்த ஆரம்பித்து வைத்த அந்த நிர்மாணப் பணியைத்தான் இந்த அரசு மீண்டும் ஆரம்பிக்கின்றது. இந்த அரசால் புதிதாகத் தொடங்கப்பட்டது என்று எதுவுமில்லை. ஆகக் குறைந்தது ஒரு மலசல கூடத்தையேனும் இந்த அரசு மக்களுக்கு நிர்மாணித்துக் கொடுக்கவில்லை.

ஆட்சி அமைந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்த இரண்டு வருடங்களையும் வெறுமனே கடத்திய அரசு மீதிக் காலத்தையும் அவ்வாறுதான் கடத்தப் போகின்றது. அவ்வாறு நடந்தால் அது நாட்டுக்குப் பெரும் ஆபத்தாக அமைந்துவிடும். இனியும் இந்த ஆட்சி தொடர்வதை அனுமதிக்க முடியாது.

மக்கள் போராட்டங்கள் தினமும் இடம்பெறுகின்றன. மக்கள் இந்த அரசுக்கு வழங்கிய மக்கள் ஆணை முடிந்துள்ளது. இதற்குப் பிறகும் இந்த அரசால் தொடர்ந்து பயணிக்க முடியாது. இந்த வருட இறுதிக்குள் மகிந்த தலைமையில் புதிய ஆட்சி உருவாகும்.

அரசு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்குச் சென்றால் உண்மை நிலை விளங்கும். அத்தோடு அரசின் ஆட்டம் அடங்கிவிடும். தாம் தோற்பது நிச்சயம் என்று உணர்ந்துள்ளதால்தான் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கின்றது.

அதுமாத்திரமன்றி அரசில் இருந்து 18பேர் விலக்குவதற்குத் தீர்மானித்துள்ளமை அரசின் அத்திபாரம் ஆட்டம் காணுகின்றது என்பதையும் மகிந்தவின் பலம் அதிகரிக்கின்றது என்பதையும் காட்டுகின்றது. மிக விரைவில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். மக்கள் விரும்பும் ஆட்சி மலரும் - என்றார். (த-3)



## திறக்கப்பட்டது அல் அக்ஸா

டெல் அவிவ், ஜூலை 18
இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேமில் பலஸ்தீனியர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்ததால் மூடப்பட்ட அல் அக்ஸா மசூதி மீண்டும் நேற்றுத் திறக்கப்பட்டது.
இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கு இடையே அரை நூற்றாண்டு காலத்துக்கும் அதிகமாக தீராப்பகை நீடித்து வருகிறது. இஸ்ரேலை மீண்டும் தங்கள் வசப்படுத்த பலஸ்தீனமும், பலஸ்தீனத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ள இஸ்ரேலும் முயன்று வருகின்றன.
பலஸ்தீனியர்களின் மிகவும் பழைமையானதும், மூன்றாவது புனிதத்தலமாகவும் கருதப்படும் அல் அக்ஸா மசூதி இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதை மீண்டும் கைப்பற்ற பலஸ்தீனிய ஆயுதக் குழுக்கள் அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றன. அவ்வாறு அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் இரு பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர். இதனால் மசூதியை மூடுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டது. இந்த மசூதி நேற்று மீண்டும் திறக்கப்பட்டது. மசூதியின் சுற்றுப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

# மதுரோ அரசு கெ

# வெனிசுலாவில் பத

## நான்கு மாதங்கள் முடிவடைந்தும் இயல்புநிலைக்குத் திரும்பவில்லை

கரஸ்கஸ், ஜூலை 18
வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிரான போராட்டத்தில், அரச தரப்பு என்று சந்தேகிக்கப்படும் கும்பலால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து அங்கு பதற்றநிலை மேலும் அதிகரித்துள்ளது.
மதுரோவின் ஆட்சியில் வெனிசுலா வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனால் அவர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி கடந்த ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தற்போது வரை நீண்டு செல்கிறது. ஆரம்பத்தில் பேரணிகளாகவும், ஊர்வலங்களாகவும் வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பு, வெனிசுலா இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்புக்கள் பிரயோகித்த அடக்குமுறையின் காரணமாக தற்போது கலவரமாக மாறியுள்ளது.
அதிபருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன. நிக்கோலஸ் மதுரோவை பதவி கவிழ்க்கும் விதத்தில் நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. எதிர்க் கட்சிகளின் சார்பாக மக்களின் அபிப்பிராயத்தை அறியும் விதத்தில் ஏற்பாடு செய்த இந்த வாக்கெடுப்பில் மர்மக் கும்பலொன்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர். அவர்களின் நிலைமையும் கவலைக்கிடம் என்று சொல்லப்படுகிறது. இதையடுத்து வெனிசுலாவில் அதிலும், குறிப்பாக தலைநகர் கரஸ்கஸில் பதற்றநிலை அதிகரித்துள்ளது.

**லொபாஸுக்கு ஆதரவு**
வெனிசுலா அதிபர் மதுரோவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்பலை எதிர்க்கட்சித் தலைவர் லொபாஸுக்கான ஆதரவாகவும் மாறியுள்ளது. வெனிசுலா விரைவில் அதிபர் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளவுள்ளது. இதனால் லொபாஸ் அடுத்த அதிபராவதற்கு வாய்ப்பு அதிகம் என்று சொல்லப்படுகிறது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பலரும் லொபாஸுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தும் விதமான உடைகளை அணிந்திருப்பதுடன் பாதாகைகளையும் ஏந்தியிருந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## குடியிருப்பில் தீ 22 பேர் சாவு

### *சீனாவில் துயரம்*


பீஜிங், ஜூலை 18
சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 22 பேர் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சீனாவின் கிழக்குப்பகுதியான ஜியாங்சு மாகாணத்தில் இருக்கும் யுசான் நகரில் உள்ள குடியிருப்பிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் பலர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. தீ விபத்துக் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றும் சீன ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பெரும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. மத்திய கலிபோர்னியாவில் ஏற்பட்ட இந்தத் தீ ஏற்பட்டு 10 நாள்கள் கடந்த நிலையிலும் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டுள்ள இந்தப்படம் தீயின் கனதித் தன்மையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## 'லார்சன் சி' பனி கடல்மட்டம் உய

லண்டன், ஜூலை 18
அந்தாட்டிக்காவின் மேற்குப் பகுதியில் 'லார்சன் சி' என்று அழைக்கப்படும் மிகப்பெரிய பனிப்பாறை உடைந்துள்ளதன் விளைவாக கடல்மட்டம் சுமார் 10 சென்ரிமீற்றர் அளவுக்கு உயரக்கூடிய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




அந்தாட்டிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள சுமார் 5ஆயிரத்து 800 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய 'லார்சன் சி' பனிப்பாறை உடைந்துள்ளது. அது உருகவோ அல்லது நகரவோ ஆரம்பிக்கவில்லை. எனினும் உருகச் சாத்தியம் உள்ளது என்று கருதப்படுகிறது.

அ
10
க
கு

## மெக்சிக்கோ எல்லை விரைவில் சாத்தியப

வொஷிங்டன், ஜூலை 18
அமெரிக்காவுக்குள் மெக்சிக்கோ அகதிகள் வருவதைத் தடுக்க சூரியசக்தியில் இயங்கும் மின்சார வேலி அமைக்கப்படவும் வாய்ப்புள்ளது என்றுபன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்
ட்ரம்ப் வெளியி
கருத்துக்களே இ
எண்ணப்பாடுகள்
பெறக் காரணமாக
"நான் நகைச்சுவ
கூறவில்லை அ
மெக்சிக்கோ எல்
சூரிய மின்சக்தி சுவ

# கடுபிடி
# ற்றம்



# டோங்கோவில் நில நடுக்கம்

சிட்னி, ஜூலை 18
ஆஸ்திரேலியா அருகே அமைந்துள்ள டோங்கோ தீவில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.
ஆஸ்திரேலியா அருகே பசிபிக் பெருங்கடலில் உள்ள ஒரு தீவு நாடு டோங்கோ. நேற்று அதிகாலை அந்த நாட்டின் தென் பகுதியில் அமைந்துள்ள நீடா என்ற இடத்தில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆஸ்திரேலிய புவியியல் சார் ஆய்வு மையம் வெளியிட்ட தகவலின்படி, நில நடுக்கம் 6:1 ரிச்டர் அளவு என்று சொல்லப்படுகிறது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்பட வில்லை. (ம)



# திடீர்ப் போர்ப் பயிற்சியில் ஆஸ்திரேலிய இராணுவம்


கான்பெரா, ஜூலை 18
ஆஸ்திரேலிய இராணுவம் நேற்றுமுன்தினம் திடீர்ப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டது. கடல்வழி மற்றும் தரைவழித் தாக்குதல்களை எதிர் கொள்ளும் விதத்தில் இந்தப் போர்ப் பயிற்சி இடம்பெற்றது என்று சொல்லப்படுகிறது.
லாங்ஹாம் கடற்கரையில் இந்தப் போர்ப் பயிற்சி இடம்பெற்றது. ஆஸ்திரேலியா ஓர் தீவு நாடு என்ற காரணத்தால் கடலில் இருந்து வரும் எதிர்ப்புக்களைச் சமாளிக்கவும், எதிர் கொள்ளவுமே அதிக ஆர்வம் காட்டப்பட்ட என்று தெரிவிக்கப்பட்டது. சுமார் 8 மணித் யாலயம் இந்தப் போர்ப் பயிற்சி நடத்தப்பட்ட அமெரிக்கா, வடகொரியா, தென்கொரிய ரஷ்யா, சீனா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆ நாடுகளே அடிக்கொருதடவை போர்ப் பயி மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலைய ஆஸ்திரேலியாவின் இந்தத் திடீர்ப் போ பயிற்சி பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என் கருதப்படுகிறது. (ம)

# ஐ.எஸ்.ஐ.எஸ். மீது பாக். தாக்குதல்

காபுல், ஜூலை 18
ஆப்கானிஸ்தானின் எல்லைக் கிராமங்களில் முகாமிட்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள்மீது பாகிஸ்தான் இராணுவம் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது.
ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லைக் கிராமங்களில் உள்ளது ராஜ்பல் பள்ளத்தாக்கு. இந்த இடம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினதும் ஏனைய ஆயுதக் குழுக்களினதும் கோட்டையாக உள்ளது. அங்குள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் நிலைகள் மீது பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இந்தத் தாக்குதல் ஆயுதக் குழுவுக்கு எதிரான நடவடிக்கையாக இருந்தாலும், ஆப்கான் எல்லைக்குள் சென்றமையை அத்துமீறலாகவும் ஆப்கானிஸ்தான் எடுத்துக்கொள்ள வாய்ப்புள்ளதால் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் இடையே இது தொடர்பாக வாக்குவாதங்கள் நடைபெறச் சாத்தியதுள்ளது என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# ளிப்பாறையால்
# யரும் அபாயம்



அவ்வாறு உருகினால் கடல்நீர் மட்டம் சுமார் 10 சென்ரிமீற்றர் அளவுக்கு உயரும் என்று கருதப்படுகிறது. பிரிட்டன் விஞ்ஞானிகள் இது குறித்த ஆய்வை நடத்தி வருகின்றனர். (ம)

# சிலியில் திடீர்ப் பனிப்பொழிவு

சான்தியாகோ, ஜூலை 18
தென்னமெரிக்க நாடான சிலியின் தலைநகர் சான்தியாகோவில் நேற்றுமுன்தினம் இரவு திடீரெனப் பனிப்பொழிவு ஏற்பட்டது.



பனிப்பொழிவு நேரத்தில் மின்சாரமும் தடைப்பட்டதால் வெப்பமாக்கல் கருவிகளை இயக்க முடியாமல் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகினர். உறையவைக்கும் கடும் குளிரில் இருந்து தப்பிக்க ஆயிரக்கணக்கானோர் சான்தியாகோவிலில் இருந்து வெளியேறி பக்கத்து நகர்களுக்குச் சென்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# வெள்ளத்தால் 18 பேர் சாவு

பீஜிங், ஜூலை 18
வடகிழக்கு சீனாவின் ஜிலின் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 18 பேரைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.
சீனாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதால் ஜிலின் மாகாணத்தின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. அப்பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் சாலைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. கரை புரண்டோடிய வெள்ளத்தில் சிக்கி 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கச் சாத்தியமுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தத்தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகளில் சுமார் 30ஆயிரம் பேர் ஈடுபட்டுவருகின்றனர். (ம)

# லையில் மின்வேலி
# யம் என்றார் ட்ரம்ப்

ார் சந்திப்பு ஒன்றில் வெளியிப்படுத்திய ளே இவ்வாறான பாடுகள் தோற்றம் ணமாக உள்ளன. கைச்சுவைக்காகக் லை அமெரிக்க - கோ எல்லையில் சக்தி சுவர் அமைக்கப்பட வாய்ப்புள்ளது. மெக்சிக்கோ எல்லையில் சூரிய மின்சக்தி சுவர் அமைக்கப்படுவதற்கு சிறந்த இடம் இல்லை. அதைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன." என்று குறித்த செய்தியாளர் சந்திப்பில் ட்ரம்ப் குறிப்பிட்டார். (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## நேர்மையே தேவை

அரசவழங்களைப்பங்கிடுவதில் உள்ள பாரபட்சம், நீதியின்மை, அரசியல் தலையீடுகள் என்பவை இனங்களுக்கு இடையே விரிசல்களையும், முரண்பாடுகளையும், மோதல்களையும் ஏற்படுத்துவது இன்னமும் நின்றபாடாக இல்லை. இத்தகைய போக்குகளால் கடந்த காலங்களில் நீண்ட ஆயுதப் போராட்டம் ஒன்றைச் சந்தித்து நொந்துபோனதன் பின்னரும்கூட வரலாற்றிலிருந்து எவரும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நடந்து முடிந்திருக்கும் இளைஞர்களின் ஊர்வலம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இதைத்தான் எண்பிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் மேலோட்டமாகப் பார்க்கும்போது இனம்சார் தூண்டல்கள் போன்று தெரிந்தாலும்; இன முரண்பாடு என்பதாகப் பறைசாற்றப்பட்டாலும் அடிப்படையில் அவை வளப்பங்கீட்டின் பாரபட்சத்தினாலேயே ஏற்படுகின்றன.

வடக்கில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவர்களை ஆரத் தழுவி சகோதரர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் தமிழர்களே! அதுவே நியாயமும்கூட. அந்த நியாயத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனே ஏற்றுக்கொண்டு முஸ்லிம்களை வடக்கில் மீளக்குடியமர வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், போர் முடிந்து 8 ஆண்டுகளாகிவிட்ட போதிலும், முஸ்லிம்களின் மீள்குடியமர்வு இன்னமும் சிக்கலானதாகவே இருக்கிறது. அதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. கடந்த 27 வருடங்களில் அவர்களில் பெரும்பாலானவர்கள், தாம் இடம்பெயர்ந்து வாழ்ந்த புத்தளம் அல்லது வேறு இடங்களில் நிரந்தரக் குடிகளாகிவிட்டார்கள் என்பது முதற்காரணம். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஓரளவுக்காவது வசதி வாய்ப்புக்களைக் கொண்டவர்கள். அப்படியான வசதி இல்லாதவர்கள் மீளக்குடியமர விரும்பினாலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை தமிழ்ப் பிரதேசங்களின் அதிகாரிகள் செய்து கொடுப்பதில்லை, அதிகாரிகள் இனப்பாரபட்சத்துடன் நடந்துகொள்கிறார்கள் என்பது இரண்டாவது குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டிலும் உண்மை இல்லாமல் இல்லை என்பதைக் கடைசியாக நடந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தின்போது காண முடிந்தது. யாழ்ப்பாண நகரத்தில் தமிழர் ஒருவருக்கு வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுத்த அதிகாரிகள், அதையொத்த காணியில் முஸ்லிம் ஒருவர் வீடு கட்ட அனுமதி கோரியபோது சட்ட திட்டங்களைக்கூறி அனுமதி மறுத்துவிட்டார்கள். எனவே பாரபட்சமான நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்றன என்பதை நிராகரித்துவிட முடியாது.

அதேநேரத்தில், முஸ்லிம் அரசியல்வாதிகள் குறிப்பாக அமைச்சர்களாக அதிகாரத்தைத் தம் வசம் வைத்திருக்கும் அரசியல் வாதிகள், முஸ்லிம்களின் நன்களை மட்டுமே முன்னிறுத்திச்செயற்பட முனையும்போதுதான் முரண்பாடுகள் வலுக்கின்றன என்ற குற்றச்சாட்டையும் மறுக்க முடியாது. இருக்கும் வளங்களைப் பங்கிடுவதில் நேர்சீரான அணுகுமுறையைப் பின்பற்றுவதை விடுத்து, தமது அரசியல் நலன்களைக் கருத்தில் கொண்டு அரசியல்வாதிகள் இனம் சார்ந்து செயற்படப்போகும்போதுதான் மற்றைய இனத்தினர் அச்சமடைகின்றனர். அதுவே முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் வழிவகுத்துவிடுகின்றது.

முல்லைத்தீவிலும் இப்போது அதுவேதான் நடக்கிறது. மீளக்குடியமர வேண்டிய முஸ்லிம்களுக்காக கூழாமுறிப்பில் புதிய குடியிருப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் அறிவித்ததைத் தொடர்ந்தே அங்கு எதிர்வினைகளும் தோற்றம்பெற்றுள்ளன. இது முஸ்லிம்களுக்கு இடம்வழங்கப்படக்கூடாது என்பதனால் அல்ல, தமக்கும் தேவை இருக்கும்போது அவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறதே என்பதால் எழுந்த தார்மீகக் கோபத்தால் விளைந்தது.

ஏனெனில், முல்லைத்தீவில் மீளக்குடியமர்வதற்குக் காணி தேவையாக இருக்கும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கு தமிழ் மக்களுக்கும் அங்கு காணிகள் தேவையாக இருக்கின்றன. குடியமர்வதற்குக் காணிகளும் உதவிகளும் இருதரப்பு மக்களுக்கும் தேவையாக இருக்கும்போது அதனை உதாசீனம் செய்து ஒருதரப்பினருக்கு மட்டுமே வழங்குவதற்கு அரசியல் பலம் பயன்படுத்தப்படுவதுதான் இங்கு சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது.

வளப்பங்கீடு தமக்குக் கிடைக்காத மக்களும், அரசியல் பலத்தால் தமது வளம் சுரண்டப்படுமாக, கபளீகரம் செய்யப்படுமாக இருந்தால் தமது எதிர்காலம் என்னவாகும் என்று அச்சப்படும் மக்களுமே போராட்டங்களில் குதிக்கிறார்கள். நேர்மையுடன் அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் அணுகுவதும், வளப்பங்கீட்டை நேர்மையுடன் செய்வதும் மட்டுமே போதும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு.



# ஜீ.எஸ்.பி வரிச்சலுகை

## நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவுமா?

சிங்களமூலம்: நந்தசிறி கீம்பியகெட்டி (லங்காதீப)
தமிழில் வீ.எஸ்.ரீ

கடந்த 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் நிறுத்தப்பட்ட ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்க ஐரோப்பிய ஒன்றியம் இணங்கியுள்ளது. இதன்மூலம் இலங்கையின் ஆடைக் கைத்தொழில் உற்பத்தித்துறையில் பெரும் எழுச்சி ஏற்படுமென்பது பலரது நம்பிக்கையாக உள்ளது.

ஜீ.எஸ்.பி. என்பது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், ஐரோப்பிய வர்த்தக சந்தையில் இணைந்து கொள்ள உதவும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் வரிச்சலுகைத் திட்டமாகும். ஜீ.எஸ்.பி.பிளஸ் என்பது, மேற்குறித்த ஜீ.எஸ்.பி வரிச்சலுகையால் பயனடைந்த நாடுகளில் இதுவரை பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெறாத நாடுகளுக்காக வழங்கப்படும் மேலதிக சுங்க வரிச் சலுகையாகும். இதன் மூலம் மேற்குறிப்பிட்ட நாடுகளது 7ஆயிரத்து 200 வகையான உற்பத்திப்பொருள்களை சுங்க வரிசெலுத்தாது ஐரோப்பிய வர்த்தக சந்தைகளுக்குஏற்றுமதிசெய்யும் வாய்ப்புக் கிட்டுகிறது.

**ஜீ.எஸ்.பி வரிச் சலுகை பெறுவதற்கான தகுதி**

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையைப் பெறுவதற்கு முயலுமொரு நாடு, மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், நிலைபேண் அபிவிருத்தி, மற்றும் நல்லாட்சி தொடர்பான 27 அடிப்படை அம்சங்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக பொருளாதார ரீதியில் தன்னிறைவற்றதொரு நாடெனத் தன்னை நிலை நிறுத்துவதற்கான இரு நிபந்தனைகளையும் அது முழுமை செய்தாக வேண்டும்.

01. குறித்த நாடொன்றுக்கு ஐரோப்பிய வர்த்தக சந்தையில் வழங்கப்பட்டுள்ள வீதாசாரம், ஐரோப்பிய ஒன்றியத்தால் ஜீ.எஸ்.பி திட்டத்தின் கீழ் உதவிபெறும் சகல நிறுவனங்களது முழுத் தொகையின் 6.5 வீததுக்கும் அதிகரிக்காதிருத்தல் வேண்டும்.

02. குறித்த நாடொன்றால் ஐரோப்பிய வர்த்தகச் சந்தைக்கு குறித்தொதுக்கப்பட்ட பொருள்கள் பரவலாக்கப்பட்டிருக்காமை. அதாவது மொத்த ஏற்றுமதியின் 75 வீத பொருள்கள் ஏழோ, அல்லது அதற்குக் குறைந்த அளவிலோ அமைந்திருத்தல்.

தற்போது ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகையுடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மட்டுமே தொடர்புபட்டிருப்பினும், எதிர்காலத்தில் வேறு நாடுகளாலும் குறித்த இந்தச் சலுகை வழங்கப்படக்கூடும்.

2004 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற சுனாமித் தாக்கத்தையடுத்தே இலங்கைக்கு குறித்த வரிச்சலுகை வழங்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை இலங்கை குறித்த சலுகையைப் பயன்படுத்தி வந்திருந்தது.

ஆயினும் ஐ.நா.சபையின் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சட்ட திட்டத்தில் சித்திரவதைக்கு எதிரான கொள்கை மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயங்கள் என்பவை தொடர்பாக இலங்கை போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்ததையடுத்து 2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கான குறித்த ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகையை அது இடைநிறுத்தியது. அதையடுத்து இலங்கையின் ஏற்றுமதிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டபோது மீண்டும் 9.6 வீத சுங்கவரி செலுத்த நேர்ந்தது. ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை கிடைத்த காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வீதம் குறிப்பாக தைத்த





ஆடைகள் ஏற்றுமதி வீதம் உயர்வடைந்திருந்தபோதிலும், குறித்த சலுகை இடைநிறுத்தப்பட்டதையடுத்து ஏற்றுமதி விகிதாசாரம் வீழ்ச்சி கண்டது.

**ஐரோப்பிய ஒன்றியம் என்றால் என்ன?**

28 மேற்குலக நாடுகள் ஒன்றிணைந்த, 500 மில்லியனுக்கு அதிகமான மக்கள் தொகையை உள்ளடக்கிய உலகின் பலம் பொருந்திய வர்த்தக சந்தையைக் கொண்டுள்ள அமைப்பே ஐரோப்பிய ஒன்றியம் எனப்படுகிறது. தற்போது இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி. சலுகை வழங்கப்படவிருப்பதையடுத்து நாட்டின் தைத்த ஆடைகள் உற்பத்தித் துறை மட்டுமன்றி வேறும் பல தரப்பட்ட உற்பத்திப்பொருள்வகைகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புக் கிட்டியுள்ளது. இருந்தபோதிலும், இந்தச் சலுகை மூலம் துணிவகை, மற்றும் தைத்த ஆடைகள் உற்பத்தி என்பவற்றுக்கே அதிக ஏற்றுமதி வாய்ப்புக் கிட்டியுள்ளது. இலங்கையிலிருந்து ஐரோப்பிய வர்த்தக சந்தைக்கு அனுப்பப்படும் ஏற்றுமதிகளின் 58 வீதத்துக்கு ஜீ.எஸ்.பி வரிச்சலுகை கிடைப்பதுடன் அவற்றின் பெரும்பகுதி, ஆடைகள் உற்பத்தி மற்றும் கடற்றொழில் உற்பத்திகளேயாகும்.

எனவே தற்போதுமீண்டும் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கவிருப்பதனூடாக ஆடைகள் உற்பத்தித்துறை மீண்டும் புத்துயிர் பெற்றுச் சிறப்புடன் செயற்பட ஆரம்பிக்கும்என்பது அரசினதும், வர்த்தக சமூகத்தினதும் எதிர்பார்ப்பாகும். ஆயினும் தேசிய மற்றும் பன்னாட்டு ரீதியில் குறித்த ஆடைகள் உற்பத்தித்துறை பல்வேறு பின்னடைவுகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

ஜீ.எஸ்.பி.வரிச்சலுகை நிறுத்தப்பட்டதையடுத்து பல ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அவை மீண்டும் இயங்க வைக்கப்பட வேண்டுமானால், குறித்த தொழிற்சாலைகள் புனரமைக்கப்பட வேண்டும். மற்றொருபுறம் வாழ்க்கைச் செலவு பெருமளவில் அதிகரித்தமையையடுத்து ஆடை உற்பத்தித் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் அதிக சம்பளம் எதிர்பார்க்கும் அதேவேளை, குறித்த தொழிலாளர்களுக்கு அதிகரித்த சம்பளம் வழங்கி தொழிற்சாலைகளை இயக்கி உற்பத்திகளை மேற்கொள்வது, குறித்த தொழிற்சாலைகளது உரிமையாளர்களுக்குச் சிரமமானதொன்றாக அமையும், அந்த வகையில் ஆடைகள் உற்பத்தித்துறை வெளியில் தெரியாத பல சிக்கல்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. இலங்கைமட்டுமன்றி, பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளும் இத்தகைய சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

**ஆடை உற்பத்தித் துறைக்கான மூலப்பொருள்களைப் பெறுவதில் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள்**

இலங்கையின் ஆடை உற்பத்தித் தொழில்துறைக்குத் தேவையான மூலப்பொருள்கள் பெறப்படும் ஹொங்கொங், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய கீழ்த் திசை நாடுகளின் நாணயப் பெறுமதிக்குச் சமமான வகையில் இலங்கையின் நாணயப் பெறுமதிதொடர்ச்சியாகவீழ்ச்சிகண்டு வருவதால், இத்தகையமூலப்பொருள்களுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்தி குறித்த தொழில் துறையை முன்னெடுத்துச் செல்வது சிரமமானதொன்றாகிறது.

இந்த விடயத்தில் இலங்கையின் போட்டியாளர்களான பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை பெற்றிருக்காதபோதிலும், அவை "போராயுதங்கள் தவிர்ந்த மற்றைய எல்லாமும்'' என்ற மாற்றுச் சலுகைத் திட்டத்தின் கீழேயே ஐரோப்பிய ஒன்றியநாடுகளுக்குத்தத்தமது உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்து வருகின்றன. எனவே மீண்டும் ஜீ.எஸ்.பி.வரிச்சலுகை இலங்கைக்குக் கிட்டினாலும், ஐரோப்பிய வர்த்தக சந்தையில்மேற்குறிப்பிட்டநாடுகளது உற்பத்திகளுடன் போட்டியிடுவது இலங்கைக்கு இலேசானதொன்றாக அமையப்போவதில்லை.

**இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐந்து ஆண்டுகள் கால இடைவெளியில் பங்களாதேஷ் தனது ஆடைத் தயாரிப்பு ஏற்றுமதியை முன்னரைவிடப் 16 மடங்கால் அதிகரித்துக் கொண்டுள்ளது. அந்த வகையில் பங்களாதேஷால் கைப்பற்றப்பட்டஇலங்கையின்பிரபல்யத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இலங்கையால் மீளக்கைப்பற்றுவதென்பதுஇலேசானதொருகாரியமல்ல.**


இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தஐந்துஆண்டுகள்காலஇடைவெளியில் பங்களாதேஷ் தனது ஆடைத் தயாரிப்பு ஏற்றுமதியை முன்னரைவிடப் 16 மடங்கால் அதிகரித்துக் கொண்டுள்ளது. அந்த வகையில் பங்களாதேஷால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் பிரபல்யத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இலங்கையால் மீளக் கைப்பற்றுவதென்பது இலேசான தொருகாரியமல்ல.

ஜீ.எஸ்.பி வரிச்சலுகையைப் பெறுவதற்கான தகுதிகளில்ஒன்று, குறிப்பிட்ட நாடொன்று குறைந்த வருமானம் பெறும் நாடாக இருக்க வேண்டும்என்பதாகும். இலங்கையின் தனிநபர் சராசரி தேசிய வருமானம் 3800 டொலரைத் தாண்டியுள்ளது. இதனால் இலங்கை தற்போது குறைந்த வருமானம் ஈட்டும் நாடொன்றாக உலக வங்கியால் தரப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தனிநபர் சராசரி தேசிய வருமானம் 4306 டொலர்களைத்தாண்டும்போது உலக வங்கி இலங்கையை கூடிய வருமானம் பெறும் நாடொன்றாகப் பட்டியலிடும். அந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி வரிச்சலுகையை இலங்கை நிரந்தரமாக இழக்க நேரிடும். அந்த வகையில்இன்னமும்இரண்டோ அல்லது மூன்றோ வருடங்களுக்குப் பின்னர் இலங்கை ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகையைப் பெற இயலாத நிலை உருவாகும்.

**இலங்கையின் தைத்த ஆடை உற்பத்திகளை அதிக அளவில் கொள்வனவு செய்வது பிரிட்டனே**

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆடைகள் ஏற்றுமதியின் மொத்தப் பெறுமதியான 200 மில்லியன் டொலர் வரையான உற்பத்தியில் 45 வீதமான பெறுமதி கொண்ட பொருள்களை தனித்து பிரிட்டனே கொள்வனவு செய்கிறது. இது இலங்கையின் ஒட்டுமொத்த ஆடைகள் ஏற்றுமதியில் 14 வீதம் வரையிலானதாகும். அதேவேளை எதிர்வரும் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்பட முடிவு செய்துள்ளது. அத்தகைய நிலையில், பெறுமதிமிக்கதொரு தரப்பிடமிருந்து இலங்கைக்குக் கிட்டும் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை இலங்கைக்குக்கிட்டாது போகும்.

இத்தகைய பின்னணியில் ஆடைகள் உற்பத்தித் துறையில் ஏற்படவுள்ள பின்னடைவினின்றும் இலங்கை தலைதூக்க வேண்டுமானால், ஜீ.எஸ்.பி வரிச்சலுகை கிட்டாத நிலையிலும், உலக சந்தையில் போட்டிபோடக்கூடிய அளவுக்கு எமது நாட்டின் ஆடை உற்பத்தியின் தரத்தை நாம் உயர்த்தியாக வேண்டும். உற்பத்திச் செலவினத்தை முடிந்தவரையில் குறைத்துக் கொண்டாக வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 27 நாடுகளாலும் இலங்கையிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மொத்த ஆடைகள் உற்பத்திகளுக்குச் சமமான அளவு உற்பத்திகளை, அமெரிக்க நாடுகொள்வனவு செய்கிறது என்ற முக்கிய அம்சத்தை நாம் மறந்து விடலாகாது. அமெரிக்க வர்த்தக சந்தையில் இலங்கைதனது போட்டிநாடுகளுடன் போட்டியிட்டு ஆடைகள் உற்பத்தகளைச் சந்தைப்படுத்தி வருவது, அமெரிக்காவிடமிருந்து எந்தவொரு வரிச்சலுகையையும் பெற்றுக் கொள்ளாத நிலையிலேயே ஆகும். எனவே இலங்கைக்கு ஜீ.எஸ்.பி வரிச்சலுகை மறுக்கப்படுவது நாட்டுக்குப் பெரும் இழப்பென்றோ, அல்லது அது திரும்பக்கிடைக்கவிருப்பது பெரும் இலாபகரமானதொன்றென்றோ கருதும் மனநிலையிலிருந்து, சலுகைகள் பெறும் மனப்பாங்கிலிருந்து நாம் விடுபட்டு நாட்டின் உற்பத்தித்துறையை மேம்படுத்த முயல வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.



## ஆசிரியருக்கான கடிதம்

# பஸ் சேவையை கீரிமலைவரை நீடிக்க ஆவன புரியுங்கள்

அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதைபோல, வழமையான அரச பேருந்தை நம்பி கீரிமலைப் பயணத்தைத் தவறவிட்டேன். ஆனி உத்தர நிகழ்வுக்கான அழைப்பின் பேரில், முற்பகல் பத்து முப்பது மணியளவில் குளப்பிட்டியில் காத்திருந்து தெல்லிப்பழை சென்றடைந்தேன். அம்பாளைத் தரிசித்த பின்னர் கீரிமலைக்குப் பயணிப்பதற்காகப் பயணிகள் தரிப்பிடத்தில் தொண்ணூறு நிமிடங்கள் காத்திருந்தேன். பேருந்து வரவேயில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் மீண்டும் சுன்னாகம் வந்து 768 மினிபஸ் மூலம் கீரிமலை சென்றடைந்தேன். கடலில் நீராடி பெருமானுடன் மனம் விட்டுப் பேசியபின் திரும்பியபோது மூன்று பேருந்துகள் நான்கு மணிக்குப் புறப்படத் தயாராக இருந்தன. ஐந்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன். ஆம், கீரிமலை ஒரு புண்ணிய பூமி. நல்லிணக்கபுரம் என்ற புதிய கிராமம் கீரிமலையில் உருவாக்கப்பட்ட நிலையில், புனிதமான வழிபாட்டுத்தலமும், அந்தியேட்டிக் கிரியைகள் நிறைவேற்றும் கடற்கரைப் பிரதேசமும், உல்லாசப் பயணிகளின் தளமாகவும் சிறந்ததொரு திறந்த கேணியும், இளைப்பாறும் மண்டபமும், அன்னதான தங்குமிட வசதிகளும், ஆரோக்கியமான சுவாத்தியமும், வயதில் மூத்ததொரு காளையுமாக பயனுள்ள பல பேறுகள் கோபுரமாக வளம் பெருக்குவதனால் கீரிமலை மக்களால் கவரப்படுகிறது. வரந்தரும் பூமியும் கூட. இந்த நிலையில், யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்குச் செல்லத்தக்கவாறு 769 வீதிக்கான அரச பேருந்துகளை நீடிக்க ஆவனபுரியுமாறு வேண்டிக் கொள்கின்றேன். அருமையாக ஒரு பேருந்துச் சேவையை சாத்திரப்படிக்கு நடத்துவதில் எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லை. மேலும் ஆலய வாசலில் பேருந்துப் பயணிகளை இறக்கவும், ஏற்றவும் வகை செய்தல் நன்மை பயக்கும். இந்த வேண்டுகோளை சம்பந்தப்பட்ட தரப்பினர் பரிசீலிப்பார்களாக.

கே.எஸ்.சிவஞானராஜா

# வருமானவரி மூலமான நிதி ஈட்டங்கள் அதிகரிப்பு

## மொத்த வருமானம் 30.2 வீதமாகப் பதிவு

வருமானவரி மூலமான நிதி ஈட்டங்கள் அதிகரித்துள்ள தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நடப்பாண்டின் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வருமானவரி மூலமான மொத்த வருமான விகிதாசாரம் 30.2 வீதமாகப் பதிவாகியுள்ளது. நிதி ஈட்டமானது 84 ஆயிரத்து 475 மில்லியன் ரூபாவாக காணப்படுகிறது.


அதேவேளை நடப்பாண்டின் முதல் 4 மாத காலப்பகுதிக்கான கூட்டாண்மை மற்றும் கூட்டாண்மையற்ற வருமான வரி ஈட்டங்களின் விகிதாசாரம் 13.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. நிதி உள்வருகையானது 34 ஆயிரத்து 634 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

அதேபோன்று நடப்பாண்டின் முதல் 4 மாத காலப்பகுதிக்கான கொடுப்பனவு வரி மூலமான வருமானமானது 24.9 சதவீதத்தால் அதிகரித்து 12 ஆயிரத்து 274 மில்லியன் ரூபாவை உள்ளீடாகப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதிக்கான கொடுப்பனவு வரி மூலமான வருமானமானது 9 ஆயிரத்து 828 மில்லியன் ரூபாவாக காணப்பட்டமை குறித்து நோக்கத்தக்கது.




கடந்த 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ள வருமானவரி மூலமான வருமானமானது 64 ஆயிரத்து 857 மில்லியன் ரூபாயாகவும், கூட்டாண்மை மற்றும் கூட்டாண்மையற்ற வருமான வரி ஈட்டங்களில் பதிவு செய்யப்பட்ட வருமானமானது 30 ஆயிரத்து 582 மில்லியன் ரூபாயாவும் பதிவாகியுள்ளது.

> “வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளின் மொத்த விற்பனை, வர்த்தக மற்றும் உற்பத்தி துறைகள் இந்த வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளன.”



## நடப்பு வருடத்தில் ஆயுள் காப்புறுதிக் கட்டணம் 4.8. வீதமாக அதிகரிக்கும்

### ‘சுவிஸ் றீ’ பன்னாட்டு காப்புறுதி மதிப்பீட்டு நிறுவனம் தெரிவிப்பு

உலக பொருளாதாரத்தில் காப்புறுதித்துறையானது குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வகிப்பதுடன் உலக பொருளாதார வளர்ச்சியானது அடுத்த இரண்டு வருடங்கள் காப்புறுதித் துறைக்கான ஆதரவை வழங்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஆயுள் மற்றும் ஆயுளற்ற காப்பீடுகள் வளர்ந்து வரும் சந்தைகளில் அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே நடப்பாண்டில் ஆயுள் காப்புறுதி கட்டணங்கள் 4.8 வீத வளர்ச்சியையும் எதிர்வருகின்ற 2018 ஆம் ஆண்டு 4.2 வீத வளர்ச்சியையும் பதிவு செய்யுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆசியாவில் வளர்ந்து வரும் சந்தைக்கான ஆயுள் கட்டணங்கள் உறுதியாக வளர்ச்சி அடையும் எனவும் உலக பொருளாதாரமானது அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கு மிதமான வளர்ச்சி அடையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள ‘சுவிஸ் றீ’ பன்னாட்டு காப்புறுதி மதிப்பீட்டு நிறுவனம்,

“காப்புறுதி கட்டண அளவுகளில் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஆதரவுகள் கிட்டும். ஆயுளற்ற கட்டணத்தொகைகள் கடந்த 2016ஆம் ஆண்டில் 2.4 சதவீதமாக இருந்த நிலையில் நடப்பாண்டு 2.2 வீதமாக வீழ்ச்சியை சந்திக்கும். எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு 3 வீத வளர்ச்சியைக் கண்டுகொள்ளும்” – என்றுள்ளது.

## மிக உயர்வான புரழ்வு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் பதிவு

### பங்குச்சந்தை வரலாற்றில் இரண்டாவது அடைவாக காணப்படுகிறது

கொழும்பு பங்குச்சந்தை வரலாற்றில் இரண்டாவது தடவையாக மிக உயர்வான நிதிப் புரழ்வையும் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளையும் பதிவு செய்துள்ளது.

இதனடிப்படையில் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் தொகை இரண்டாயிரத்து 280 கோடி ரூபாவாகக் காணப்படுகிறது.

இது குறித்து கருத்துரைத்துள்ள கொழும்பு பங்குச் சந்தை ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவின் தலைவர்,

“தற்போதைய பங்குச்சந்தை நிலைமைகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான வளர்ச்சியாகும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலரின் கவனத்தை கொழும்பு பங்குச் சந்தையினால் ஈர்ப்பதற்கு முடிந்துள்ளமை சாதகமான விடயம்.

தவிர, உள்ளூர் முதலீடுகளை பங்குச் சந்தையில் ஊக்குவிக்கும் நோக்கில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிறுவன மற்றும் சமூக மட்டத்தில் பங்குச் சந்தை குறித்த விசேட விழிப்புணர்வு கருத்தரங்குகளை கொழும்பு பங்குச்சந்தை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அண்மைக்காலமாக மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.” – என்றுள்ளார்.

CSE
COLOMBO STOCK EXCHANGE



## இலங்கை ரூபாவுடன் ஒப்பிடும் போது அமெ.டொலரின் பெறுமதி அதிகரிப்பு

இலங்கை ரூபாவுடன் ஒப்பிடும் போது டொலரின் பெறுமதியானது தொடர்ந்தும் அதிகரித்துள்ள தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதியானது தற்போது வரையில் 155 ரூபாவைக் கடந்துள்ளது.

இந்த நிலமைகள் காரணமாக பணவீக்கம் மேலும் அதிகரிக்க கூடும் எனவும், பாதகமான பொருளாதார சூழ்நிலைகள் ஏற்படக் கூடும் எனவும் துறைசார் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துக் கூறியுள்ள சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பேராசிரியருமான ஜனத் குமாரசிங்க,

“எங்கள் நாட்டுக்கு கிடைக்கின்ற டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ளது. எனினும் அதற்கான கோரிக்கைகள் அதிகம். இதன்காரணமாக ரூபாவின் பெறுமதிகள் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகின்றது. தேவையான பொருள்களை வெளிநாட்டில் இருந்து கொண்டு வரும் பொருளாதாரத்துக்கு நாம் பழக்கம் கொண்டுள்ளோம். உள்ளூர் தயாரிப்புகள் வீழ்ச்சியடையும் நிலையைக் கண்டுள்ளன. இந்தச் செயல் நிலைகள் பணவீக்கத்தை அதிகப்படுத்தும். இலங்கையில் வர்த்தக நடவடிக்கைக்கு சாதகமான சூழல் இல்லாமையும் அவற்றைத் தடுப்பதற்கு உரிய வேலைத்திட்டங்கள் இல்லாமையும் மேலும் பல அழுத்தங்கள் ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது. டொலர் வழங்கலை அதிகரிக்க வேண்டும். ஏற்றுமதி வருமானங்களை அதிகரிக்க வேண்டும். நேரடித் தன்மையுடைய வெளிநாட்டு வருமானங்களை அதிகரிக்க வேண்டும்.” - எனத் தெரிவித்தார்.

## மிளகு கொள்வனவில் நிலையான விலைகள் விரைவில் நிர்ணயம்

### ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயா கமகே கருத்து



அடுத்துவரும் இரண்டு வாரங்களில் மிளகு கொள்வனவுக்கான நிலையான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

“அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு தேவையான நிதியை நிதியமைச்சின் ஊடாக ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டின் கிராமியக் கைத்தொழிலை மேலும் விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.” - என்றார்.

அதேவேளை மிளகு விலை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்து இரத்தினபுரி, கொலன்ன பிரதேச மிளகு உற்பத்தியாளர்கள் எம்பிலிபிட்டிய இரத்தினபுரி பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

17/7/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -25.07 | 6,741.07 | 6,766.14 |
| S&P SL20 | -27.40 | 3,882.14 | 3,909.54 |
| வியாபாரப்புரள்வு | | 736,416,830 | 1,630,452,740 |
| உள்நாடு:- கொள்வனவு | | 361,091,520 | 350,889,472 |
| விற்பனை | | 516,072,544 | 828,958,020 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 375,325,344 | 1,279,563,260 |
| விற்பனை | | 220,344,320 | 801,494,720 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 177.00 | 1,571,040 | 279,373,951 |
| சேவ்ரோன் லூப்ரிக்கன் | LLUB.N | 160.00 | 714,079 | 114,295,681 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 75.10 | 541,862 | 40,640,385 |
| லங்கா ஐஓசி | LIOC.N | 32.40 | 1,257,189 | 40,202,179 |
| அக்சஸ் எஞ்யினியறிங் | AEL.N | 26.90 | 1,361,964 | 36,541,990 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 138.50 | 196,700 | 27,147,707 |
| சென்றல் இன்டஸ்ரி | CIND.N | 51.80 | 365,398 | 18,641,966 |
| சுவிஸ்டென் சிலோன் | PARQ.N | 79.80 | 132,861 | 10,129,776 |
| ஜனசக்தி இன்சூரன்ஸ் | JINS.N | 15.90 | 470,660 | 7,443,671 |
| ரியே லங்கா | TJL.N | 41.80 | 169,134 | 7,050,609 |

- பங்குலாபம் -


லங்கா மில் பூம் LMF - ரூபா 2.50
ஏசிஎல் பிளாஸ்ரிக் APLA - ரூபா 6.00
களனி கேபிள் KCAB - ரூபா 3.50
களனி ரயர் TYER - ரூபா 2.50

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 232 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப வீதம் | 2.6 |

# ஈழத் தமிழர்களுக்காக ஓங்கி ஒலித்தவர் கவிஞர் வாலி

## இன்று அவரது நினைவு தினம்

ஈழத்தமிழ்மணி



இருக்கிறானா? இல்லையா? எனும் ஐயத்தை எழுப்புவது இருவர். ஒன்று பரம்பொருள் ஆன பராபரன் இன்னொன்று ஈழத்தமிழர்கட்கு அரும்பொருள் ஆன பிரபாகரன். மாமனிதனின் மாதாவே! நீ மணமுடித்தது வேலுப்பிள்ளை மடிசுமந்தது நாலுபிள்ளை. நாலில் ஒன்று உன் சூலில் நின்று அன்றே தமிழ் ஈழம் தமிழீழம் என்றது உன் பன்னீர்க்குடம் உடைத்து வந்த பிள்ளை ஈழத் தமிழரின் கண்ணீர்குடம் உடைத்துக் காட்டுவேன் என்று சூளுரைத்து சின்னஞ்சிறு தோளுயர்த்தி நின்றது. நீல இரவில் அது நிலாச் சோறு தின்னாமல் உன் இடுப்பில் உட்கார்ந்து உச்சி வெயிலில் சூடும் சொரணையும் வர சூரியச் சோறுதின்றது. அம்மா! அதற்கு நீயும் அம்புலியைக் காட்டாமல் வெம்புலியைக் காட்டினாய். அதற்கு தினச் சோறு கூடவே இளச்சோறு ஊட்டினாய்.
நாட்பட நாட்பட உன் கடைக்குட்டி புலியானது காடையர்க்கு கிலியானது. இவ்வாறு வரிகள் எழுதியவர் கவிஞர் வாலி. ஈழத்தமிழர்களின் இதயங்களில் நீங்காத இடம் பிடித்தவர் ஈழத்தமிழரின் விடுதலையை நேசித்தவர்.
தமிழ்த் திரைப்பட உலகமும், இலக்கிய உலகமும் முழுமையாக உள்வாங்கிக் கொண்ட வாலிபக் கவிஞரான வாலி, திரை இசை உலகம் மட்டுமன்றி உலகத் தமிழர்களும் முழு மனதாக ஏற்றுகொண்டுள்ள ஒரு கவிதை ஊற்று. தமிழ்திரை உலகில் கொடிகட்டிப்பறந்த காலத்தை வெற்ற காவியக்கவிஞர் ரங்கராஜன் என்ற ஓவியக்கலைஞனான வாலி இசையுலகத்தை விட்டுப்பிரிந்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன. இன்று அவரது நினைவு நாளாகும்.

**ஓவியராக ஆரம்பம்**
கவிஞர் வாலி தன் வாழ்க்கையை ஓவியராகவே தொடங்கினார். எஸ்.எஸ்.எல்.சி படித்த பின்னர் சென்னை மாநகரம் வந்து ஓவியக் கல்லூரியில் இணைந்து கொண்டாலும் வாலிக்கு அதுவே நிரந்தரத் தொழிலாக அமையவில்லை.
பத்தாம் வகுப்புவரை கல்வி கற்ற வாலி ஓவியக்கலையில் தடம்பதித்தவர். இவருடன் கல்வி பயின்ற தோழன் பாவு வாலியின் சித்திரங்களைப் பார்த்து மெய்மறந்து அன்பு புகழ்கண்ட ஆனந்த விகடன் ஓவியர் மாலியின் நினைவில் நீ ஓவியர் மாலியைப் போல் சித்திரக் காரனாக வரவேண்டும் என்று பாராட்டி ரங்கராஜனுக்கு அன்று சூட்டிய பெயர்தான் வாலி.

> இருக்கிறானா? இல்லையா? எனும் ஐயத்தை எழுப்புவது இருவர் ஒன்று பரம் பொருள் ஆன பராபரன் இன்னொன்று ஈழத் தமிழர்கட்கு அரும்பொருள் ஆன பிரபாகரன் இவ்வாறு வரிகள் எழுதியவர் கவிஞர் வாலி



பட்டுக்கோட்டை கவிஞரான கல்யாண சுந்தரம் எழுதிய தத்துவப் பாடல்கள் பாமரனுக்கும் புரிந்து விடுகிறதே எனும் கருத்து அவர் மனதைத் தீண்ட சினிமாவில் நுழைய திருச்சியை விட்டு சென்னை புறப்பட்டார். திரை உலகுக்குள் காலடி எடுத்துவைக்க ஆசைப்பட்டவருக்கு முதலில் அறிமுகமானவர்கள் எம்.எஸ். விஸ்வநாதன், கோபாலகிருஸ்ணன் ஆகியோர்களாவர். ஒரு சூழ்நிலையைக் கூறி இதற்கேற்றவாறு பாட்டு எழுது என கோபாலகிருஸ்ணன் கேட்க அடுத்த நிமிடமே வாலி பேனாவைக் கையிலெடுத்து நிலவும் தரையும் நீயம்மா....இந்த உலகம் ஒரு நாள் உதைம்மா என்று எழுதிக் கொடுத்தார்.
இந்தப் பாடலைப் படித்து மகிழ்ந்த கோபாலகிருஸ்ணன் தனது அழகர் மலைக்கள்ளன் படத்தில் வாலியின் பாடலை சேர்த்துக் கொண்டார். தமிழ் திரை உலகம் கண்ணதாசனுக்குப் பின்னர் கவிஞர் என்றால் அது இவர் தான் என்று புகழப்பட்டாலும் வாலிதான் என் வாரிசு என்று கண்ணதாசனே என்று 1960 ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டுவிட்டார்.
இந்தக் கால கட்டத்தில் கர்ணன், காதலிக்க நேரமில்லை, திரைப்படங்கள் கவிஞர் கண்ண தாசனுக்கு எப்படிப்புகழ் கொடுத்ததோ அதே மாதிரி வாலிக்கு படகோட்டி, தெய்வத்தாய் படங்கள் புகழ்பாடவே ஊடகங்கள் இவர்கள் இருவரையும் மோதவிட்டு வேடிக்கை பார்த்தன. உரசல்கள் ஒன்றுமே இல்லை எனது வளர்ச்சி சிலருக்கு பொறாமையாக இருந்தது. அதுதான் எழுதிக் கிழிக்கின்றனர். என்று வாலி மறுத்தார் கண்ணதாசன் கப்சிப் ஆனார்.

**கண்ணதாசனும் வாலியும்**
மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் இராம மூர்த்திக்கு விருது வழங்கும் விழா சென்னையில் நடை பெற்றபோது கண்ணதாசனும் வாலியும் அதில் கொண்டனர். அப்போது எம்.எஸ்.விஸ்வநாதன் வெளிவர இருக்கு கற்பகம் திரைப்படத்தில் புதிய கவிஞர் வாலி எழுதிய ஒருபாடலை சுசிலா பாடுவார் என்று அறிவிக்க அவரும் பக்கத்து வீட்டு பருவ மச்சான் என்ற பாடலைப்பாடிவிட்டார். விழா முடிவில் கவிஞர் கண்ணதாசன் இங்கு எம்.எஸ்.வி. இசையில் வாலி எழுதியதை சுசிலாபாடினார்.
இந்தப் பாடலில் வந்த மனசுக்குள் தோரோட்டமை விழியால் வடம் பிடிச்சான் ஆரம்ப வரியே அற்புதம் பிரமாதம் இந்த வரியை எவ்வளவு ரசிக்கிறேன்னு உண்மையாக சொல்லணும்ன்னா.... வாலிதான் என் வாரிசு என்று நெஞ்சு திறந்தபோது வாலியின் முகத்தில் அத்தனை மகிழ்ச்சி இதனை உறுதிப்படுத்தத்தான் வாலி, "எழுதப்படிக்கத் தொரியாத எத்தனையோ பேர்களில் எமனும் ஒருவன். ஒரு அழகிய கவிதைப் புத்தகத்தை எமன் கிழித்துப் போட்டுவிட்டான்" என்று கண்ணதாசன் அமரரான போது கண்ணீர் வரிகளால் எழுதியிருந்தார்.
வாலியின் பாடல்கள் வியாபார நோக்கம் கொண்டதெனக் கூறுபவர்களுமுண்டு ஆனால் வாலியின் இலக்கியரசனை கண்டு அதிசயிப்பவர்களுமுண்டு அதிசயிக்கத்தக்க விதத்தில் இலக்கியவாதிகள் பிரமித்துப் போகும் காவியங்களைப் படைத்திருந்தார். புரியாத வார்த்தைகளில் பாடல் புனைவதில் முன்னோடி மாருகோ மாருகோ முக்காலா முக்காப்புலா டாலாக்குடோல் டப்பிமா சில உதாரணங்களாகும்.
திரை உலகில் கவிஞர் 50ஆண்டுகளுக்கு மேலாக 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களை எழுதியிருந்த வாலி 17 திரைப்படங்களுக்கு திரைக்கதை வனமும் எழுதியதுடன் சிறுகதைகள் கவிதைகள், உரைநடைகள் ஆகியவற்றை எழுதி வெளியிட்டிருந்தார். சிலேடைப் பேச்சில் வித்தகர் பாடல்களை எழுதி வாங்குவதற்கு வாலியின் வீட்டுக்கு எம்.எஸ்.வி.தொடங்கி இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் வரை அனேகமான இன்றைய இசையமைப்பாளர் அனைவரும் சென்றுள்ளனர்.
கோபமுடையவர் கவிஞர் வாலி. சககவிஞர்களை மதிப்பதிலும் வாலிக்கு நிகர் வாலிதான் என திரையுலகத்தினர் கூறுகின்றனர். பாடல் வரிகளில் சம்பந்தப்பட்டவர்களை இணைத்து விடுவதில் கில்லாடி. வார்த்தை விளையாட்டில் வல்லவர் வார்த்தையால் அடிக்கின்ற திறமை அவரைப்போல் சிலரிடம் தான் உள்ளன.
வாலி வெளிநாடு சென்றதில்லை அதனால் அவரை பாஸ்போட் இல்லாத கவிஞன் என்பார்கள் நான் வெளிநாடுகளுக்குப் போனதில்லை தவிர பல வெளிநாடுகள் எனக்குள் போயிருக்கின்றன. என தான் வெளிநாட்டு மதுபானம் அருந்துவதை சிலேடையாகச் சொல்லிக்காட்டுவார்.
2007 இல் மத்திய அரசு பத்மஶ்ரீ விருதை கவிஞர் வாலிக்கு வழங்கிக் கௌரவித்தது. தமிழக அரசானது சிறந்த பாடல்களை எழுதியதற்காக சிறந்த பாடலாசிரயருக்கான விருதையும் வழங்கியது. கலைமாணி விருதையும் தமிழக அரசு வழங்கிக் கௌரவித்திருந்தது. 1973 ஆம் ஆண்டு பாரத விலாஸ் படத்தில் அவர் எழுதிய இந்திய நாடு என் வீடு என்ற பாடலுக்கு மத்திய அரசு வழங்கிய தேசிய விருதை வாங்க மறுத்துவிட்டார்.
தமிழர் வாழ்விலும் சாவிலும் அவர்தாம் வாழ்க்கை வரலாற்றிலும், தமிழர்களுக்கென்று அவர்களின் நீரோட்டம் தொடர்பான வாழ்க்கை தொடர்பானதுமான முத்து முத்தான வரிகளை இயற்கையின் தத்துவத்துக்கு ஏற்றவாறு பாடல் எழுதி திரைப்படங்களில் முன்னணி வகிக்கும் வண்ணம் வாலியின் வரிகள் அமைந்திருந்தன. உதாரணமாக கொடுத்ததெல்லாம் கொடுத்தான் என்ற பாடல்வரிகள் தமிழ்மக்களின் மனங்களில் இன்றும் தலை முறை தலைமுறையாக நிலைத்திருக்கின்றது.
இந்தச் சினிமா வாழ்க்கை எம்.எஸ். விஸ்வநாதன் போட்ட பிச்சை என்று அடிக்கடி நன்றிமறவாமல் குறிப்பிடுவார் வாலி. மன்னன் படத்தில் வாலி எழுதிய அம்மா என்றழைக்காத உயிரில்லையே பாடலின் வரிகள் தாய்மையின் மேன்மையை உணர்த்துகின்றது. என்று பாராட்டி திருச்சியிலுள்ள ஒரு கோயிலில் கல்வெட்டாக வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஈழத்தமிழர்களுக்கான வரிகள்**
ஈழத்தமிழர்க்காய் வாலி எழுதிய வரிகளில். முள்ளிவாய்க்கால் தமிழன் விடிவெள்ளி வாய்க்காமல் தவிக்கிறானே!
அவன் விடியலுக்காய் அருந்தமிழ் வெளிச்சங்கள் பண்ணவேண்டும்.
உள்ளசோகங்களிலே உச்சசோகம் யாதெனில் தன்னினம் தகர்க்கப்பட்டுக்கொண்டிருப்பதை ஓரினம் உணராதிருப்பதுதான்.
தண்ணீர்க் கடல் நடுவே கண்ணீர் கடலாக தென்திசையில் தொன்மைக் குடிகள் நம தொப்புள் கொடிகள்.
வாடை அவிழ்க்காத தமிழ் வஞ்சியின் ஆடையை சிங்கள காடையன் அவிழ்த்தான் அவளது கற்பைக் கவிழ்த்தான்.
காடையரை நோக்கி தலைக்குமேல் கரங்களை தூக்கி வழிபட்டாள். வேண்டினார் விடவில்லை கிழிபட்டாள் கிளிநொச்சி தமிழிச்சி.
அங்கே தம்பி தம்பி என்று தமிழர்கள் விளிக்கும் தலைவனைக் காணாது களைத்துப் போன காளையர் படை தமிழர் நெஞ்சை துளைத்துப்பார்த்ததாம் துப்பாக்கி தோட்டாவால் உள்ளே தம்பி ஒழிந்திருக்கலாமென நம்பி.
வெள்ளைக் கொடிவிரித்தபடி
சமர்களம் வந்த சமாதானப் புறாக்களை சமைத்துச் சாப்பிட்ட சிங்களவர்படை. அங்கு புத்தனே நடத்துகிறான் பிரியாணிக்கடை.
யுத்தம் முடிந்த பிறகு கடலளவு ரத்தம் வடிந்த பிறகு நேர்ந்தது என்ன என்பதை நேர்முகக் காட்சியாய் இதோ இதோ என்று காட்டியது இங்கிலாந்துத் தொலைக்காட்சி
அந்த அக்கிரமங்களைப் பார்த்து அய்யோ அய்யோ என்று அலருகின்றது நம்முடைய ஆவி. அங்கே முள்வேலிக்குள் கிடக்கிறான் ஈழத்தமிழன் இங்கே கள்வேலிக்குள் கிடக்கிறான் சோழத் தமிழன். இமாலயப்பிழை இல்லை இதற்கிணையாய் இங்கே இன்னொருபிழை அச்சுப்பிழையானால் அதைத் திருத்தலாம் அச்சுப்பிழை யாரதை திருத்துவது. தர்மத்தின் வாழ்வுதனை சூதுகௌவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும். பலிக்காதிருந்ததில்லை பாரதியின் எந்தச் சொல்லும்...
போர் முடிந்த பின்னர் எழுதியிருந்தார்.
காலத்துக்கு ஏற்ப இளமையான சிந்தனைகள் மூலம் பாடல்களை உருவாக்கி அரை நூற்றாண்டுக்கு மேலாக தமிழரை உலகில் மாபெரும் சாதனையாளராக வலம் வந்து வாலிபக் கவிஞர் வாலியின் உயிரையும் உடலையும் எடுத்துக் கொண்டாலும் அவரது திரைத்தமிழும் கவிதைகளும் உயிர்பானவை வாலியின் வெற்றிடத்தை இனிமேல் எந்தக் கவிஞனும் நிரப்பமுடியாது என்ற உண்மையை இன்றைய கவிஞர்களும் ஒத்துக் கொண்டேயாக வேண்டும்.
தமிழர்களோடு வாழும் சாகாக்கவிஞர் வாலியின் புகழ்ப்பாடல்கள் யாவும் நீக்கமற நிறைந்திருக்கும்.

# குடாநாட்டு இளைஞரை நல்வழிப்படுத்துவது காலத்தின் கட்டாயம்

குடாநாட்டில் இளைஞர் சமுதாயத்தை நலவழிப்படுத்த வேண்டிய தேவை அவசரமாக எழுந்துள்ளது. இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற வகையில் இளைஞர் சமுதாயத்தினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். அவர்கள் நல்லவர்களாகவும், ஆளுமை உடையவர்களாகவும், சமுதாயத்தை வழிநடத்தக் கூடியவர்களாகவும் வளர்த் தெடுக்கப்படல் வேண்டும். ஓர் இளைய சமூகம் நல்ல முறையில் உருவாக்குவதற்கு இளவயதில் பெற்றோரும், ஆசிரியர்களும் வழிகாட்டுதல் வேண்டும் இளவயதில் நல்ல அத்திபாரம் இடப்படும் போதுதான் மிகச் சிறந்த இளைஞர் சமூகம் கட்டியெழுப்பப்படும். இதுவே எதிர்காலத்தில் நாட்டுக்கு உதவும் வகையிலான சமூக அமைப்பாக மாறும்.

ஆனால் இன்றைய இளைஞர்கள் மனம் போனவாறு நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது. பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பணிவாக நடந்து கொள்வது இளைய சமூகத்தின் முக்கிய கடமையாகும்.

இளைமையில் ஏற்படுத்தப்படுகின்ற ஒழுக்கம் இறுதிக் காலம் வரை நிலைத்து நிற்கக் கூடியது. இதனால் நல்ல பழக்க வழக்கங்களை இளமையிலேயே கற்றுக் கொடுக்க வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பதற்கேற்ப இளவயதிலேயே பிள்ளைகளை நல்வழப் படுத்த வேண்டும். இதில் தவறு ஏற்படுமாயின் பிற்காலத்தில் மோசமானதொரு இளைஞர் கூட்டத்தையே எம்மால் காண முடியும்.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் சமூக விரோதச் செயற்பாடுகளில் இளைஞர்களே அதிகளவில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. வழிப்பறிக் கொள்ளைகள், திருட்டுக்கள், பெண்களைக் கடத்துதல், வாள்வெட்டுக்கள், சண்டைகள் அடாவடித்தனங்கள் ஆகியவற்றில் இளைஞர்களே முக்கிய பங்கு வகிப்பதைக் காண முடிகின்றது. இது தவிர மதுபாவனையிலும் இளைஞர் சமுதாயம் முன்னிற்பதைக் காண முடிகின்றது. இது தொடருமாயின் எதிர்காலத்தில் ஒரு மோசமான சமுதாயத்தையே நாம் காண முடியும்.

இளைஞர்களைக் கைது செய்து சிறையில் அடைத்துவிடுவதால் பிரச்சினைக்கு ஒரு போதுமே தீர்வு கிடைத்துவிட மாட்டாது. அவர்களின் மனங்களில் உண்மையான மாற்றம் வேண்டும் தமது தவறுகளை அவர்கள் உணர்ந்து திருந்தி நடக்கும் போதுதான் உண்மையான மாற்றத்தைக் காண முடியும்.

இவர்கள் தமது மனம் போனவாறு நடந்து கொள்வது தவறென்பதைப் பெரியவர்கள் நாசூக்காக அவர்களிடம் எடுத்துக் கூற வேண்டும். அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து இயன்றளவு அவற்றுக்குப் பரிகாரம் தேடிக் கொடுக்க வேண்டும். இதில் மெத்தனமாக நாம் இருப்போமானால் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

குழந்தைகள் பிறக்கும்போது நல்லவர்களாகத்தான் இருக்கின்றனர். அவர்கள் நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும் மாறுவது அவர்கள் வளர்க்கப்படும் முறையிலேயே உள்ளது என்பதை நாம் மாற்றிவிடக் கூடாது.




## வரலாற்றில் இன்றைய தினம் 18.07.2017

64-உரோமின் அரைவாசிப் பகுதி தீயினால் எரிந்து அழிந்தது.

1290-பிரிட்டனின் முதலாம் எட்வட் அரசரால் அனைத்து யூதர்களையும் நாடு கடத்துமாறு அரசுகட்டளைபிறப்பிக்கப்பட்டது.

1806-மோல்டாவில் வெடிமருந்துக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் 200 பேர் வரை உயிரிழந்தனர்.

1925-அடல்ப் ஹிட்லரால் மெயின் காம்ப் நூல் பதிப்பிக்கப் பட்டது.

1982-268 சிறுபான்மையாளர்கள் கௌதமாலா பிளான்டிசான் செஷ் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்டனர்.

1984-கல்போர்னியாவின் சான்யசிட்றாவில் மக் டொனால்ட் உணவகத்தில் ஜேம்ஸ் ஒலிவர் ஹூபேற்றி என்பவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 21 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 19 பேர் காயத்துக்கு உள்ளாகினர் துப்பாக்கிதாரி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1992-லெஸ் ஹெரியின் சேர்னெற்ஸ் எனும் பொப் பாடகிகள் குழுவின் ஒளிப்படம், உலகளாவிய வலைத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட முதற்படமானது.

1994-ஆர்ஜென்ரீனா யூதசமூக மையத்தின்மீது புவனெஸ் ஏயரில் மேற்கொண்ட தாக்குதலில் 85 பேர் உயிரிழந்ததுடன் 300 பேர்வரை காயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் யூதர்கள்.



அடல்ப் ஹிட்லரால் வெளியிடப்பட்ட மெயின் காம்ப் நூல்

1995-களுத்துறையில் மூண்ட கலவரத்தில் 4 முஸ்லிம் இளைஞர்கள் உயிரிழப்பு.

1996-முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில் இராணுவத்தளம் கைப்பற்றப்பட்டது. ஆயிரத்து 200 வரையான சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

2002-இனக்கலவரங்களில் ஈடுபட்டவர்களில் ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை. இதுவே இந்த நாட்டின் சாபக்கேடு என்கிறார் வவுனியா நீதிவான்.

2005-இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்குடன் அமெரிக்க அரசதலைவர் ஜோர்ஜ் புஷ் வோஷிங்டனில் முக்கிய பேச்சு.


2012-பல்கேரியாவில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் பேருந்தில் குண்டு வெடித்தில் 7 பேர் உயிரிழந்ததுடன் 32 பேர் படுகாயமடைந்தனர்.

2016-யாழ்.பல்கலைக்கழக நிலவரங்களை நேரில் ஆராய்ந்தார் வடக்கு ஆளுனர்.

2016-கப்பலேந்தி மாதா ஆலயம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்.

2016 -யாழ். பல்கலையில் சண்டையிட்ட மாணவர் மீது கடும் நடவடிக்கை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவிப்பு.

# ஆடி மாத பலன்*



**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2, பாதங்கள்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றும் குணமுடைய இடப ராசியினரே இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் சுக்கிரன் சஞ்சாரத்தால் தைரியமாக எதையும் செய்யத் தோன்றும். உங்களது செயல்களால் உங்களுக்கு மற்றவர்களிடம் இருந்து பாராட்டுக் கிடைக்கும். விருந்து, கேளிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபடுவீர்கள். தந்தை மூலம் உதவிகள் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வருமானம் கிடைக்கும். சகோதரர்களுக்குள் ஒற்றுமை குறையும்.

தொழில் ஸ்தானாதிபதி சனியின் பலத்தால் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தொழில், வியாபாரத்தில் முழுக் கவனத்தையும் செலுத்துவீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். அரசு மூலமாக நடக்க வேண்டிய காரியங்களும் நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கலின்றி எதையும் செய்து முடிப்பார்கள். பணி தொடர்பான பயணங்கள் இருக்கும்.

குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பது நல்ல அம்சமாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாழ்க்கை துணையின் மூலம் ஆதாயம் உண்டாகும். குடும்பத்துடன் புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். தந்தை வழி உறவினர்களுடன் இருந்து வந்த மனக்கிலேசம் அகலும். ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். உங்களது பொருள்களின் மீது கவனம் தேவை. சாதுரியமான செயல்களால் இலாபம் உண்டாகும்.




**பெண்களுக்கு:** எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு சிறப்பாகச் செய்வீர்கள். பெரியவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

கலைத்துறையினருக்கு சகல காரியங்களிலும் அதிக கவனம் உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். தன்னம்பிக்கை ஏற்படும். வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அரசியல்துறையினருக்கு வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதை தவிர்ப்பது நல்லது.

**மாணவர்களுக்கு:** கல்வியில் தடங்கல் இன்றி நன்றாக படிப்பீர்கள். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் மூலம் கல்விக்கான உதவிகள் கிடைக்கும்.

**பரிகாரம்:** பவுர்ணமியில் மகாலட்சுமியை பூஜை செய்து வழிபட பண தட்டுப்பாடு நீங்கும். குழப்பங்கள் தீரும்

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:**
இந்த மாதம் உறவினர்கள் வகையில் தவிர்க்கமுடியாத சுபச் செலவுகளை சுமக்க நேரும். முக்கியமான பயணமும், முக்கிய பிரமுகர்களின் சந்திப்பும் உண்டாகும். அது உங்கள் எதிர்காலத்துக்கு நல்ல அத்திபாரமாக இருக்கும். சிலர் கூட்டு முயற்சிகளில் இலாபம் தேடலாம். சிலர் குடும்பத்தினரோடு கூட்டு சேர்ந்து தொழில் செய்து இலாபம் பார்க்கலாம்.

**ரோகிணி:**
இந்த மாதம் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில், வேலை, உத்தியோகம் ஆகியவற்றில் வெற்றி அடையலாம். சேமிப்பும் அடையலாம். உங்கள் உழைப்பும் நம்பிக்கையும் உங்களுக்கு முழுமையான பலனையும் திருப்தியையும் தரும். எதிர்ப்பும் இடையூறும் ஒருபுறம் இருந்தாலும், உங்களின் தன்னம்பிக்கையாலும் தைரியத்தாலும் அவற்றைப் போராடி எதிர்த்துநின்று வெற்றிகொள்வீர்கள்.

**மிருகசீரிடம் 1, 2, பாதங்கள்:**
இந்த மாதம் கடமைகளைக் காப்பாற்றுவீர்கள். பொருளாதாரத்தில் பிரச்சினை இருக்காது என்றாலும், வைத்தியச் செலவும் அல்லது வீண்விரயச் செலவும் தவிர்க்க முடியாததாக இருக்கும். அதனால் சிலசமயம் விரக்தி ஏற்படலாம். தொழில், வியாபாரம், உத்தியோகத்தில் பிரச்சனை இருக்காது.

## நாளை

**ஆடி - 03**
புதன்கிழமை
-19.07.2017
திதி:ஏகாதசி
பி.இ.02.01 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மா.05.40 வரை
சுபநேரம்:
04.31–06.01 வரை
ராகுகாலம்:
12.01–01.31 வரை
ஏகாதசி விரதம்

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 6 |
| 8 | 7 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 1 |
| 2 | 5 | 6 | 1 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 8 | 9 | 7 | 1 | 3 | 6 | 4 |
| 1 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 | 8 | 9 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 | 7 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 6 | 1 | 3 |
| 7 | 3 | 2 | 6 | 1 | 4 | 8 | 9 | 5 |
| 6 | 8 | 1 | 5 | 9 | 3 | 7 | 4 | 2 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

சம்சாரத்தை இரண்டு நாளா காணோம்...
கவலைப்படாதீங்க...
தேடிப்பிடிச்சு தர்றோம்...




நல்ல சம்சாரமா
தேடிப்பிடிச்சு தாங்க சார்...

**முகிலன்™**

சினம் என்பது வெந்நீர் போன்றது. அதை அடுத்தவர் மீது கொட்டா திருப்போம். கொஞ்சம் தூரமா வச்சா அதுவே ஆறிடும்...!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருக்கிற குளறுபடி சரியாகும். இலாபம் படிப்படியாக உயரும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**இடபம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் வியத்தகு அளவில் இருக்கும். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித் தரும்.

**மிதுனம்:** மற்றவருடன் அதிகம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் மிதமாக இருக்கும். வெளியூர்பயணம்பயன் அறிந்து மேற்கொள்ளலாம். தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** உறவினரால் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**சிங்கம்:** சுயகௌரவத்தைப் பாதுகாக்க முயல்வீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். வாகன பயணத்தில் மிதவேகம் நல்லது.

**கன்னி:** மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும். தொழிலில் உற்பத்தியிலும் விற்பனையிலும் சாதனை படைப்பீர்கள். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** பொதுநலனில் அக்கறை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** மனதில் குழப்பம் உண்டாகி விலகும். நல்லவர்களின் ஆதரவால் நன்மை உண்டாகும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**தனுசு:** சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணம் தவிர்ப்பது அவசியம்.

**மகரம்:** குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி பெறும். தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவர்.

**கும்பம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் வரவாகும். பெண்கள் கலையம்சம் மிக்க பொருள் வாங்குவர்.

**மீனம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழில் வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். சுமாரான இலாபம் கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.



# விவசாயிகளின் குரலாக நடிகர் விஜய் சித்தரிப்பு

தமிழக விவசாயிகளின் குரலாக நடிகர் விஜய் செயற்படுகிறார் என்பது போன்று சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்றன. தமிழக விவசாயிகளும் தமக்கு விஜய் பெரும் ஆதரவு தருகிறார் என்பது போன்ற கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

அண்மையில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில், விவசாயிகள் குறித்து தனது கருத்துக்களை விஜய் பகிர்ந்திருந்தார். “இந்தியா முதலில் விவசாயிகளுக்கு நல்லரசாக இருத்தல் வேண்டும். வல்லரசாக மாறுவதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்” என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இதற்கு தமிழக விவசாயிகள் நேற்றுமுன்தினம் நன்றி தெரிவித்தனர்.

டெல்லியின் போராடிவரும் தமிழக விவசாயிகளின் தலைவரான அய்யாக்கண்ணு, விஜய் தெரிவித்தமை எமது வயிற்றில் பாலை வார்த்தது போல் இருந்தது. அவரை நேரில் சந்தித்து எமது நன்றியை வெளிப்படுத்த எத்தனித்தோம். எனினும் முடியவில்லை என்று தெரிவித்தார்.

விஜய் ரசிகர்களும் தமிழகத்தில் நடைபெறும் மக்கள் போராட்டத்துக்கு ஆதரவாக பல்வேறு கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். இதுவும் இந்திய ஊடகங்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. (ம)

புதுச் செருப்ப மட்டும் திருடிட்டு போயிருந்தாக்கூடப் பரவால்ல...



அதுக்குப் பதிலா பிஞ்சு போன செருப்பை விட்டுட்டு போகும் போதுதான் ரொம்ப விரக்தியாகுதுயா...

தலைமைத்துவம் உருவத்தில் தங்கியதல்ல



அது அறிவிலும் திறனிலும் தங்கியது

கணவன்: அம்மாவுக்கு உடம்பு முடியலையாம் பணம் அனுப்பச் சொல்லி போன் பண்ணியிருக்காங்க...
மனைவி: கஞ்சி காச்சி குடிக்க சொல்லுங்க எல்லாம் சரியாகிடும்...
கணவன்: இந்தா நீயே உன் அம்மாட்ட சொல்லிடு



தைரியமும் துணிச்சலும் உள்ளவர்களிடம் கூடவே திமிரும் இருக்கும், ஏனெனில் அவர்கள் யாருக்கும் அடிமையாய் அடி பணிந்து வாழ்வதில்லை.

# உரையாடல்
# உயிர்களை நேசிப்போம்

ஒரு ஞாயிறு தினம்; மாலை நேரம்; சூரிய கிராமத்தில் வாழ்ந்து வந்த வளர்ப்புப் பிராணிகள் பல அந்தக் கிராமத்தின் கலாசார மண்டபத்தின் முன்றிலில் கூடின.



சேவல்

வணக்கம். இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் வருக! வருகவென வரவேற்றுக் கொண்டு. எனது தலைமையுரைக்குச் செல்கிறேன். நாம் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக வளர்ப்புப் பிராணிகளின் நலம்புரிச் சங்கத்தை உருவாக்கினோம். இந்தச் சங்க கலந்துரையாடல்களில் வளர்ப்புப் பிராணிகளான எங்களது நலன்களே பேசப்படும். எங்கள் நலன்களுக்கு இடையூறுகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றுக்கான நடவடிக்கைகளைச் சங்கம் எடுக்கும். இன்றும் உங்கள் சுகதுக்கங்கள் அசௌகரியங்கள் பற்றி ஒவ்வொருவரும் இங்கு பேசலாம். இறுதியில் தீர்மானங்கள் பற்றிப் பேசுவோம். (பிராணிகள் ஒவ்வொருவரும் தமது விடயமாகப் பேசத் தொடங்கின.)



நாய்

என்னை என் வீட்டில் எல்லோரும் நன்கு கவனித்து வருகின்றனர். வேளா வேளைக்கு எனக்குப் பிடித்த இறைச்சி, மீன் என்று தருகிறார்கள். ஞாயிறு தினங்களில் என்னைக் குளிப்பாட்டுவார்கள். எனக்கு நோய்கள் ஏற்படாதவாறு தடுப்பூசிகள் போடுவார்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை என்னுடன் மிக அன்பாகப் பழகுவார்கள். நானும் மிகவும் நன்றி விசுவாசத்துடன் அவர்களையும், அவர்கள் வீட்டையும் காத்து வருகிறேன். ஒரே ஒரு குறை என்னவெனில், நான் வீட்டுக்கு வருவோரைக்கடித்து விடுவேன் என்பதற்காக பகல் முழுவதும் என்னைச் சங்கிலியில் கட்டிப் போடுவர். இதனால் எனக்கு சுதந்திரம் இல்லை. நான் ஓர் அடிமை என்ற உணர்வு ஏற்படுகிறது.



கோழி

நீ கொடுத்து வைத்தவன். உன் வீட்டில் நல்ல சாப்பாடாவது போடுகிறார்கள். எங்களுக்கோ தாங்கள் உண்ட மிச்சத்தையே கொட்டுவார்கள். ஆனால் நாங்கள் இடும் முட்டைகளை மட்டும் ஒழுங்காக எடுத்து உண்டு விடுவார்கள். நாங்கள் குஞ்சுகளைப் பொரிப்போம். அவை கொஞ்சம் வளர்ந்ததும் சந்தையில் கொண்டு சென்று விற்று விடுவார்கள். வீட்டுக்கு விருந்தினர் வந்தால் முட்டை இடாது இருக்கும் எம்முள் ஒருவரைப் பிடித்து குளம்பும் வைத்து விடுவர். நன்றி கெட்ட மனிதர்.



கிளி

உன் கதை பரிதாபமாக உள்ளது. எனக்கு தினமும் பழங்கள், பருப்பு வகை, தானியங்கள் தருவர். என்னைக் கொஞ்சி விளையாடுவர். தங்களைப் போல என்னையும் பேசப் பழக்குவார்கள். எல்லாம் சரி. என் அழகிய இறகுகளை கத்தரித்து விட்டு என்னைக் கூட்டிலேயே அடைத்து வைத்துள்ளார்கள். நான் சுதந்திரமில்லாத சிறைப் பறவையாக இருக்கிறேன்.




பூனை

நான் என் வீட்டில் மட்டும் இருப்பதில்லை, வேலி, மதில் என்று பாய்ந்து நுழைந்து அயல் வீடெலாம் சுற்றி வருவேன். நானோர் சுதந்திரப் பிராணி. என் வீட்டிலும் எனக்கு உணவிருக்கும். உணவு கிடைக்காவிட்டால் நான் திருடிக் கூடத் தின்பேன். திருடுவது பிழைதான். ஆனால் உணவு தராவிட்டல் தானே திருடுகிறேன். எலிகளைப் பிடித்து விளையாடுவதும், தூங்குவதுமே என் பொழுது போக்கு.



பசு

எனக்கு உணவு தாராளம். பச்சைப்புல், புண்ணாக்கு, வைக்கோல், இலை தழையென்று நல்ல உணவு கிடைக்கும். என் வீட்டார் நிறைய வயல் நிலங்கள் வைத்துள்ளார்கள். ஆதலால் உணவுப் பஞ்சம் கிடையாது. இங்கு பல பசுக்கள், வயல் உழ காளைகள் என்று ஒரு பெரிய மந்தைக் கூட்டமே உள்ளது. நல்ல உணவு கிடைப்பதால் காலை மாலை என்று நாங்கள் நிறைய பால் கொடுக்கிறோம். வருடா வருடம் தைப்பொங்கலின் மறுநாள் பட்டிப் பொங்கல் அன்று எம்மைக் குளிப்பாட்டி, சீராட்டி பாராட்டி எமது இருப்பிடத்தில் பொங்கலிட்டு எம்மை அழகுபடுத்தி கொண்டாடுவார்கள். எம்மைக் கோமாதா என்றும் கும்பிட்டு மகிழ்வர்.



சேவல்

சக நண்பர்களே! இப்பொழுது கலந்துரையாடப்பட்டதன் அடிப்படையில் ஒரு தீர்மானத்துக்கு வருவோம். முன்பு இருத்ததை விட தற்பொழுது மனிர்கள்கள் வாழ்க்கை வசதிகளோடு வாழ்வதோடு ஜீவராசிகளை வருத்துதல் பாவம் என்ற கொள்கையுடனும் வாழ்கிறார்கள் போலும். ஆதலால் மனித நடவடிக்கைகளில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளதால் அவர்களிடமிருந்து எமக்கு தீமைகளை விட நன்மைகளே அதிகம் கிடைக்கிறது. ஆதலால் நாமும்

**குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகை நாடி மிக்க கொளல் (குறள் 504)**

என்ற குறள் படி அதாவது ஒருவருடைய குறைகளை விடவும் நிறைகள் அதிகம் உண்டென்றால் அந்த நிறைகளையே கருத்தில் எடுக்கலாம் என்பதன் படி பண்புடை யோராக இருப்போம் எனக் கூறி இந்தக் கூட்டத்தை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்!

## சரி(✓) அடையாளம் இட்டு எண்ணுவோம்; எழுத்தில் எழுதுவோம்



பிள்ளைகள்..................................பேர் உள்ளனர்.

## எங்கள் வீட்டுப் பசு



- எங்கள் வீட்டுப் பசு மிகவும் சாதுவானது.
- இதன் பெயர் லட்சுமி.
- இதனை நாம் லட்சுமி என்று அழைத்தால் திரும்பிப்பார்த்து ம்மா... என்று கத்தும்.
- இதன் நிறம் வெள்ளை.
- இதற்கு இரண்டு அழகான கொம்புகள் உள்ளன.
- இது அதிகாலையில் அன்போடு தன் கன்றை அழைக்கும்.
- அப்பா பசுவில் பால் கறப்பார்.
- அம்மா அதனை நன்றாகக் காய்ச்சித் தருவார்.
- பால் நல்ல சுவையான சத்துள்ள உணவாகும்.
- பசுவுக்கு நாம் எமது வயலில் உள்ள புல்லைக் கொடுப்போம்.
- சில வேளைகளில் அதனை வயலில் மேயவும் விடுவோம்.
- காலையும் மாலையும் பசு பால் தரும்.
- பாலிலிருந்து தயிர், நெய் என்பன பெறுகிறோம்.
- அம்மா பசுவை நன்றாகக் கவனிப்பார்.
- பசு எங்கள் குடும்பச் சொத்தாகும்.
- பசுவின் சாணம் பயிர்களுக்கு பசளையாகிறது.
- வெள்ளிக்கிழமை தோறும் சாணத்தைக் கரைத்து வீட்டைச் சுற்றி தெளிப்போம்.
- இது சிறந்த கிருமிநாசினியாகும்.
- மண் வீடுகளில் வாழ்வோர் சாணம் கொண்டு வீடுகளை மெழுகுவர்.
- கன்னிப் பசுவின் சாணத்தை எரித்து திருநீற்றைப் பெறுகிறோம்.
- பசுவைக் கோமாதா என்றும் அழைப்பார்கள்.

## ஆபிரகாம் லிங்கனுக்குரிய 7 நாள்கள்



1. ஆபிரகாம் லிங்கன் ஞாயிற்றுக்கிழமை பிறந்தார்
2. முதன் முதல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது திங்கட் கிழமை.
3. இரண்டாம் முறை அதிபரானது செவ்வாய்க்கிழமை.
4. வழக்கறிஞராக பதிவியை ஏற்றது புதன்கிழமை.
5. பிரசித்திபெற்ற உரையை (கெட்டிஸ்பாக்) ஆற்றியது வியாழக்கிழமை.
6. அவர் கொலையாளியால் சுடப்பட்டது வெள்ளிக்கிழமை
7. உயிர் நீத்தது சனிக்கிழமை.

## வர்ணம் தீட்டுவோம்



## தீர்ப்பாயத்தின்...

தின் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணை இன்று மீள ஆரம்பமாகிறது.

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதி கள் அன்ன லிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடுகிறது.

மாணவி வித்தியா படுகொலை வழக்கின் எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள்.

வழக்குத் தொடுநர் சார்பிலும் பிரதி மன்றாடியார் அதிபதி பி.குமாரரத்தினம் மற்றும் அரச சட்டவாதிகளான நாகரட்ணம் நிசாந்த், பிரிந்தா ரெஜிந்தன் ஆகியோர் தீர்பாயத்தில் முன்னிலையாவர்.

1ம் ,2ம் , 3ம் , 5ம் மற்றும் 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன , எம். என். நிஷாந்த மற்றும் சட்டத்தரணி சரங்க பாலசிங்க , ஆகியோரும் 5ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ம், 7ம் , மற்றும் 9ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாவர். அத்துடன் 8ஆம் எதிரி சார்பிலும் தீர்ப்பாயத்தால் ஒன்று தொடக்கம் 9 வரையான எதிரிகள் சார்பிலும் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலையாவார்.

இந்த வழக்கில் சட்டமா அதிபரால் சாட்சிகளான இணைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் சாட்சியப் பதிவுகள் இன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

**பின்னணி**

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்கு சென்ற வேளை கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்பு கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார். மாணவியின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் அரச சாட்சியாக உறுதியுரை செய்தார். மேலும் 2 சந்தேகநபர்கள் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத நிலையில் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய 9 எதிரிகளும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பாயத்தின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக 41 குற்றச்சாட்டுக்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட வுள்ளன.

இந்த வழக்கை விசாரணை செய்ய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோண மலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தை தலைமை நீதியரசர் நியமித்தார். (வ)

## மாகாண...

சி.வி.விக்னேஸ் வரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் அண்மையில் சர்ச்சை எழுந்திருந்தது. முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் அளவுக்கு அது வளர்ந்திருந்தது. இந்த விடயத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலையிட்டிருந்தார். அதன் பின்னர் விடயம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரனை நேரில் சந்தித்துப் பேசுவது தொடர்பில் இரா.சம்பந்தன் பிரஸ்தாபித்திருந்தார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பு எப்போது நடைபெறும் என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் தொடர்பாக மீளாய்வு செய்யும் சிறப்பு அமர்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கு முன்னதாக இருவரும் சந்தித்துப் பேச மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும், இந்த வார இறுதியில் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமையே சந்திப்பு நடைபெறும் என்று தெரியவருகின்றது. (த-5)

## திட்டமிட்ட...

திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நவம்பர் மாதம் 30ஆம் திகதி வெளியிடுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்பு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி வெளியிட உத்தேசிக்கப்பட்டிருந்தது. தற்போது செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னகர்த்தப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கை மே மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. வழமையாக நவம்பர் மாதம் 30ஆம் திகதியே வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படும். அந்தத் திகதியை இலக்கு வைத்தே, வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கை திட்டமிடப்படும். இந்த ஆண்டும் அதற்குரியவாறே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டி ருந்தன.

சில வாரங்களுக்கு முன்னர், ஒக்ரோபர் 31ஆம் திகதி வாக்காளர் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதற்குரிய வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தது. தற்போது திடீரென, அந்தத் திகதி செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னகர்த்தப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள் ளது. இரவு பகலாக வேலைகளை முன்னெடுக்க பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபை உள்ளிட்ட 3 மாகாணசபைகளின் ஆயுள்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது..அந்த மாகாணசபைகளின் தேர்தல்களை நடத்துவதற்கு ஏதுவாகவே, வாக்காளர் பெயர்ப் பட்டியலை செப்ரெம்பர் 30ஆம் திகதி வெளியிட தேர்தல்கள் திணைக்களம் உத்தேசித்துள்ளதாக அறியமுடிகின்றது. (த-5)

## இனவாத...

கான தேசிய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை மா. சக்திவேல் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கைக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்த அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பான ஐ.நா. அறிக்கையாளர் எமர்சன் பென், அரசியல் கைதிகள் தொடர்பாகவும் ஏனைய மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலும் கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

இவற்றை நிராகரிக்கும் வகையில் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச காரசாரமாகக் கருத்து வெளியிட்டுள்ளார் என அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருந்தன. அவரின் கருத்துகளுக்கு செவிமடுக்காமல் தனது இனவாத மற்றும் அடக்குமுறை சிந்தனை அடிப்படையில் நீதி அமைச்சர் கோபத்தை வெளிக்காட்டி இருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களிடம், வன்முறையைப் பாவித்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்பதையும், அவ்வாறு பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படவில்லை என்பதையும் நீதி அமைச்சர் நிரூபிப்பாரா? குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தமிழ்ப் பகுதி நீதிமன்றில் நிராகரிக்கப்பட்டதையும், நிராகரிக்கப்பட்ட அதே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தெற்கு நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கு முயற்சித்ததையும் நீதி அமைச்சரால் மறுக்க முடியுமா? இலங்கை அரசியல் அமைப்பைக்கு உட்பட்டு அமைக்கப்பட்டுள்ள ஒரு நீதிமன்றம் நிராகரித்த வாக்குமூலத்தை இன்னுமொரு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முடியுமா?

கடந்த காலங்களில் அரசியல் கைதிகள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் அரச தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். அத்தோடு அரசியல் கைதிளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு 2016 நவம்பர் 23ஆம் திகதி, அரசியல் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய அறிக்கையை அரச தலைவரிடம் சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை 2016.11.24ஆம் திகதி அரச தலைவர் செயலகத்தால் நீதி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கத்தை நீதி அமைச்சர் வாசித்துள்ளாரா? என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தற்கால தேசிய அமைப்பு கேள்வி எழுப்புகின்றது.

நீதிமன்றில் வழக்கு நடந்துகொண்டிருக்கும் நிலையில் 71 புலிப் பயங்கரவாதிகள் மட்டுமே இன்று தடுப்பில் உள்ளனர். இவர்கள் மிகவும் மோசமான செயல்களில் ஈடுபட்டவர்கள். இவர்களை விடுதலை செய்ய முடியாது எனத் தமது தீர்ப்பை நீதி அமைச்சர் வழங்கி இருக்கின்றமை நீதியை அவமதிக்கும் செயலாகும். தமிழர்களுக்கு எதிராக நீதிக்குப் புறம்பாக செயற்பட முடியும் என்பதாகவே இவரின் இந்தக் கூற்று அமைந்துள்ளது. போர்க்குற்றம் இடம்பெறவில்லை; இராணுவத்தைப் பன்னாட்டு நீதிமன்றம் முன் நிறுத்தமாட்டோம் என நீதி அமைச்சர் கூறி இருப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை மறுக்கும் செயல் மட்டுமல்ல உண்மையை ஏற்றுக்கொள்ள நல்லாட்சி அரசு ஆயத்தமில்லை என்பதை எடுத்துக்காட்டுவதோடு நல்லிணக்கம் என்பதெல்லாம் அரசியல் முகமே தவிர இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது இவர்கள் காலத்தில் இடம்பெறப்போவதில்லை என்பது தெளிவாகின்றது என்றுள்ளது. (த)

**தவறவிடப்பட்டது**

கோண்டாவில் கண்ணா களஞ்சியத்திற்கு அருகில் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, ATM Card அடங்கலாக பணப்பொதி தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஊங்கணன் பிறிண்டர்ஸில் ஒப்படைக்கவும்.

077 132 7303

**HIACE வான் விற்பனைக்கு**

வாகன இலக்கம் -
NPGF - 5731
உடையது.

077 724 9988

**வேலையாள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் ஸ்ரூடியோ ஒன்றுக்கு வீடியோ அனுபவம் உள்ள வேலையாள் தேவை.
(ஆண்கள் மட்டும்)

077 801 4704

**பெண் ஊழியர் தேவை**

72. இராமநாதன் வீதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவகத்திற்கு பெண் உதவியாளர்ஒருவர்தேவை. புதன்கிழமை (19.07.2017) அன்று மு.ப. 10.00 - 01.00 மணி வரை நேரில் வரவும். **நிர்வாகி**

077 703 3729

**காணி விற்பனைக்கு**

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தடியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

077 913 1128



**சேவைநலன் பாராட்டு**

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக 28 வருடங்கள் கடமை புரிந்து இன்றுடன் (18.07.2017) செவ்வாய்க்கிழமை ஓய்வுபெறும்

**சித்தர் சண்முகேஸ்வரன்**

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரது எதிர்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.**

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1381
சீட்டிழுப்பு திகதி 2017.07.17
வெற்றி இலக்கங்கள் 18 28 48 50 G
20 26 27 53
ரூ. 15,284,132/-

**SUPER BALL**

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 677
சீட்டிழுப்பு திகதி 17.07.2017 ஊதா
M 04 10 65 73
சுப்பர் ஜக்பொட் ரூ. 52, 649, 888/=
வெல்லப்படவில்லை
13 15 23 51
பச்சை நிற டிக்கட்டுகள் 20.07.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம் 2904 திகதி 17.07.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 27 30 43 71 E
போனஸ் இல. 63
புதன்கிழமை ஜக்பொட் 31, 854, 000/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 08 31 41 51
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.07.19 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

**மகாஜனன்களின் ஒன்றுகூடல் -2017**

யா/மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடலும் இராப்போசனமும் 29.07.2017 (சனிக்கிழமை) மாலை 5.00 மணி முதல் கல்லூரி வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் **ரட்ணம் ரட்ணதுரை** அவர்களின் **"ரிதம் ஸ்ரார்"** இன்னிசைக் குழுவினரின் இன்னிசை கானங்களும் நடைபெறும்.

ஒன்று கூடலுக்கான ரூபா 500 பெறுமதியான நுழைவுச் சீட்டுக்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**மகாஜனன்கள் ஒன்றிணைவோம்.
மகாஜனாவை வளப்படுத்துவோம்.**

**பழைய மாணவர் சங்கம்.
யா /மகாஜனக் கல்லூரி.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
07 . 12 . 1932



இறப்பு
17 . 07 . 2017

### சங்கரப்பிள்ளை பரமேஸ்வரன்

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டசங்கரப்பிள்ளை பரமேஸ்வரன் நேற்று (17.07.2017) காலமாகிவிட்டார்

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ரமணகுமார் (Commercial Bank).கிரிக்குமார். வி.தயாபரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**077 900 7805**

**தகவல்:**
**மனைவி , பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

### திருமதி யோசவ் ஞானப்பூ (மணி)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் 793 (425). நாவலர் வீதி. யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோசவ் ஞானப்பூ (மணி) நேற்று (17.07.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிற் (அருளம்பலம்). றோசமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் யோசவ் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்ரன் ஜெயகுமார் (கிராமசேவையாளர்) மற்றும் யோண்சன் ராஜ்குமார் (ஆசிரியர் திருக் குடும்ப கன்னியர்மடம், பிரதி இயக்குனர், திருமறைக் கலாமன்றம்), மேரி பிறேமளா ஜெயரோஸ் (நூலகர் யா/இந்து மகளிர் கல்லூரி), மரியஅசம்ரா (ஆசிரியர் யா/நாயன்மார்கட்டு), மகேஸ்வரி (யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), ஜெயராணி மஞ்சுளா (அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூகசேவைகள் திணைக்களம், கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி யோ. றுஜந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கோட்டக்கல்விப் பணிமனை, நல்லூர்), கு.உமாகாந் (யாழ். போதனா வைத்தியசாலை), பி.றெஜினோல்ட், சாந்தகுமார் (இ.போ.ச. திணைக்களம்), ஆ.சதீஸ்குமார் (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியும் டிலக்ஷிகா, ஜோய்டிலுக்சன், டிலக்ஷனா, எஜின் டீனுஜா, அபிஷேக், அனந்திகா, அனோமிகா, றொசானா, நிதர்சனா, ஷெரோனிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (18.07.2017) செவ்வாய்க்கிழமை பி.ப.3.45 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் நடைபெற்று இரங்கல் திருப்பலியுடன் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**793 (425), நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**0212221828, 077 308 6944**

தகவல்:
**யோ.யோண்சன் ராஜ்குமார்**
**(மகன்)**

## மரண அறிவித்தல்



### திருமதி ரஞ்சினிதேவி ரவீந்திரன்

மண்கும்பான், 4ஆம்வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும்அரியாலை, திருமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சினிதேவி ரவீந்திரன் நேற்று (17.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும் ரவீந்திரனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் பராசக்தி தம்பதியரின் மருமகளும் ரஞ்சரத்தினம், மயூரி (பிரான்ஸ்) காலஞ்சென்றதயாளினி ஆகியோரின் சகோதரியும் தினேஸ்வரன், தனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் விந்துசா, மயூரி ஆகியோரின் மாமியும் பவிஸின் அன்பு அப்பம்மாவும் நந்தினி, பிரசாத் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் விதுசா, பவித்திரா, அக் ஷயா ஆகியோரின் அத்தையும் ஹானிஸ், விஷ்மி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திருமகள் வீதி.**
**அரியாலை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**075 097 5326, 075 255 7535**

## ஆயிரம்...

என்ற குற்றச்சாட்டில், இலங்கையர் உள்பட மூவரை, இந்தியாவின் குற்றப்பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திவ்யன் (வயது-30), இந்தியா கனக நகரைச் சேர்ந்த நவாஸ் செரீப் (வயது-22), பெங்களுர் வடமேற்கைச் சேர்ந்த நதீம் செரீப் (வயது-30) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு வங்கிகளின் 144 போலிக் கடனட்டைகள், அவற்றைத் தயாரிப்பதற்காக வைத்திருந்த 36 இயந்திரங்கள், 270 போலி சுவீப் அட்டைகள், காட் ரீடர்ஸ், அச்சு இயந்திரங்கள் என்பவற்றையும் பொலிஸார் இவர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

மூவரும், வெவ்வேறு நாடுகளிலுள்ள வங்கிக் கடனட்டை வாடிக்கையாளர்களை இலக்கு வைத்து, அவர்களின் கடனட்டைகளின் இரகசிய இலக்கத்தைப் பயன்படுத்தியே, போலிக் கடனட்டைகளைத் தயாரித்து, அவற்றின் ஊடாக, பொருள்களைக் கொள்வனவு செய்து, மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இணையத்தில் பொருள்களைப் பதிவு செய்தே, இவ்வாறான மோசடியில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இது பெரியளவிலான இணைய மோசடியாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது. இணையக் கொள்வனவுக்கூடாக, வெளிநாடுகளிலுள்ள வாடிக்கையாளர்களின் இரகசிய இலக்கங்களைத் தெரிந்துகொண்டு, இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதாக இந்தியாவின் குற்றப்பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திவ்யன் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு சென்னைக்குச் சட்டவிரோதமாக வந்தவரென்றும், சென்னைப் பொலிஸாரால் தேடப்பட்டு வருபவரென்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-5)

## யாழ்ப்பாணச்...

குடும்பங்களுக்குப் பதிலாக புதியவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 53 ஆயிரத்து 331 குடும்பங்கள் சமுர்த்தி முத்திரைகளைப் பெற்றுக் கொள்கின்றன. இதனைவிட, சமுர்த்தி முத்திரை பெற்றுக் கொள்வதற்கு 44 ஆயிரம் குடும்பங்கள் விண்ணப்பித்திருந்தன. கடந்த ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட இந்த விண்ணப்பங்கள் ஆராயப்பட்டுத் தற்போது இறுதி செய்யப்பட்டு வருகின்றன. சமுர்த்தி முத்திரை ஏற்கனவே பெற்றுக் கொண்டிருப்பவர்கள், புதிதாக விண்ணப்பித்த வர்கள் சகலர் தொடர்பிலும் 29 விடயங்களை கவனத்தில் எடுத்து மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் வறுமைநிலையில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்களுக்கே சமுர்த்தி முத்திரை வழங்கப்படவுள்ளது.

இதனால் ஏற்கனவே சமுர்த்தி முத்திரை பெற்றுக் கொண்டிருந்த அரைவாசிப் பேர் வரையில் அதனை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள சமுர்த்திப் பட்டியில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகச் சில தினங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

வேலணை, மருதங்கேணி, காரைநகர், நல்லூர், யாழ்ப்பாணம். நெடுந்தீவு, தெல்லிப்பழை பிரதேச செயலகங்களின் புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரதேச செயலகங்களின் பட்டியல் இரண்டொரு தினங்களில் தயாரிக்கப்படும் என்று தெரிய வருகின்றது. (த-5)

## சிமெந்து...

களை வெட்டி அகற்றுவதற்கு அனுமதி அளிப்பதற்கான எந்த ஆவணமும், கையெழுத்திடுவதற்காக வந்ததை நான் பார்க்கவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து விசாரிக்கும் அரச தலைவர் ஆணைக்குழுவிடம், தாக்கல் செய்துள்ள சத்தியக் கடதாசியிலேயே கோத்தபாய ராஜபக்ச இவ்வாறு கூறியுள்ளார். முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்ட இரண்டு மூத்த இராணுவ அதிகாரிகள் மற்றும் மூத்த அரச அதிகாரி ஒருவருக்கு எதிராக கோத்தபாய ராஜபக்ச இந்தச் சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்துள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் இயந்திரங்கள், இராணுவத்தினரால், 100 மில்லியன் ரூபாவுக்குப் பழைய இரும்புக்காக வெட்டி விற்கப்பட்டமை தொடர்பாகப் பெரும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து விசாரிக்கும் அரச தலைவர் ஆணைக்குழு, விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

முன்னைய ஆட்சிக்காலத்தில் 2011இற்கும் 2015 இற்கும் இடையில் இந்த மோசடி இடம்பெற்றிருந்தது. விசாரணைகளில் இந்த மோசடி தொடர்பான ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அரச தலைவர் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம் அளித்திருந்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலர் சிறிபால ஹெட்டியாராச்சி, இந்த இரும்பை விற்பனை செய்வதற்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அனுமதி அளித்துள்ளார் என்று, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தம்மிடம் கூறி, அதிகாரபூர்வக் குறிப்பை வெளியிட்டார் என்று கூறியுள்ளார்.

அதேவேளை, இதனை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அவசியம் என்ற உள்ளகக் கணக்காய்வாளர் பிரேமச்சந்திர சுட்டிக்காட்டியுள்ள இன்னொரு அறிக்கையும் பாதுகாப்பு அமைச்சில் உள்ளது.

சிமெந்துத் தொழிற்சாலை இயந்திரங்கள் பிரிட்டன் மற்றும் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டவையாகும். ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்களுக்கு உற்பத்தியாளர்களால் 100 ஆண்டுகால உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த இயந்திரங்களை வெட்டி எடுக்கப்பட்ட இரும்பு, சிராஸ் முகமட், யூசுப் அஸ்தான், மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான ஏக்கநாயக்க ஆகியோருக்கு விற்கப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான ஏக்கநாயக்கவுக்கு விற்கப்பட்ட இரும்பின் பெறுமதி 75 மில்லியன் ரூபா எனத் தெரியவந்துள்ளது.

741 ஏக்கர் பரப்பளவுள்ள சிமெந்து ஆலைக் காணியைச் சுவீகரிக்காமல், இராணுவம் தன்னிச்சையாகவே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்றும் தெரியவந்திருக்கிறது.

இது தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க, முன்னாள் யாழ். படைகளின் தளபதிகளான மேஜர் ஜெனரல்கள் மகிந்த ஹத்துருசிங்க, உதய பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலர் சிறிபால ஹெட்டியாராச்சி, சிராஸ் முகமட், யூசுப் அஸ்தான் ஆகியோரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. (த)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி (மங்களம்) பதஞ்சலி



பிறப்பு 09.08.1943
இறப்பு 17.07.2017

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி (மங்களம்) பதஞ்சலி நேற்று (17.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம் - விசாலாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், பதஞ்சலியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி (பூமணி - பிரான்ஸ்) மற்றும் தனபாலசிங்கம் ( ஆஸ்திரேலியா), சகுந்தலா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், பிருந்தா (படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்), நர்மதா (ஆஸ்திரேலியா), கவிதா (ஆசிரியர் - பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார் (தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்), கபிலன் (ஆஸ்திரேலியா), மஞ்சுதன் (படவரைஞர்), விதுரன், செந்தூரன், அபிராமி, நிர்மலன், சுதாங்கன் ஆகியோரின் அன்பு மாமியாரும், றமணனின் பெரிய தாயாரும், அகரிஷா, அரனிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2017) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கற்பகப்பிள்ளையார் கோயிலடி,**
**உடுவில் கிழக்கு, உடுவில்.**

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை ஐயாத்துரை



பிறப்பு 09.04.1935
இறப்பு 15.07.2017

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை ஐயாத்துரை 15.07.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் ஜெகதாம்பாள், கிருஸ்ணசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகேந்திரராசா, பத்மினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா தேவகடாட்சம் மற்றும் தங்கலெட்சுமி, கமலினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீபன், ஸ்ரீபனி, சுகாசினி, சிறிகாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுலோயன், சுபாங்கன், யஸ்னவி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் 44, பொன்னம்பலம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.44. பொன்னம்பலம் வீதி.**
**அரியாலை. யாழ்ப்பாணம்.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**077 739 2415, 021 221 1250**

## சம்பந்தனை...

சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

இரண்டு நாள்கள் பயணமாகக் கொழும்பு வந்த அவருக்குக் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் நேற்று வரவேற்பளிக்கப்பட்டது. இந்த நிலையில், இன்று காலை முதன்மை எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

அதன்பின்னர் இலங்கை அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பையடுத்து இவ்விரு அமைச்சர்களும் இணைந்து கூட்டு ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தவுள்ளனர்.

அதேவேளை, நாளை புதன்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் சிங்கப்பூர் அயலுறவு அமைச்சர் சந்திக்கவுள்ளார்.

இவரின் இந்தப் பயணத்தில் இலங்கை சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கல் மற்றும் சிங்கப்பூருடன் இலங்கை அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, திருகோணமலையில் சிங்கப்பூர் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி மற்றும் முதலீடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.

இதற்குப் புறம்பாக அரசமைப்பு மறுசீரமைப்பு பணி பற்றியும் சிங்கப்பூர் அயலுறவு அமைச்சர் கேட்டறிவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடனான சந்திப்பின்போது வடக்கு, கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் அவர் கேட்டறிவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

## திண்மக்...

திகள் இல்லை என அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இலங்கையின் சகல மாகாணங்களிலும் உள்ளூராட்சிச் சபைகள் தோறும் திண்மக் கழிவகற்றல் பொறிமுறையை உருவாக்கி செயற்படுத்துவது தொடர்பில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசல் முஸ்தபாவின் ஏற்பாட்டில் நேற்றுக் கொழும்பில் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

அரச தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போதே வடக்கு மாகாணம் சார்பாக மேற்படி விடயம் முன்வைக்கப்பட்டது.

இது குறித்து அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சிச் சபைகளில் 18 சபைகளில் திண்மக் கழிவகற்றல் பொறிமுறை அமைப்பதற்கான இடவசதிகள் இல்லை. எனவே அந்த நிலங்களை முழுமையாக உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆளுகையில் வழங்கவேண்டும். அதேபோன்று வடக்கு மாகாணத்தில் 6 சபைகளில் மட்டுமே தற்போது சேதனப்பசளை உருவாக்க மையம் உள்ளது. எஞ்சிய 28 சபைகளிலும் அவற்றை உருவாக்கவேண்டும்.

இதேபோன்று 9 மாகாணங்களுக்குத் தலா ஒரு குப்பை அகற்றும் கனரக வாகனம் வீதம் வழங்க இணக்கம் காணப்பட்டது. அதனை கரவெட்டியில் பொருத்தி யாழ்ப்பாண உள்ளூராட்சிச்சபைகளுக்கான பணியை அங்கே கவனிக்க முடியும். அதேபோன்று மேலுமொரு இயந்திரம் வழங்கப்பட்டால் அதனை வவுனியாவில் பொருத்தி அந்தப் பகுதியின் தேவையைக் கவனிக்க முடியும். இதேபோன்று மூடிய நிலையில் கழிவு அகற்றும் கொம்பக் வாகனங்கள் வடக்கில் 10 சபைகளில் மட்டுமே உள்ளன. மேலும் 10 வாகனங்கள் தேவையாக உள்ளன.

இந்தப் பணிகளுக்கு அதிக நிதிச் செலவு ஏற்படும். ஆயினும் போரினால் பாதிக்கப்பட்ட சபைகளிடம் நிதியே இல்லாத நிலைமையில் 10 உள்ளூராட்சிச் சபைகளுக்கு எந்தவிதமான வருமானங்களும் இல்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பில் 9 மாகா ணங்களின் தலைமைச் செயலாளர்கள் , மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்கள், ஆணையாளர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (த-101)

## ஐ.நாவின்...

களை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாது என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் தற்போதைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மோசமாக விமர்சித்திருந்தார்.

அத்துடன், பயங்கரவாத எதிர்ப்பின்போது, மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் ஊக்குவிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர், இலங்கை அரசு ஆக்கபூர்வமான கலந்துரையாடல் செயல்முறைகளில் ஈடுபடவேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச,

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எப்படி வரையவேண்டும் என்ற ஐ.நாவின் வழிகாட்டுமுறைகளை அரசு ஏற்றுக் கொள்ளாது.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமே கொண்டு வரப்படும். சட்டங்கள் இங்குதான் உருவாக்கப்படவேண்டும். அவற்றை எமது நாடாளுமன்றம் தான் அங்கீகரிக்கவேண்டும்.

இந்த சட்டங்கள் எமக்கானவை. ஏனையவர்களுக்காக நாம் அதனை செய்ய முடியாது என்று கூறியுள்ளார். (த)

## சுகாதாரத்...

ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி, சுகாதாரத் தொண்டர்கள் பல வாரங்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது நியமனம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தபோதும் ஆராயப்பட்டிருந்தது.

அரச தலைவரின் செயலாளருடன் கடந்த மாதம் இதற்கான பேச்சுக்கள் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இறுதி நேரத்தில் அது நடக்கவில்லை. தற்போது அரச தலைவரின் செயலாளருடன் பேச்சு நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கு முன்னதாக, கொழும்பு அரசின் சுகாதார அமைச்சில் மாகாண சுகாதார அமைச்சர்களின் மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் இந்த விடயம் ஆராயப்படும் - என்றார். (த-5-101)

## ரெலோவுக்குள்...

அமைப்புத் தெரிவித்திருந்தது.

கடந்த 13ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் இது தொடர்பான கடிதத்தை அந்த அமைப்பு அனுப்பியிருந்தது. அதற்கு அன்றைய தினமே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதில் அனுப்பியிருந்தார். ரெலோ அமைப்பின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்தார்.

**புதியவர் யார் ?**

அமைச்சரவையில் ரெலோவின் சார்பில் ஏற்படும் வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் அந்தக் கட்சி வவுனியாவில் நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்தது. அந்தக் கட்சியின் செயலாளர் ந.சிறிகாந்தா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் பெயரைப் புதிய அமைச்சராகப் பிரேரித்துள்ளார். இதற்குக் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ஞா.குணசீலன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்ட முக்கியமானவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதனால் கட்சியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

**விந்தனே அமைச்சர்**

இதேவேளை, ரெலோ அமைப்பினால் ஊடக அறிக்கைகள் வழமையாக அனுப்பப்படும் மின்மடல் முகவரியிலிருந்து நேற்று மதியம் மின்மடல் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில், விந்தன் கனகரத்தினத்தையே அமைச்சராகத் தமது கட்சி நாளை (இன்று) முதலமைச்சருக்குப் பிரேரிக்க வுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பில் கட்சி இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று பதிலளித்தார். கட்சியின் செயலாளர் ந.சிறிகாந்தாவிடம் கேட்டபோது, எமது கட்சியின் முடிவு மாறலாம். (மின்மடலில் விந்தனின் பெயர் குறிப்பிட்டுள்ளதே என்று கேட்டதற்கு) நாம் முதலமைச்சரிடம் இன்று பெயர் பரிந்துரைத்த பின்னர்தான் ஊடகங்களுக்கு வெளியிடுவோம் என்றார். (த-5-101)

## பதவியை...

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா விசனத்து டன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் நியமனம் மற்றும் தற்போது அதனோடு ஒட்டி நடைபெறும் விடயங்கள் தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும் கட்சியின் உள் முரண்பாடே தற்போது பேசு பொருளாகவுள்ளது. அவ்வாறு எழும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கே ஆளும் கட்சிக்கு நேரம் போதாமல் உள்ளது. மக்களுக்கான எந்தப் பணியும் இடம்பெறவில்லை.

இதேநேரம் அறுதிப் பெரும்பான்மையோடு இருந்த முதலமைச்சரோ இன்று பெரும்பான்மை இல்லாத தொங்கு கட்சி போன்ற நிலையில் சகலரின் இழுப்புக்கும் ஆளாகியுள்ளார். மாகாண சபையின் 5 அமைச்சர்களில. தற்போது ஒரே மாவட்டத்தில் 3 அமைச்சர்கள் உள்ளனர். இந்த நிலையில் 4 ஆவது அமைச்சரும் யாழ்ப்பாணத்திலேயே நியமிக்கும் வாய்ப்புத் தென்படுகின்றது. அவ்வாறு நியமிக்க முடியாது என்று சட்டம் கூறவில்லை.

இருப்பினும் சனநாயக முறைப்படி ஏனைய மாவட்டங்களும் உள்வாங்கப்படவேண்டும். இல்லையேல் அது யாழ்ப்பாண மேலாதிக்கம் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாகுமோ என்ற அச்சம் உள்ளது. அதனையும் இந்த வினைத்திறன் அற்ற மாகாண சபையின் ஒட்டுமொத்த செயலையும் கண்டிக்கும் வண்ணம் எனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அன்றி அடிப்படை உறுப்பினர் பதவியைக்கூட துறப்பது தொடர்பில் விரைவில் பரிசீலனை செய்யவுள்ளேன்.

இன்றைய நிலையில் ஒரு சீரான முறையில் மாகாண சபையை இனி முதலமைச்சர் கொண்டு செல்வார் என்று நான் நம்பவில்லை - என்றார். (த-5-101)

## ஆஸி...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் முக்கிய அமைச்சர்கள் சிலரையும் சந்திக்க உள்ளார்.

இரு தரப்பு பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் அவர் பேச்சுக்களில் ஈடுபட உள்ளார்.

டெங்குக் காய்ச்சலைத் தடுக்க ஆஸ்திரேலியா வழங்கும் உதவி குறித்தும் அரச தலைவருடன் இணைந்து அவர் அறிவிக்க உள்ளார்.

மேலும், நல்லிணக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் குறித்தும் அவர் பேச்சுக்களை நடத்துவார் எனக் கூறப்பட்டது. (த-ய)

## உள்ளூராட்சி...

மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்புக்கான உள்ளூராட்சி நிறுவனத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக இலங்கை மன்றத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசு தேர்தலை நடத்தவில்லை என்று அரசியல் ரீதியிலும், ஊடகங்களிலும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், உண்மையில் அரசு தேர்தலை நடத்தாமல் இருக்கவில்லை. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பிரதி நிதிகளைத் தெரிவு செய்தல் தொடர்பில் முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த சட்டத்திலுள்ள முறைகேடுகள் மற்றும் ஒழுங்கற்ற தன்மை காரணமாகவே தேர்தலை நடத்த முடியாத நிலை உருவானதாக அரச தலைவர் தெரிவித்தார்.

கலப்புமுறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை டிசெம்பர் மாதம் நடத்துவதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும், அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இணங்கியமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 11 தமிழர்கள்...

யலுக்காக விமல் வீரவன்ச பொய் உரைக்கிறார்"

இவ்வாறு தலைநகரில் கடத்தப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்களின் பெற்றோர் கவலை வெளியிட்டனர்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"எமது பிள்ளைகள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் நாம் 2009ஆம் ஆண்டிலிருந்தே விசாரணைக்குக் கோரிக்கைவிடுத்து வந்துள்ளோம். கடந்த காலங்களில் மூடிய அறைக்குள் விசாரணைகள் இடம்பெற்றன. அங்கு என்ன நடக்கிறது? என்பது யாருக்கும் தெரியவரவில்லை. தற்போது பகிரங்கமான விசாரணை நடைபெறுகின்றது.

கடற்படையினர் வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே கொமடோர் தசநாயக்க கைது செய்யப்பட்டார். உண்மை இதுவாக இருக்க நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அரசியலுக்காக பொய் உரைக்கிறார்" என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-5)

## டில்லி...

நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக, தேசிய விவசாயிகள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழக விவசாயிகள், இந்தியத் தலைநகர் டில்லியில் இதுபோன்று தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே, இந்த அறிவிப்பைத் தேசிய விவசாயிகள் கூட்டமைப்பு விடுத்துள்ளது.

விவசாயிகளுக்கான மானியம் மற்றும் இழப்பீடுகள் இல்லாமல் செய்தல், உரமானியத்தை உரிய முறையில் வழங்காமை, அறுவடை[illegible] உரிய விலையைப் பெற்றுக்கொடுப்பத[illegible] நடவடிக்கை எடுக்காமை ஆகியவற்று[illegible] எதிர்ப்புத் தெரிவித்தே, இந்தக் கவனவீர்[illegible] ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க வுள்ள தா[illegible] தேசிய விவசாயிகள் கூட்டமைப் பின் ஏற்பா[illegible]டாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய நாடளாவிய ரீதியில் உள்ள சகல பிரதேசங்களையும் சேர்ந்த விவசாயிகளும் பங்கேற்பர் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

கொழும்பு, கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கவுள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து மனுவைக் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார். (த-5)

## பொலிஸார்...

குழு, தொழிலாளியின் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்குமாறும் பரிந்துரைத்துள்ளது.

தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களால் 2011ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ரொஷான் சானக என்ற தொழிலாளி உயிரிழந்தார். அப்போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இந்தச் சம்பவம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மாஹநாம திலகரத்ன தலைமையில் அரச தலைவர் ஆணைக்குழுவை அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நியமித்தார். அந்த ஆணைக்குழு விசாரணைகளை முடித்து அதன் அறிக்கையை அரச தலைவரிடம் வழங்கியிருந்தது.

அந்த அறிக்கை வெளியிடப்படாமல் கிடப்பில் போடப்பட்டது. அதன் பிரதியை வழங்குமாறு கடந்த பெப்ரவரி மாதம் ரொஷான் சானகவின் தாயார் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அரச தலைவர் செயலகத்திடம் கோரியிருந்தார்.

இந்த நிலையில் அந்த அறிக்கையின் பிரதி கொல்லப்பட்ட தொழிலாளியின் தாயாரிடம் அரச தலைவர் செயலகத்தால் கடந்த 13ஆம் திகதி வழங்கப்பட்டது.

"ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு காட்டுமிராண்டித்தனமானது. அதனை சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது. கட்டளையிடும் அதிகாரியால் ஆணை வழங்கப்படாமல் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி உள்ளனர். பொலிஸாரின் எல்லைமீறிய இந்தச் சம்பவத்துக்கு அரசு பரிகாரம் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட தொழிலாளியின் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்" என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-5)

## றோயல் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 18

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் றோயலின் நட்சத்திர வீரர் எடிசன் முதல் கோலைப் பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் ஒரேகோலுமாக அமைந்தது.

இரண்டாம் பாதியின் 44ஆவது நிமிடத்தில் றோயல் அணி கஜகோபன் மூலமும், 51ஆவது நிமிடத்தில் கபில் மூலமும் 57ஆவது நிமிடத்தில் எடிசன் மூலமும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)




## கல்விளான் அ.த.க. வென்றது தங்கம்

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான திறந்த வயது பிரிவினருக்கான ஆண்களுக்கான ஊன்றுகோல் நடையில் முல்லைத்தீவு கல்விளான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த து.கஜரூபன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. முல்லைத்தீவு கல்விளான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த து.கஜரூபன் தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த இ.கஜன் வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த சு.ரஜீவன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 18



கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரொன்று நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தத் தொடரில் கலந்துகொள்ள விரும்பும் தென்மராட்சிக் கழகங்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ...ற்பாட்டாளர்கள் ...வித்தன

## ஆவரங்கால் மத்தி. புத்தூர் கலைமதி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 18

அளவெட்டி மத்தியின் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இந்த ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:20, 25:12 என ஆவரங்கால் மத்தி கைப்பற்ற மூன்றாவது செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வளர்மதி கைப்பற்றியது. நான்காவது செற்றை 25:23 புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கி 3:1 என்ற செற் கணக்கில் வென்று இறுதிக்குச் சென்றது. ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் நாயன்மார்கட்டு பாரதி வித்தியாலயமும் மோதின. முதல் மூன்று செற்களையும் முறையே 25:17, 25:22, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம். (ம-108)



# பதக்கங்களைக் குவித்தது கைதடி நவீல்ட் பாடசாலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான தடகளத் தொடரில் 16 வயதுக்குட்பட்ட ஆண் களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் கைதடி நவில்ட் பாடசாலைக்கு அத்தனை பதக்கங்களும் கிடைத்தன.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் கைதடி நவில்ட் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ச.சசிகரன் தங்கப் பதக்கத்தையும், இ.மதுலன் வெள்ளிப் பதக்கத்தையும், மு.குருபரன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



வடக்கு மாகாண கல்வித் திணைணக்களத்தினால் நடத்தப்படும் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இருபாலாருக்குமான சக்கர நாற்காலி ஓட்டமும் நேற்று நடைபெற்றது. (ம-23)

## முஸ்லிம் ம.வித்தி வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான 14 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பெரிய பந்தெறிதலில், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.பர்சாத் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.தனுசன் வெள்ளிப் பதக்கத்தையும் வட்டு இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த இ.வினுஜன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)




## சென். யூட் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை18

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு சென். யூட் அணி கிண்ணம் வென்றது.

சென். அன்ரனீஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும், முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். யூட் அணி சம்பியனானது. (ம-108)


மத்திய கல்லூரி அணி


சென். ஜோன்ஸ் அணி

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதா[illegible] ...ன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து செ[illegible] கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-422)

# கனவிலும் எண்ணவில்லை; பெடரர் உருக்கம்

"விம்பிள்டன் பகிரங்கக் கிண்ணத்தை எட்டுத்தடவைகள் கைப்பற்றுவேன் என்று கனவிலும் எண்ணவில்லை" இவ்வாறு தெரிவித்தார் சுவிட்சர்லாந்து வீரர் பெடரர்.

நடப்பு வருடத்துக்கான விம்பிள்டன் தொடர் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. ஆண்கள் பிரிவில் பெடரர் சம்பியனானார். இதையடுத்து கருத்துப் பகிர்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"நான் எட்டாதுவது முறையாக விம்பிள்டன் பட்டம் வெல்வேன் என்று கனவிலும் எண்ணவில்லை. இப்படி சாதனை படைக்க எந்த குறிக்கோளையும் கொண்டிருக்கவில்லை. நான் ரென்னிஸில் பல துயரமான தருணங்களைக் கடந்து வந்திருக்கிறேன். அப்பொதெல்லாம் நான் மீண்டும் சிறப்பாக விளையாடுவேன் என்று எனக்குத் தெரியும். ஆனால் இந்த அளவுக்கு என எண்ணவில்லை. விம்பிள்டன் பட்டத்தைத் தக்க வைத்து கொள்ள அடுத்த வருடமும் வருவேன் என்ற நம்பிக்கை உள்ளது." - என்றார்.

இறுதி ஆட்டத்தில் ஏற்பட்ட தோல்வியின் விரக்தியில் குரோசிய வீரர் சிலிச் மைதானத்திலே கண் கலங்கினார். அதனை கண்ட பெடரர், "இது மோசமான தருணம்தான். ஆனால் நீங்கள் கடுமையாக போராடினீர்கள். நீங்கள் கதாநாயகன்தான். நீங்கள் பங்கேற்ற ஆட்டங்கள் அனைத்திலும் சிறப்பாக விளையாடியுள்ளீர்கள் அதை நினைத்துப் பெருமை கொள்ள வேண்டும். உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்" என்றார். (ம)



# யுனைற்ரெட்டுக்கு ரொனால்டோ சாத்தியமல்ல

மன்செஸ்டர் யுனைற்ரெட் அணிக்கு, ரொனால்டோவை ஒப்பந்தம் செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை என, அந்த அணியின் முகாமையாளர் ஜோஸ் மொரின்கோ தெரிவித்தார்.

போர்த்துக்கல் அணியின் தலைவரான ரொனால்டோ, தற்போது ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடி வருகிறார். ரியல் மட்ரிட்டில் இருந்து அவர் யுனைற்ரெட்டுக்கு ஒப்பந்தம் செய்யப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் மொரின்கோ அதை மறுத்துள்ளார். (ம)

# இலங்கையா? சிம்பாப்வேயா?

## இந்தப்பக்கம் குசல் மெண்டிஸ் அந்தப்பக்கம் கிரேம் கிரீமர்



இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறும் என்று கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் நம்பிக்கையாக துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸும் சிம்பாப்வேயின் நம்பிக்கையாக சுழல்பந்துவீச்சாளர் கிரீமரும் உள்ளனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 356 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எர்வின் 160 ஓட்டங்களையும், வோலர் 36 ஓட்டங்களையும், ரசா 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கேரத் 5 இலக்குகளையும், குமார, குணரத்ன இருவரும் தலா 2 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 346 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. தரங்க 71 ஓட்டங்களையும், சந்திமல் 55 ஓட்டங்களையும், குணரத்ன 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரீமர் 5 இலக்குகளையும், வில்லியம்ஸ் 2 இலக்குகளையும், திரிபானோ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

10 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி 23 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்து தவித்தது. எனினும் ரசா, மூர், வோலர் மூவரும் சிறப்பாகச் செயற்பட்டு சிம்பாப்வேயைத் தூக்கி நிறுத்தினர். ரசா 97 ஓட்டங்களுடனும், வோலர் 57 ஓட்டங்களுடனும் நான்காம் நாளான நேற்றுக் களமிறங்கினர். சதம் கடந்தார் ரசா. 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வோலர். 127 ஓட்டங்களுடன் ரசா ஆட்டமிழக்க 377 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது சிம்பாப்வே.

பந்துவீச்சில் கேரத் 6 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும், குமார ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் 10 ஓட்டங்களால் சிம்பாப்வே முன்னிலை வகித்ததால் இலங்கை அணிக்கு 388 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நேற்றைய நாள் முடிவில் இலங்கை 3 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. குசல் மெண்டிஸ் 60 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்றைய இறுதிநாளில் இலங்கை அணி வெற்றிபெற வேண்டுமாயின் இன்னும் மேலதிகமாக 218 ஓட்டங்களையும், சிம்பாப்வே வெற்றிபெற வேண்டுமாயின் 7 இலக்குகளையும் பெற வேண்டும். சிம்பாப்வேயின் நம்பிக்கையாக கிரீமர் உள்ளார். முதல் இன்னிங்ஸில் இலங்கையின் 5 இலக்குகளைக் கைப்பற்றியவர் அவரே. அதேநேரம் இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையில் மத்தியூஸ், குணரத்ன, டிக்வெல்ல உள்ளிட்ட வீரர்கள் எஞ்சியிருந்தாலும் குசல் மெண்டிஸ் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறார். 70.58 என்ற சராசரியில் அவர் 60 ஓட்டங்களை இதுவரை பெற்றுள்ளார் என்பதால் இலங்கையைக் காப்பாற்றக்கூடிய நபராக அவர் அடையாளமிடப்பட்டுள்ளார். (ம)

இன்றைய இறுதிநாளில் இலங்கை அணி வெற்றிபெற வேண்டுமாயின் இன்னும் மேலதிகமாக 218 ஓட்டங்களையும், சிம்பாப்வே வெற்றி பெற வேண்டுமாயின் 7 இலக்குகளையும் கைப்பற்ற வேண்டும். சிம்பாப்வேயின் நம்பிக்கையாக கிரீமர் உள்ளார். முதல் இன்னிங்ஸில் இலங்கையின் 5 இலக்குகளைக் கைப்பற்றியவர் அவரே. அதேநேரம் இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையில் மத்தியூஸ், குணரத்ன, டிக்வெல்ல உள்ளிட்ட வீரர்கள் எஞ்சியிருந்தாலும் குசல் மெண்டிஸ் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறார். 70.58 என்ற சராசரியில் அவர் 60 ஓட்டங்களை இதுவரை பெற்றுள்ளார் என்பதால் இலங்கையைக் காப்பாற்றக்கூடிய நபராக அவர் அடையாளமிடப்பட்டுள்ளார்.

# வில்லியம்ஸ் சகோதரிகள் குறித்து முகுருசா பெருமிதம்

விம்பிள்டன் கிண்ணத்தைக் கைப்பற்றியவரான முகுருசா, வில்லியம்ஸ் சகோதரிகளான செரீனா மற்றும் வீனஸ் இருவர் குறித்தும் பெருமிதமான கருத்துகளைப் பதிவு செய்தார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தி முகுருசா சம்பியனானார். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே வில்லியம்ஸ் சகோதரிகள் குறித்து முகுருசா பெருமிதமாகத் தெரிவித்தார்.

"கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற இறுதியாட்டத்தில் செரீனா வில்லியம்ஸிடம் விம்பிள்டன் கிண்ணத்தைப் பறிகொடுத்தேன். அப்போது அவர், விரைவில் நீங்கள் பெரியளவில் சாதிப்பீர்கள் என்று தெரிவித்தார். இவ்வாறானவர்களின் ஊக்கமும் என்னை விம்பிள்டனில் சம்பியனாக்கியுள்ளது. வீனஸ் வில்லியம்ஸைப் பார்த்தே நான் ரென்னிஸ் விளையாடக் கற்றுக்கொண்டேன். இன்று (கடந்த சனிக்கிழமை) வீனஸை வென்றமை திருப்தி தருகிறது" என முகுருசா மேலும் தெரிவித்தார். (ம)



# கமில்டன் சம்பியனானார்

உலக கார்ப் பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 10ஆவது சுற்றில் கமில்டன் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர் ஒட்டுமொத்தமாக 176 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்துக்கு வந்தார்.

நடப்பு வருடத்துக்கான உலக கார்ப் பந்தயத் தொடர் மொத்தம் 20 சுற்றுக்களாக நடத்தப்பட்டு வருகிறது. இதன் 10ஆவது சுற்று இங்கிலாந்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சொந்த மண்ணில் சவாலை எதிர்கொண்ட கமில்டன் ஒரு மணித்தியாலம், 21 நிமிடங்கள், 27 செக்கன்களில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார். பின்லாந்து வீரர் வால்டெரி போத்தாஸ் இரண்டாவதாக வந்தார். ஜேர்மனிய வீரர் வெட்டல் மூன்றாம் இடத்தைத் தனதாக்கினார். இதுவரை நடந்துள்ள 10 சுற்றுகள் முடிவில் வெட்டல் 177 புள்ளிகளுடன் முதலிடத்திலும், கமில்டன் 176 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், போத்தாஸ் 154 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (ம)



# தென்னாபிரிக்கா பதிலடி

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மிகப்பெரிய வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது தென்னாபிரிக்க அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 335 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அம்லா 78 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 68 ஓட்டங்களையும், பிளன்டர் 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அண்டர்சன் 5 இலக்குகளையும், புரோட் 3 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 205 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரூட் 78 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மகாராஜ், மொறிஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும், மோர்கல், பிளன்டர் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

130 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 9 இலக்குகளை இழந்து 343 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அம்லா 87 ஓட்டங்களையும், எல்கர் 80 ஓட்டங்களையும், பிளாசிஸ் 63 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொயின் அலி 4 இலக்குகளையும், அன்டர்சன், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

474 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து அணி 133 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 340 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பதிவுசெய்தது தென்னாபிரிக்கா.

நான்கு ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியுடன் உள்ளன. (ம)

**PSP Rent a Car**
Premio, Axio, Nissan Alto, Indica, Dawoo கார்கள் மாத, கிழமை, நாள் அடிப்படையில் வாடகைக்குண்டு. **077 377 7502**

**வீடு வாடகைக்கு**
யாழ். நகரின் மத்தியில் இந்தியதுணைத் தூதரகம் மற்றும் பொஸ்கோ பாடசாலை .அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், புகையிரத நிலையம் என்பனவற்றுக்கு அருகில் ஐந்து அறைகள் மற்றும் இணைந்த குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
**077 814 4337**

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**af பிரெஞ்சு மொழி**

> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
> அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
**021 222 8093** 61.கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2017**
**உயர்தர மாணவர்களுக்கான**
**பௌதிகவியல் கருத்தரங்கு**
எதிர்பார்க்கை வினாத்தாள்களின் விளக்கமும்,
இறுதிப் பரீட்சைக்கான தயார்ப்படுத்தலும்.
இடம் :- குமாரசுவாமி மண்டபம்
காலம் :- 19.07.2017 முற்பகல் 11.30
(அனுமதி அட்டை வழங்கலின் பின்)
கருத்தரங்கு வழங்குநர் - ஆ.யேனுகானந்
பொறியியல் பீடம்,
மொறட்டுவ பல்கலைக்கழகம்.
பழைய மாணவன்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
**076 546 3054**

# மெவதர் - மக்கிரேகர் முற்றுகிறது மோதல்




உலக குத்துச்சண்டை ஜாம்பவானாக உள்ள அமெரிக்காவின் புளொய்ட் மெவதர், அயர்லாந்து வீரர் மக்கிரேகர் அடுத்த மாதம் 26ஆம் திகதி மோதவுள்ள நிலையில் அவர்கள் இருவருக்கும் தற்போது வார்த்தை மோதல்கள் உச்சக்கட்டமாக நடைபெற்று வருகின்றன.

உலகின் பணக்கார வீரராக மெவதர் உள்ளார். குத்துச்சண்டை உலகின் ஜாம்பவானும் அவரே. மெவதரை வீழ்த்தக் கூடியவராக பிலிப்பைன்ஸின் மேனி பக்கியோ கடந்த வருடம் அடையாளம் காணப்பட்டார். இதனால் கடந்த வருடத்தின் மத்திய பகுதியில் மெவதர் பக்கியோ இடையில் மோதல் நடைபெற்றது. இதில் மெவதர் வெற்றிபெற்றார். இதையடுத்து தான் களமிறங்கிய அத்தனை போட்டிகளிலும் வெற்றிபெற்று எவராலும் வெல்ல முடியாத வீரராக அவர் விடைபெற்றுச் சென்றார்.

மெவதரின் ஓய்வின் பின்னர் பக்கியோ உலக ஜாம்பவானாக அடையாளம் காணப்பட்டார். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நடைபெற்ற மோதலில் பக்கியோவை வீழ்த்தினார் அயர்லாந்து வீரர் மக்கிரேகர். இதனால் மெவதரை நிச்சயம் மக்கிரேகர் வீழ்த்துவார் என்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மக்கிரேகரும் சவாலுக்குத் தயார் என்று தெரிவித்ததை அடுத்து ஓய்வு முடிவை மீளப்பெற்று மீண்டும் களமிறங்குகிறார் மெவதர்.

இந்த மோதல் தொடர்பான செய்தியாளர் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. அதில் தனது வழக்கமான பாணியில் மெவதர் சில செயற்பாடுகளை அரங்கேற்றியிருந்தார். வழக்கமாக தன்னை எதிர்த்து மோதும் வீரர்களின் முகத்தில் நூற்றுக்கணக்கான டொலர்களை எறிவதை மெவதர் வழக்கமாகக் கொண்டிருந்தார். மக்கிரேகரிடத்திலும் அவர் அதையே செய்துள்ளார். (ம)



## மேற்குவங்க மாநிலத்தில் கங்குலிக்கு சிலை திறப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலிக்கு மேற்குவங்க மாநிலம் பலூர்காட்டில் கடந்த சனிக்கிழமை வெண்கலச் சிலை திறக்கப்பட்டுள்ளது. எட்டு அடி உயரம் கொண்டதாக இந்தச் சிலை அமைந்துள்ளது. 2003ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக முதல் டெஸ்ட்சதம் அடித்தபோது கங்குலி தனது துடுப்பு மட்டையை உயர்த்தியபடி நடந்துவந்தார். இதை உணர்த்தும் வகையில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. சிலையை கங்குலியே திறந்து வைத்தார். (ம)

**உயர்தர கருத்தரங்கு**
ஊடகவியல்- (A/L 2017)
ஆசிரியர் - என்.கஜிதரன்
B.A (Hons) Spl in Media studies
M.A (Mass Communicution & Journalism)
ஜூலை 19,20,21 (புதன், வியாழன், வெள்ளி)
நேரம் :- 1.30 PM (நாளை ஆரம்பம்)
தொடர்புகளுக்கு :- 075 916 0431,
077 395 6158
**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கட்டாருக்கு எதிர்ப்பலை

கட்டாருடன் தூதரக உறவுகளை முறித்துக் கொண்ட நாடுகளில் 6 நாடுகள், 2022ஆம் ஆண்டு கட்டாரில் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்துக்கான உரிமத்தை அந்த நாட்டிலிருந்து பறிக்க வேண்டுமெனவும், இல்லாவிடின் அந்த உலகக் கிண்ணத்தைப் புறக்கணிக்கப் போவதாகவும் எச்சரித்துள்ளன.




சவூதி அரேபியா, ஏமன், மௌரித்தானியா, ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன், எகிப்து ஆகியன, பன்னாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனத்துக்கு (பிபா) இது குறித்து எழுதியுள்ளன. இந்தத் தகவலை, பிபாவின் தலைவர் ஜியானி இன்பான்டினோ உறுதிப்படுத்தினார். கட்டாரை, பயங்கரவாதத்தின் தளம் எனவும் கோட்டை எனவும் வர்ணித்துள்ள இந்த நாடுகள், இரசிகர்களினதும் வீரர்களினதும் பாதுகாப்பு, ஆபத்தில் காணப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளன.

சவூதி அரேபியா, 1994ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு வரை 4 உலகக் கிண்ணங்களுக்குத் தகுதிபெற்றதோடு, 2018ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணத்துக்குத் தகுதிபெறும் வாய்ப்பைக் கொண்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சிய அணிக்கு குறைந்த வாய்ப்புகள் காணப்படுகின்றன. எகிப்து அணி 1990ஆம் ஆண்டின் பின்னர் உலகக் கிண்ணத்துக்குத் தகுதிபெறாத போதிலும் 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்குத் தகுதிபெறும் வாய்ப்பைக் கொண்டுள்ளது. ஏனைய 3 நாடுகளும், உலகக் கிண்ணத்துக்கு இதுவரை தகுதிபெறாத நாடுகளாகக் காணப்படுகின்றன.

ஜூன் மாதத்தில் எழுந்த இந்த நெருக்கடியைத் தொடர்ந்து கட்டாருடன் தொடர்ந்து தொடர்பாடலைப் பேணி வருகிறோம் என்று பிபா குறிப்பிட்டுள்ளது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.